திராவிடன்

ஆசிரியர்: என்.வி.நடராசன்

மாலை : 8 11-2-55 வெள்ளி 14 பக்கம் விலை 3 அணு மலர் : 27

போளூர் சுப்ரமண்யம்

அவர்களின் அன்பழைப்பு

துர்கா—வாசுதேவன்

பேரன்புடையீர் எனது இரண்டாவது மகள் திருமதி எஸ். துர்காவுக்கும், சென்னை திரு. கே. வாசுதேவன் அவர்கட்கும் 18—2—55 வெள்ளி, காலை 9-மணிக்கு சென்னை வைத்தியநாத முதலி தெரு 35-வது எண்ணுள்ள இல்லத்தில் அறிஞர் அண்ணு அவர்களின் தலைமையில் திருமணம் நடைபெறும். நண்பர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர். அனைவரும் வந்திருந்து விழாவினைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்.

அன்பன்,
போளூர். சுப்ரமண்யன்.

சுப்ரமண்யம் தேசத் துரோகி ஆகிருர்!

சிற்றூர் ஒன்றில் வாழ்க்கை நடத்தி வரும் சிறப்புக் குடும்பம் ஒன்றிருந்தது. அவர்களைச் சுற்றி பலர் வாழ்ந்து வந்திருப்பினும் அந்த ஊரிலே இந்த குடும்பத்திற்குத்தான்—வீட்டாருக்குத்தான் தனிப்பெருமை இருந்துவந்தது. அந்தக் குடும்பத்திலே வாழ்க்கைப்பட வந்தாள் ஒரு உத்தமி.

வாழ்க்கையின் சங்கிலியில் பூட்டப்பட்டு துணைவனின் இல்லம் வந்து சேர்ந்த ஒரு திங்கள்வரை மாமிக்குத் தன் மருமகள் மீது அபாரமான அன்பு! ஒண்ணே ஒன்னு என் கண்ணே கண்ணு—அது இந்தப் பெண்ணே பெண்ணு எனப் பெருமை பேசி வந்தாள் அந்த குடும்பத்துத் தலைவியான மாமியார்! நாட்கள் நகரநகர வரவர மாமி......கதைக்கு இலக்காளுள் இந்த குடும்பத்தின் மாமி! மருமகள் எதைச் சொன்னலும் அது வேம்பாகக் காட்சியளித்தது அந்த மூதாட்டிக்கு! மாமி மோரில் உப்பு கரிக்கிறதே அப்படியே சாப்பிடுகிறீர்களே என்று பரிவுடன் கூறுவாள் மருமகள். உடனே அந்தம்மாள் இல்லையில்லை அது இனிக்கிறது. உன் வாய்தான் உப்பு கரித்திருக்கும் என்று முகம் சுளிப்பாள்! ஏட்டிக்குப் போட்டியாக எதையும் பேசுவாள் மாமி. மருமகள் நல்லது கூறினலும் அதை ஏற்றுக் கொள்வது இழுக்கு என்றும், தனது உத்திரவின்றி மருமகள் எச்செயலிலும் ஈடுபடுதல் கூடாதென்பதும் இந்த மாமியாரின் கடுமையான உத்தரவு!

ஒருநாள் இந்த வீட்டைத் தேடி பிச்சைக்காரன் ஒருவன் வந்தான், தான் நான்கு நாட்களாகச் சாப்பிடவில்லை யென்றும், உடல் நடுக்கமெடுக்கிறதென்றும் பழைய சோறு இருப்பினும் சிறிது அளித்தால் போதுமென்றும் கெஞ்சிக் கேட்டான். மருமகளுக்கு அந்த வயது முதிர்ந்த பிச்சைக்காரனின் நிலைகண்டு பரிதாபம் ஏற்பட்டது. உதவி செய்யஎண்ணினுள், எனினும் மாமியின் உத்திரவைத் தட்ட முடியுமா! எனவே, எவ்வித உதவியும் செய்யாமல் பிச்சைக்காரனை அனுப்பி விட்டாள்!

அவன் மிகுந்த மனவேதனையுடன் வீட்டைவிட்டு வெளியே சென்று கொண்டிருந்தான். இந்நிலையில் கடை வீதி சென்றிருந்த மாமியார் அந்தப் பிச்சைக்காரன் தன் வீட்டிலிருந்து வெளிவருவதைக் கண்டதும், அவனை நிறுத்தி அந்த வீட்டில் உனக்கு என்ன கொடுத்தார்கள் என்று வினவினுள்!

அந்த வயோதிகன்—தாயே, நான் பழைய சோறு இருந்தாலும் சிறிது கொடுங்கள் என்றேன். அவ் வீட்டு அம்மா முடியாது போஎன்று கூறிவிட்டார்கள் என முணுமுணுத்தான். உடனே மாமி, அப்படியா சொன்னுள் அவள்சரிவா என்னுடன் என்று கூறிக் கொண்டே வீரநடை போட்டாள் சிறப்புக் குடும்பத்தின் மாமி! பிச்சைக்கார வயோதிகனே, புண்ணியவதி என்ருல் இந்த அம்மாளைத்தான் கூறவேண்டும், இப்போதே ஓரளவு பசி தீர்ந்து விட்டது! என்ற ஆறுதலுடன் பின்சென்ருன்.

வீட்டுக்கு வந்த மாமியார், தன் மருமகளைக் கோபமாக அழைத்து—இந்தப் பிச்சைக்காரனுக்கு நீ என்ன சொன்னுய் என்று அதட்டலுடன் கேட்டாள்; ஒன்றும் உதவி செய்வதற்கில்லை யென்று கூறிவிட்டேன் மாமி! என்று சொன்னுள் மருமகள். அப்படி தெரிவிக்கலாமா, உனக்கு என்ன அவ்வளவு திமிர்! என்று ஆர்ப்பாட்டம் செய்தாள் மாமி! இதைக்கண்ட வயோதிகப் பிச்சைக்காரன், ஊருக்கு ஒரு உத்தமி இப்படி யிருப்பதால்தான் ஓரளவாகிலும் மழை பெய்கிறது; என்று மாமியாரை மனதுக்குள் வாழ்த்தினுன்.

உடனே மாமியார் அந்தக் கிழவரின் பக்கம் திரும்பி அய்யா பிச்சைக்காரரே இதோ நான் சொல்லுகிறேன் கேளும் உமக்கு அளிப்பதற்கு ஒன்றும் கிடையாது வந்த வழியைப் பார்த்துத் திரும்பிப்போம் மரியாதையாக என்று கடுகடுத்து கூறினுள்! இதைக் கேட்ட அந்தக் கிழவர் திடுக்கிட்டு விழிவிழி என்று திக்குமுக்காடி தெருவழியே சென்ருராம்! பிச்சை கேட்பவருக்கு இல்லை யென்று சொல்வதற்குக்கூட மாமிதான் அதிகாரம் பெற்றவள் அந்தக் குடும்பத்தில். அதையே மருமகள் சொன்னல் தவறு! அதற்கு வேறு வியாக்கியானங்கள்!

*

இந்த விசித்திர நிலையில் தான் திராவிட இயக்கம் தென்னுட்டின் பொதுப் பணியிலே ஆதிக்கம் பெற்றுள்ளவர்களின் கொடுமைக்கும், அவர்களின் தயவுக்கும் எதிர்நோக்கி நிற்போரின் நையாண்டித் தனத்துக்கும் நிந்தனைக்கும் ஆளாகி தனது கொள்கையினை வளர்த்து வருகிறது.

கடவுள் வழிபாட்டில், சமூகத்துறையில் மலிந்துள்ள கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப்போக வேண்டுமென்று கூறிய ராமலிங்கரைப் போற்றும் 'திருவாய்கள்'—அந்தக் கருத்தையே எடுத்துக்கூறி அதைச்செயல் முறையில் கொண்டு வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தினரை வசை புராணம் பாடும்! ராமலிங்கரைப் போற்றுபவர்களே இந்நிலை யென்ருல் ராமபக்தர்கள், சிவனடியார்கள் என்று தங்களைக்கூறிக்கொள்பவர்களின் போக்கினைக் கேட்கவும் வேண்டுமோ?

அதுபோலவேதான் அரசியல் துறையில் திராவிடமுன்னேற்றகழகம் கூறும் கருத்தினை காங்கிரஸ்தலைவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள், அதுமட்டுமல்ல வடநாடு—தென்னுடு என்று கூப்பாடு போடுகிருர்களே நாசக்காரர்கள், தேசத் துரோகிகள் என்றும் நிந்திப்பார்கள்! எவ்வளவுதான் விளக்கமும் நடைமுறையிலுள்ள ஆதாரங்களையும் எடுத்துக் காட்டினுலும் தேசியத் தலைவர்கள் தங்கள் போக்கினை மாற்றிக் கொள்ள முனைவதில்லை ஆனுல் தி. மு. கழகம் கூறும் கொள்கையினை அதைவிடத் தீவிரமாக தேசியத் தலைவர்கள் கூறும் சமயங்களில் நாம் சுட்டிக் காட்டினுல் மேலே குறிப்பிட்ட மாமியார் போல ஜபர்தஸ்தில் ஈடுபடுவார்களேயன்றி அவர்கள் பெற்ற தெளிவுக்கேற்ப செயலாற்றத் துணிவதில்லை!

இதுபோன்ற இரண்டொரு சம்பவங்களை—அதாவது தி. மு. கழகம் கூறும் கருத்தினை—தென்னுட்டுத் தேசியத் தலைவர்கள் ஆவடி மாநாட்டிலே (தங்களது தற்காலப் போக்கினையும்மறந்து) திட்டவட்டமாகக் கூறியிருக்கிருர்கள். இதற்காக நாம் கித்தாப்புக் கொள்வதாகக் கருதிவிடக் கூடாது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாட்டுப்பிரிவினைக் கொள்கை எவ்வளவு நேர்மையானது —திராவிடத்தின் தன்மான வாழ்வுக்கு

11-ம் பக்கம்

"நேரு பண்டிதரின் நாட்டியம்!"

ஆவடி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 'சோஷலிசம் போன்ற' பொருளாதாரக் கொள்கை என்ற தீர்மானத்தைக் கண்டு முதலாளித்துவம் ரசிக்கின்றது.



அன்புள்ள சேகர்,

போகின்ற பாதை எதுவென்பதில் குழப்பமிருந்தாலும், போய்ச்சேர வேண்டிய இடம் எதுவென்பதில் நிச்சயமானதொரு குறிக்கோளிருக்க வேண்டும். நம்மையொத்த இளைஞர்களில் பலர், இந்த இடத்தில்தான் தவறு செய்து விடுகின்றனர். வழிநடக்கும் பாதை கரடு முரடாக இருக்கக்கூடாதென்பதில் கவனஞ்செலுத்திக் கொண்டே தங்களுடைய லட்சியம் என்னவென்பதை மறந்து விடுகிறார்கள்; அல்லது 'வழி'யின் வனப்பில் மயங்கி இம்மியும் நகராமல் துண்டை விரித்து தூங்க ஆரம்பித்து விடுகிறார்கள்! தூங்கிவிட்டவர்களை துயிலெழ வைத்து நடத்திப் போவதற்கு வேறொரு பாதையை தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்—அதற்குள் லட்சியம் என்பது எட்டாத தூரத்தில், அல்லது

ஏற்றுக்கோ இப்பெரிய தலைமைப்பட்டம்?

அடிவான எல்லைக்குள் சென்று மறைந்து விடுகின்றது!

நம்மை யொத்தோர் 'சங்கதி' தான் இப்படி ஆகிவிட்டிருந்தாலும், நம்மை முன்மாதிரியாகக் கொண்டு வளர்ந்து வரும் எதிர்கால சந்ததியாவது 'ஒழுங்கும் ஒழுக்கமும்' வாய்ந்த வாழ்க்கைக்குத் தயார்படுத்திக் கொள்ள வேண்டாமா? அவர்களின் நலனைக் கோரியாவது நம்முடைய 'கோணல் மாணல்'களை கொஞ்சம் சமன் செய்து கொள்ளவேண்டாமா?

சேகர், இந்தத் தலைமுறையில் நாம் வாழக் 'கொடுத்து வைத்த'தைப் பற்றிப் பெருமை யடித்துக் கொள்ள நமக்கு மகத்தான காரணங்களுண்டு! நாம் அன்றாடம் சந்தித்துவரும் ஆராய்ச்சி முடிவுகளை அணுவளவும் விட்டுக் கொடுக்காமல் பாத்தியதை கொண்டாட, முழுதும் உரிமையுண்டு......ஆனால், இத்தகைய மாறுதலுக்கு நம்மைத் தயார்படுத்தியவர்கள் நமக்கு முன்பிருந்த தலைமுறையினர் என்பதை மறந்துவிடக்கூடாது. அவர்கள் அடிமைகளாக—அறிவற்றவர்களாக இருந்திருக்கலாம்; புதுமையான எதையும் கண்டதும் சீறிவிழும் போக்கு படைத்தவர்களாக வாழ்ந்திருக்கலாம்: அந்தக் காரணங் களுக்காகவே, நம்முடைய சிறகுகளை ஒடித்து வைத்து பறக்காமல் இருக்கும்படிச் செய்ய எத்தகைய சதித்திட்டமும் தீட்டியவர்களல்ல...

பழமையில்தான் கெடுதல் இருக்கிறது: பழைய மனிதர்கள் நல்லவர்கள்—பரிதாபத்துக் குரியவர்கள்.

அவர்களும் — அந்தப் பழய மனிதர்களும் புதிய எண்ணங்களைத்தான் எதிர்த்தனர்—வெறுத்தனர். புதிய மனிதனுக்கு எத்தகைய பூட்டுச் சாவிகளையும் செய்து வைத்துச் சாகவில்லை.

நாம் இப்போது அவர்களைச் சபிக்கிறோம்; அதுதான் நாகரிகப் 'பாணி' எனவும் கருதுகிறோம்... ஆனால்,

அவர்கள் செய்யாத மாபெருந் துரோகத்தை நமது சந்ததிகளுக்குச் செய்வதைப்பற்றி கொஞ்சங்கூட வெட்கப் படாமல், உதை பந்தாட்ட மைதானத்தில்பந்தினை உருட்டி விளையாடிக் கொண்டிருக்கிறோம்; ஒலிம்பிக் பந்தயத்துக்கு யாரைத் தேர்ந்தெடுத்து அனுப்புவது என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

இப்படியெல்லாம் எழுதுவதைப் பார்த்து ஏதோ புதிர் போட்டுக் கொண்டு போவதாக நினைக்காதே. உண்மையிலேயே நெஞ்சங் கொதித்து எழுதுகிறேன்.

ஒவ்வொரு நாளிலும், காலையும் மாலையும் பள்ளிக்கூடத்தின் வாயிலில் சாரிசாரியாக ஊர்ந்து செல்லும் சிறுவர்களும்—சிறுமிகளும் என்மனதில் ஓயாத குழப்பங்களை உற்பத்தி செய்துவிடுகிறார்கள். குறிப்பாக இந்த ஆண்டு குடியரசு நாளன்று சென்னையில் செல்லுமிடமெல்லாம் மாணவ—மாணவிகளின் அணிவகுப்பு நடந்தது. ஒவ்வொரு பாடசாலையின் பட்டாளமும்' என்னை நோக்கி சவாலுக்கழைப்பதாகவே நான் நினைத்தேன். சாதாரண முனிசிபல் பள்ளியிலிருந்து புறப்பட்ட 'படை' யொன்றைப் பார்த்து நான் பிரமித்துப் போய்விட்டேன். ஆறு வயதிலிருந்து 12 வயது வரையிலுள்ள சிறுவர்களின் அணிவகுப்பில் குறைந்தது 500 பேருக்குமேல் இருப்பார்கள். அவர்கள் அனைவரையும் ஒரே பள்ளி பயிற்றுவிக்கிறது என்பது முக்கியமல்ல; அது சாதாரண முனிசிபல் பள்ளிக்கூடம் என்பதுதான் கவனிக்க வேண்டியது! பணங்கொடுத்து பயில முடியாதவர்கள் கல்விசாலை என்ற பேரால் நாலு சுவர்களை வைத்து கட்டப்பட்ட 'மந்தை மடக்கி' நிலையத்தில் நாள் தோறும் வந்து போகிறவர்கள்,

எதிர்கால வாழ்வுக்கு நாம் செய்வதென்ன?

கல்வியின் முக்கியத்துவம் அவ்வளவு தூரம் சமுதாயத்திலே வேறூன்றிவிட்டது!

மின்வேகத்தில் தயாராகிவரும் இந்தச் சிறுவர்களுக்கு எப்படித்தான் வாழ்வளிக்கப் போகிறார்களோ இன்றைய வாய்ப்பந்தல் வாதிகள்? படிக்கும் சிறுவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது கவலைக்குள்ளாகிவரும் எனக்கு சமீப சில மாதங்களாக கல்வி முறைப்பற்றி, நாடு நெடுகிலுமிருந்து வரும் கருத்துக் குவியல்களைப் பார்த்தால் கல்வி கற்கும் சிறுவர்களுக்கு வாழ்வளிக்காவிட்டாலும் கல்வி முறையையே குழிதோண்டி புதைக்காமலிருப்பதே பெரிய காரியம் என்று அரசாங்கம் நினைக்கிறது போலும்.

*

சேகர், இந்த ஆண்டின் ஒவ்வொரு கலாசாலைப் பட்டமளிப்பு விழாவிலும், அறிவுரையாற்றிய 'அநுபவமிக்கோரின்' பேச்சுக்களை நீ பத்திரிகையில் படித்திருக்கக் கூடும்!

அவர்களில் ஒருவர், கல்வித்துறை எப்படி மாறவேண்டும் என்று சொல்கிறார்; இன்னொருவர், அமுலில் இருக்கும் கல்வி முறையில் காணப்படும் குறைபாடுகளை கனல் தெறிக்கக் கண்டிக்கிறார். பிறிதொருவர், அரசாங்கத்தின் நிர்வாகம் சரியில்லையென 'குண்டு' போடுகிறார். இன்னொருவர், கற்றவர்களை சரிவர நடத்துவதெப்படி என்பதை அரசாங்கம் அறியவில்லை என்று சாடுகிறார்.

இவ்வளவுபேர் பேச்சுக்களையும் தனித்தனியாக ஆராய்ந்தால் எத்தனை 'ஈறும் பேனும்' கிடைக்கும் என்ற எண்ணிக்கை இப்போது அவசியமில்லாவிட்டாலும், சுதந்திரம் பெற்று ஏழு ஆண்டுகள் ஆகியும், சமுதாய ஒழுங்கை நிர்ணயிக்கும் கல்வி முறையில் அரசாங்கம் அதிகப்படியான கவலை எடுத்துக் கொள்ளவில்லை என்பதுமட்டும் தெளிவாகத் தெரிகிறது.

இந்தோசீனப் போரில் பேரம் பேசிக் காலங் கழிப்பதைவிட தறிகெட்டுப் போகவிருக்கும் உள்நாட்டுச் சமுதாய ஒழுங்கை நிலைநிறுத்தப் பார்ப்பது நம்முடைய ஆட்சிபீட தலைவர்களுக்கு அவசியமற்றதாகத் தெரியலாம்,

ஆனால் நாம் அப்படி யிருந்துவிட முடியாதல்லவா? ஆட்சிபீடத்திலே இன்றைக்கிருப்பர் நாளைக்கு இருந்த இடம் தெரியாமல் 'புள் முளைத்து' மறைந்துவிடும்.

சமுதாயம் வாழும்; நம்முடைய சந்ததிகள் நடமாடும்: நாம் இப்போது செய்து வைக்கும் செயல்கள் அத்தனையிலும் வருங்காலத்தின் 'தணிக்கை முத்திரை' பொறிக்கப்படும்.

ஆகாயத்தில் பறந்தோம் என்று பெருமையைக்காட்டிலும், "பெற்றெடுத்த மக்களை பிச்சைக்காரர்களாக்கிவிட்டு ஆடம்பரச் சோம்பேறிகளாகக் காலங் கழித்தனர், எங்கள் முன்னோர்" என்ற அவச்சொல் நமக்கு ஏற்படக்கூடாது.

கல்வி முறையில் உள்ள உண்மையான குறைபாடுகளும், பரிகாரமும் என்ன வென்பதைப் பற்றி என் அறிவுக்கு எட்டிய வரை உனக்கு அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

—மு. சண்முகம்

பூங்கொத்துகள்...தொடர்ச்சி...

றன...சரித்திர கற்பனைகளில் இந்த பழுது இல்லை...**விந்திய வீரனில்** தேங்குதலில்லாத நிறைவு பொங்கி வழியக் காண்கிறோம். அவருக்கே உரித்தான அடிப்படையில்—இயல்பான எழுத்தாற்றல் பயன்பட்டால் தமிழ் இலக்கியம் இன்னும் பொலிவுபெறும்.

எழுத்தாளனின் பெருமைக்கு அளவுகோல் அவன் எய்தும் புகழே தவிர, புத்தகங்களின் எண்ணிக்கையல்ல. வாய்ப்புள்ள எவரும் ஆயிரமாயிரமாக எழுதிக் குவித்துவிடலாம். ஆனால் எங்கோ, எட்டாத தொலைவில் ஒளிவிடும் அந்த பொற்காலம்... அதனை உரிமையாக்க பழுதில்லா இலக்கிய அறிவு மிகமிகத் தேவை.

'கொலைகாரி' கதையில் தென்பட்ட உண்மைத் தத்துவமும், ஜீவப்பொழிவும் அவரது பின்னைய நவீனங்களில் நிழலிடவில்லை. எழுதியவர் திரும்ப படிக்காத கதைகளோ என்று ஐயுறுமளவிற்கு எல்லா படைப்புகளும், ஒரே எண்ணங்களின் கருச்சிதைவுகளாக காட்சி யளித்தன. பொழுது போக்கிற்காக குறிப்பிட்ட சார்பினர் எழுதிக் குவிக்கும் கதைகளில் மக்கி மறைந்து கிடக்கும் இலக்கிய வளத்தைக்கூட ஆசைத்தம்பியின் கற்பனைகள் நமக்கு வழங்கவில்லை

அந்த எண்ணங்களில், காலம் புதிய மெருகை கூட்டுவிக்கட்டும். எதிர்காலம் நல்ல சிந்தையினரின் வாழ்த்துகளை அவருக்கு உரியதாக்குமாக.

ஆசைத்தம்பி சிறந்த கட்டுரையாளர். வேகப்புயலும், வீரச்செரிவும் மின்னும் எழுத்தாற்றல் பெற்றவர். அரசியல் உலகம் அவரால் பெற்ற நலன்கள் பல. அவரது சில சிறுகதைகள் வாழ்வின் மெய்மையான உயிரோவியங்கள் — கவர்ச்சியும் கருத்தழகும் பெற்ற பண்பு நிறை படைப்புகள்! அவை எழுத்தார்வம் கொண்ட இளம் பரம்பரையினர் பெற்ற புதியதோர் இலக்கிய விருந்து!

ஆசைத்தம்பி **வெறுங்கூடு** அல்ல—அவர் முள் நிரம்பிய—மணம்வீசும் ரோஜா மலர்! தமிழ் நில இலக்கிய வரலாற்றில் இவ்வித்தமே எழுதிச் செல்கிறது.

6. ஆசைத்தம்பி

●

திராவிடர் இயக்கம் புதிய மெருகு பெற்றபோது எழுத்தில் வல்ல இளம் பரம்பரையினர் பலர் தமிழகத்திற்கு அறிமுகமாயினர். இலக்கியத்தின் வசந்தம் கமழ்ந்த அந்த நாட்களில் வனப்பு ததும்பிய எழுத்துச் செல்வத்தோடு வந்த ஆசைத்தம்பி, இளையோரின் எண்ணங்களைக் கவர்ந்தார். புயல் வீசும் வேக நடை, வார்த்தெடுத்த அழகு சொற்கள், புதிய எண்ணங்களின் உயிரோட்டம் ஆகிய சிறப்பியல்புகள் அவருக்கு சொந்தமாயிருந்தன.

பலர் கையாண்டு தோல்விபெற்ற அடுக்குச் சொற்களை அழகாக அமைத்தெழுதி தனித்த பாணியை அவர் தமது உரிமையாக்கிக் கொண்டார். அந்த ஆர்வமும் திறனும் கருவிருந்த நாட்களை தமிழகம் தெரிந்து கொள்ளவில்லை. புதியதொரு இலட்சிய உள்ளத்தை, எழுத்தார்வத்தை நாடு கண்டதும்; வாழ்த்தி வரவேற்றது!

ஆசைத் தம்பியின் ஆரம்பகால எழுத்துக்கள் நிறைவுற்றிருந்தன. **'அன்பழகன் ஆட்சி'** கதையின் அடித்தளம் விசித்திரமா யிருந்தாலும் பெருங் கதையின் இயல்பும், பாத்திரங்களின் பண்பு நலனும், பாராட்டும் தன்மையினதாயிருந்தன. கதாசிரியர் எனும் நிலையில் ஆசைத்தம்பியும் புதியதொரு புகழை பெற்ருர். கற்பனை நெஞ்சின் அரும்புப்பருவ குறைபாடுகள் அங்கங்கே நிழலிட்டாலும் அந்த நவீனம் நல்ல படைப்பு என்பதற்கு அவர் கொண்ட நற்புகழே சான்று......

'காந்தியார் சாந்தியடைய' அரசியல் வையத்திலே புதிய புயலை உருவாக்கிய சின்னஞ் சிறு எழுத்தோவியம். ஆசைத்தம்பியின் நடைச் சிறப்பு இதில் முழுமை பெற்றிருந்தது. இலட்சியத்தின் எழிலும், எண்ணங்களின் சூருவளிப் பேச்சும் அதுவரையில்லாத வேகத்தை விளைத்திருந்தன. அரசியலாரின் அடக்குமுறையும், விசாரணை வரலாறும் ஆசிரியரின் இலக்கிய வாழ்விற்கு ஒளி விளக்குகளாயின. இதன் எதிரொலியென வெளிவந்த **'வழக்கு தீர்ப்பு'** ஏடு புதிய பாணியைக் கொண்டிருந்தது.

அரசியல் துறையில் ஆசைத் தம்பியின் எழுத்தோவியங்கள் நல்லதொரு சூழலை உருவாக்கப் பெரிதும் உதவின. **திராவிடர் கழகம் ஏன்? தனியரசு ஏன்?** போன்ற வெளியீடுகள் பழுதற்ற இயக்கப் படைப்புகள். ஆசைத்தம்பியின் புகழின் பெரும் பகுதிக்கு இவைகளே உரியவை.

தனி மனிதரின் இலட்சியங்களின் விமர்சனமான **'காமராசர்'** ஆசிரியரின் சிறப்புக்கு மெருகு தந்தது. ஆனல் எதிர்காலம் இத்தகு நல்ல கருத்தோவியங்களை ஆசைத்தம்பியிடம் உருவாக்கவில்லை.

சிறுகதைத் துறையில் இவரது சாதனை குறிப்பிடத்தக்கது. எதையுமே அளவறிந்து அழகுபட சித்தரிக்கும் ஆற்றல் சிறுகதைத் துறைக்கு புதிய நலன்களை கா்ணிக்கையாக்கிற்று. **'எச்சரிக்கை'** 'திருச்செந்தூர் முருகன்' **'அவள் வாழ்வு'** ஆகிய கதைகள் புதிய கற்பனை சித்திரங்கள்.

'கொலைகாரி' ஆசைத்தம்பியின் நல்ல பெருங்கதை. பாத்திரங்களே நிகழ்ச்சிகளைக் கூறும் பாணியில் அமைந்திருந்த இதன் கதையமைப்பில் அழகு நடை, வர்ணனைச் சிறப்பு, சம்பவக் கோவை ஆகியவை எழில் பெற்றிருந்தன.

பெருங்கதை எழுத தனியான கலை ஆர்வம் படைத்திருக்க வேண்டும். எண்ணற்ற நிகழ்ச்சிகள் சிறப்பின் தன்மையல்ல. கற்பனையின் 'அளப்பு'களும் வேண்டுமென்றே நீட்டி வளைத்த நிகழ்ச்சியும் வெற்றி தரும் முறைகளல்ல எண்ணத்தில் தெளிவும் எழுத்தில் தனிப்பண்பும் மிக மிகத் தேவை பெருங்கதை உருவாக.

நினைத்ததும் எழுதி 'முற்றுப்பெற்றது' என முடித்துவிடும் தன்மை படைத்த நவீ

னங்கள் தோல்வியின் சின்னங்களே தவிர புகழின் நிழலாட்டங்களல்ல. பெண்ணுள்ளத்தின் காதல் போராட்டமும், துப்பாக்கி வேட்டும் கொலைக் கூக்குரலும் நல்ல கதையின் இயல்புகளல்ல. 'எதையாவது எழுதுவோம்' எல்லாமே ஏற்றுக் கொள்ளப்படும் என்ற துணிந்த மனப்பண்பு இலக்கிய அரங்கில் எண்ணற்ற கோமாளிப் படைப்புகளை உலவ விட்டிருக்கிறது.

நாள் தோறும் எத்தனையோ பெருங் கதைகள் வெளியாகின்றன. 'மேனுமினுக்கிகளி'லிருந்து 'மூடு மந்திரம்' வரை ஆயிரமாயிரம் கற்பனை நெஞ்சங்களின் 'அவதாரக் குழந்தைகள்' சந்தையில் வண்ண ஜொலிப்போடு பவனி வருகின்றன. எல்லாவற்றிற்குமா புகழ் பின்னணி செய்கிறது? அவைகளில் பெரும்பான்மையும் அரைகுறை சிருஷ்டிகள்! சில அவசர தயாரிப்புகள்—இன்னும் சில 'தெருக்கோடி' வாசகர்களுக்காக உருவாக்கப்பட்ட 'கொக்கோக மாத்திரைகள்!' நிலை இது...வெறும் கதைப் புகளே அதிகம்...நல்ல நவீனங்களை கனவிலேதான் தரிசிக்க வேண்டும்!

பழைய பாதையில் புதிய தொரு—எழில் வீசும் திருப்பம் தெரிகிறது...தெளிவாக.

'ஆனந்த சிங்கின் அற்புதச் செயல்களும்' 'அழகாபுரியின் மர்மமும்' பெற்றிருந்த புகழை இன்னுளில் 'மலர்விழியும்' 'அத்திப் பூக்களும்' உரிமையாக்கியிருக்கின்றன. இந்த நிலை எய்த எண்ணற்ருேரின் சிந்தனை சிலவிடப்பட்டது.

பெருங்கதையின் சிறப்பு கதைப்பின்னலின் இழைகளில் வாழவில்லை; புகழ் தழுவிய எழுத்தாற்றலில்—புதுமையின் உயிரோட்டத்தில் நல்ல நவீனத்தின் பெருமை நிழலிடுகிறது. வந்து போன சொற்கோவையையும் அலுத்துச்சலித்த நிகழ்சியையும் திரும்பத் திரும்ப சித்தரிக்கும் எழுத்தாளன் கால மாறுதலில் தானுவே மறைந்து விடுவான்!

கொலைகாரிக்குப் பின் ஆசைத்தம்பி எழுதிய நவீனங்களில் உணர்ச்சியின் உயிரோட்டமில்லை. புதுமை எண்ணத்திற்கு 'வழக்கமில்லாத' தற்கொலையும், விசித்திரமான பிறன்மனை விழைவும் இவரது சிறு நாவல்களில் நிறைந்திருக்கின்றன. மூன்ருவது ரக வாசகர்களை திருப்தி செய்யும் இது போன்ற 'இருட்டுலக படைப்புகளை' வளரும் அறிவுலகம் பாராட்டுவதற்கில்லை!

நிறைய எழுதுவதால் எத்தகையோரும் குறைதிருந்தப் பெறுவர். ஆசைத்தம்பியிடம் இந்த மாறுதல் வளராதது விந்தையானதுதான்!

பூரணம் பெற்றிராத கற்பனை மனதின் குழப்பங்கள் **'டாக்டர்'** **'கிழக்கும் மேற்கும்'** **'வெறுங்கூடு' முள்' 'பிணங்கள்'** போன்ற நெடுங் கதைகளில் நிறைய குவிந்திருக்கின்றன. அழகு நடையும் தனித்த பாணியும் இடை இடையே பளிச்சிட்டாலும் கதையின் இறுதியில் நாடு போற்றும் நல்லதொரு எழுத்தாளரின் 'உயிர் பண்பு' தென்படவில்லை.

இருபதிற்கு மேற்பட்ட வெளியீடுகளில் **'சிலந்திக் கூடு' நினைவுச் சுழல்** ஆகிய இரு நவீனங்களே சிறப்புப் பெற்ற படைப்புகள். இவைகளில் கதையமைப்பு மட்டுமல்ல—அழகிய உவமை நயங்களும் வரிசையான நிகழ்ச்சிகளும் இலக்கிய மேன்மையோடு விளங்குகின்றன. ஆசைத்தம்பியின் நல்ல தமிழ் வளத்தை எவரும் மறுப்பதற்கில்லை எனினும் 'சிலந்திக் கூட்டில்' வடமொழி சொற்களின் கரகரப்பு அதிகமாக விழுந்திருக்கிறது. ஏனே தெரியவில்லை இது...கவர்ச்சியான தமிழை தந்து கொண்டிருந்த அவரது இந்த 'புதிய சோதனையை' ரசிக்குமளவிற்கு நம்மவரின் இலக்கிய மனம் பண்படவில்லை!

ஏதோவொரு கவனமற்ற தன்மை ஏடு முழுவதும் தென்படுகிறது. புகழ் பெற்ற எழுத்தாளனுக்கு இயல்பாகவே அமையும் அலட்சியமோ, அவசர உருவாக்கமோ நாமறியோம்...வளர்கின்ற புதிய இலக்கியத்தின் வாழ்விற்காக இத்தகு பிழைபாடுகள் மறைதல் வேண்டும்.

'வாழ்க்கை வாழ்வதற்கே!' ஆசைத்தம்பியின் சிறந்த நாடக இலக்கியம். கதையும் காட்சி வரிசையும் நாடகப் புலவருக்கே இயல்பான தன்மையில் இதில் இணைந்திருக்கின்றன. வழக்கமான 'கொலையாளி' வந்தாலும் இயற்கையோடு—அளவோடு அவன் வந்து போகிருன். வேண்டாத விரசமும், தொல்லைதரும் வளர்ச்சியும் இல்லை இதனல். வருங்காலம் நல்லதொரு நாடகாசிரியரை இலக்கிய வையத்திற்கு தரவிருக்கிறது!

பெருங்கதை இலக்கியத்தைப் பொருத்தவரை தமிழ் மண் பூரிக்குமளவிற்கு ஆசைத்தம்பி எதையும் எழுதிவிடவில்லை. அவர் ஆற்றல் நிரம்பியவர். மறுப்பதற்கில்லை. ஆரம்பகால ஏடுகள் பெற்ற புகழே இதற்கு சான்று...எனினும் சமூகக் கதைகளை உருவாக்கும் வேளையில் ஆசைத்தம்பியின் புதிய எண்ணங்கள் மறைந்துவிடுகின்

2-ம் பக்கம் பார்க்க

புது வாழ்வு தொடக்க விழா

ராஜேஸ்வரி—துரைசாமி

●

கொள்கைக்காக உயிரை அர்ப்பணித்த தீரர், லட்சியக் குன்று மறைந்த தி. மு. க வீரர் வண்ணை தே. எஸ். பாண்டியன் அவர்களின் திருமகள் தோழியர் பி. இராஜேஸ்வரிக்கும். வடசென்னை தோழரும் திராவிடர் இயக்க அனுதாபியும், துவரை உடைப்பு தொழிலக உரிமையாளருமான தோழர் எம். துரைசாமிக்கும் வள்ளுவர் ஆண்டு 1986 தை திங்கள் 29-ம் நாள் வெள்ளிக்கிழமை (11-2-55) காலை 9-மணிக்கு 36, மணி கண்டமுதலி 1-வது லயன் திரு எஸ். ஆர். எஸ். இல்லத்தில் (ராபின்சன் பார்க் சமீபம்) திருமணம் நடைபெறும். பொன்னம்பலனார் கே. ஏ. மதியழகன், காஞ்சி, கல்யாணசுந்தரம், நடிப்புப் புலவர் ராமசாமி, நடிகமணி நாராயணசாமி, நடிப்புச் செல்வர் இராஜேந்திரன், புரட்சி நடிகர் ராமச்சந்திரன் ஆகியோர் மணமக்களை பாராட்டிப் பேசுவர், அனைவரும் வருக!

திராவிடன்

சென்னை : 11—2—55 : வெள்ளி

இருள் சூழ்ந்து நிற்கும் எதிர்காலம்!

●

உலக அரசியல் அரங்கிலே ஆதிக்கக்காரர்கள் கையாண்டு வரும் நடவடிக்கைகள் உலகின் எதிர்கால அமைதிக்கு பெரும் கேட்டினை விளைவித்து வருவதை அரசியல் ஞானம் படைத்த அனைவரும் அறிவர்.

ஆனால் ஆதிக்கக்காரர்களோ தங்கள் பேராசைக்கு முலாமிடும் வகையில் உலக சமாதானத்துக்காகவே நாங்களும் பாடுபடுகிறோம் என உரத்த குரலெழுப்பி வருகின்றனர்.

கடந்த நாலைந்து ஆண்டுகால நிகழ்ச்சியினை நடுநிலையிலிருந்து சிந்திப்போமானால், உலகசமாதானத்தைப் பற்றி ஒரே கூச்சல் போடப்படுகிறதே யன்றி—அதற்கு ஏற்ற சூழ்நிலையை உண்டாக்குவதற்கு உலக அரசியலிலே ஆதிக்கம் படைத்தவர்கள் முன் வந்தார்களில்லை. முன்வராதது மட்டுமல்ல, அதற்கான மனவளமாவது பெற முனைந்தார்களா—அதுவும் இல்லை.

உலக நாடுகளிடையே நேசப்பான்மையை நிலைபெறச் செய்யவும் சென்ற கால போர்களினால் ஏற்பட்ட கேடுகள் மீண்டும் தலைகாட்டாவண்ணம் தடுக்கவும் ஆவன செய்ய நிறுவப்பட்ட ஐக்கிய நாட்டுச் சபையின் போக்கு "நாடக மேடை ராஜா" வாக காட்சியளிக்கிறதே யல்லாது உருவான திட்டத்தை சாதித்ததாகவோ அல்லது பாரபட்சமின்றி நடந்து வருவதாகவோ கூறுவதற்குமில்லை.

ஐக்கிய நாட்டுச்சபை, எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதோ அதற்கேற்ப அச்சபை பணியாற்றி யிருப்பின் இன்று சீனத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கோ அல்லது மற்ற நாடுகளிடையே உள்ளூரக் குமுறிவரும் மனக் கசப்புகளுக்கோ இடமேற்பட்டிருக்காது.

சீன மக்களின் பெரும் மதிப்புக்கும் பெருமைக்கும் உரித்தான, மக்கள்சீனாவுக்கு ஐ. நா. சபையில் இடமளிக்க வேண்டுமென்று நீண்ட காலமாக விடப்பட்ட வேண்டுதலுக்கு ஐ. நா. சபையின் "சர்வாதிகாரிகள்" இணங்கியிருந்தால், இன்று மக்கள் சீனத்தை தேடிச் சென்றும் அதற்குப் பிறகு எங்களோடு கலந்து பேச உடனே வாரும் என அழைப்பு விடுத்துங்கூட ஐ. நா. சபையின் 'சர்வாதிகாரிகள்' மூக்குடைபட்டிருக்கும் வருந்தக்கூடிய நிலை ஏற்பட்டிருக்குமா என்பதைச் சிந்திக்க வேண்டுகிறோம்.

கெஞ்சினால் மிஞ்சுவதும், மிஞ்சினால் கெஞ்சுவதும் என்ற வித்தையில் இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் ஆதிக்கக்காரர்கள் தங்களின் ஏகபோக ஜபர்தஸ்தை நடத்திவர முடியும் என்று கேட்கிறோம்.

இவர்களின் போக்குத்தான் இத்தன்மையது என்றால் இந்தியா போன்ற நாடுகளாகிலும், ஐ. நா. சபையில் குத்தகை பேரம் பேசிக் கொண்டு கும்மாளம் அடித்து வரும் நாடுகளின் அறிவின்மையைப் போக்க முற்பட்டிருக்கலாம். சீனத்தைப் போன்ற ஒரு பெரிய நாட்டுக்கு—அதிலும் பெருவாரியான மக்களால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சி பீடத்துக்கு ஐ. நா. சபையில் இடமளிக்க இயலாமல் தடுத்துவந்த அநீதியைத் தட்டிக் கேட்கவோ அவ்வித சபையில் அங்கம் வகிப்பதிலிருந்து வெளியேறவோ நமது ஆசியாவின் ஜோதி நேரு பண்டிதரின் சர்க்காருக்குக்கூடத் துணிவில்லாமற் போய்விட்டது மட்டுமல்ல, பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்ற முறையிலே உலக அரசியல் அரங்கில் நடித்தும் வருகிறது.

இப்படியாக ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தொடை நடுங்கித்தனத்தாலேயே ஆதிக்கக்காரர்களின் கை மேலோங்கி இன்று மீண்டும் உலகப்போர் மூளுமோ என்று அஞ்ச வேண்டிய சூழ்நிலைக்கு சீனநாட்டு நிகழ்ச்சிகள் குமுறலைக் கக்குகின்றன.

போதாக்குறைக்கு, சமாதான விரும்பியான ரஷ்யப் பிரதமர் மாலன்காவ் திடீரென தமது பதவியை ராஜிநாமா செய்து விட்டு, ராணுவ மந்திரியான புல்கானின் என்பவர் பிரதம மந்திரியாகப் பதவி ஏற்றுள்ளார்.

பிரெஞ்சு நாட்டிலோ, ஜனநாயக விரும்பியான மெண்டஸ் பிரான்ஸ் மந்திரி சபை கவிழ்க்கப்பட்ட விவரத்தையும் வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

இந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் சிந்தித்துப் பார்க்கும்போது அகில உலக அரசியலின் எதிர்காலம் எவ்வளவு இருள்சூழ்ந்து நிற்கிறதென்பது தெரியவரும். இந்தவிபரீத போக்கு நீடிப்பதை ஜனநாயக உள்ளம் படைத்த எவருமே விரும்பமாட்டார்கள்.

ஆனால் ஆதிக்கக்காரர்களோ இந்த விபரீதத்தை வளரவிட்டு அதை விளையாட்டாகவும், தங்களின் டாலர் வருவாய்ப் பெருக்கத்திற்கு வழிவகை அமைக்கவும் எண்ணுகின்றனர்.

காலச்சக்கரம் காட்டும் எச்சரிக்கையை ஆதிக்கக்காரர்கள் திரைபோட்டு மறைத்துவிட முயல்வது அவர்களுக்கே பெரும் கேட்டினை விளைவிக்கும். ஆதலாலே உலக நாடுகளின் ஒவ்வொன்றின் உரிமையும் பாதுகாக்கப்பட்டு நேச முறையில் வாழ இனியாகிலும் அகில உலக அரசியல் அரங்கில் கை ஓங்கி நிற்கும் வல்லரசுகளும், ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் இந்தியா, பாக்கிஸ்தான் போன்ற நாடுகளும் நேர்மைப் பண்புடன் கடமையில் இறங்க வேண்டியது மிக இன்றியமையாததாகும்.

●

வருந்துகிறோம்

நமது அருமைத் தோழரும், 'தென்றல்' ஆசிரியருமான கவிஞர் கண்ணதாசன் அவர்களின் தந்தையார் திரு எ. எல். சாத்தப்பா அவர்கள், 4—2—55-ம் நாள் இரவு இராமநாதபுரம் சிறுகூடல்பட்டியிலுள்ள அவரது இல்லத்தில் இயற்கை யெய்தியமை குறித்து வருந்துகிறோம். தந்தையாரின் பிரிவாற்றால் மனத்துயர் அடைந்துள்ள தோழர் கண்ணதாசன் அவர்களுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நடக்க இருப்பவை

சென்னை 8-வது வட்டத் தி. மு. கழகம்

12-2-55 சனி மாலை 6-மணிக்கு பெத்து நாயகன் பேட்டை குப்பய்யர் தெரு, 1-வது இல்லத்தில் சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும். தோழர், புட்பரத்தினம் தலைமையில் 'சமயம் தேவையா' எனும் பொருள் குறித்துப்பலர் பேசுவர்.

மதுரை மாவட்ட தி. மு. கழக இரண்டாவது மாநாட்டு வரவேற்புக்குழுக் கூட்டம்.

13-2-55 ஞாயிறு காலை 10 மணிக்கு மதுரை நகர் தி. மு. கழக அலுவலகத்தில் (4 கட்ருபாளையம்) நடைபெறும். மாநாட்டு வரவு செலவு கணக்குப் பரிசீலனை செய்யப்பட யிருப்பதால் வரவேற்புக் குழு உறுப்பினர்களனைவரும் தவறாது வருகை தர வேண்டுகிறேன் என செயலாளர் எஸ். முத்து அறிவிக்கிறார்.

மதுரை மாகாளிபட்டி தி. மு. கழகம்

13-2-55 ஞாயிறு மாலை 6-மணிக்கு மாகாளிபட்டி நெடுஞ்செழியன் திடலில் பொதுக் கூட்டம் நடைபெறும். சே. அழகிரி தலைமையில் தோழர் ஏ. வி. பி ஆசைத்தம்பி எஸ் முத்து. கே. எஸ். சந்தானம் பேசுவர்.

வேலநத்தம் தி. மு. கழக 5-வது ஆண்டு விழா

18—2—55 வெள்ளி மாலை 6-மணிக்கு சேலம் மாவட்டம், வேலநத்தம் ஞானானந்த ஆஸ்ரமத்தின் முன்புள்ள திடலில் தோழர் ஈ ஆர். கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும். தோழர் என். வி. நடராசன் சொற்பொழிவாற்றுவார்.

தி. மு. கழகப் பொதுக்குழு

20—2—55 ஞாயிறு காலை 10-மணிக்கு கோவை, பேரூரில் நடைபெறும்.

வேண்டுகோள்.

20—2—55-ம் நாள் கோவை நகரை யடுத்துள்ள பேரூரில் நடைபெறும் பொதுக்குழுக் கூட்டத்துக்கு வரும் உறுப்பினர்களுக்கு பேரூரிலேயே தங்க, குளிக்க இடவசதியும், உணவு ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் அனைவரும் இதைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

19—2—55-ந் தேதி காலை 5-மணி முதல் கோவை ரயில் நிலையத்தில் பொதுக்குழுவுக்கு வரும் உறுப்பினர்களை வரவேற்க தொண்டர்கள் தயாராக இருப்பார்கள். முன்னதாகவே வரும் தோழர்கள் அறிவித்தால் ரயில் நிலையத்துக்கு தொண்டர்கள் வருவார்கள்.

ரயில் நிலயத்திலிருந்து டவுன் பஸ் ரூட் நெம்பர் 2, 9; 14.

அ. பழனிசாமி, செயலாளர், நகர தி. மு. க.
தெப்பக்குளம் வீதி, கோவை.

*

மாபெரும் பொதுக்கூட்டம்

இடம் : சிதம்பரம் பூங்கா கோவை

நாள் : 20—2—55 ஞாயிறு மாலை 5-மணி

அறிஞர் அண்ணா, தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், இரா நெடுஞ்செழியன், கே. எ. மதியழகன், என். வி. நடராசன், மு. கருணாநிதி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, சி. பி. சிற்றரசு, எம். எஸ். இராமசாமி, இரா. சு. தங்கப்பழம், அரங்கண்ணல், கண்ணதாசன், அன்பில் தருமலிங்கம், மதுரை முத்து, ஈரோடு அப்பாவு, எ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., அ. பொன்னம்பலனார், எ. எல். சி. கிருஷ்ணசாமி, தில்லை வில்லாளன், இரா. இளம்வழுதி, என். எஸ். இளங்கோ, தோழியர் சத்தியவாணிமுத்து, அருண்மொழி மற்றும் பலர் பேசுவர்.

குறிப்பு: 20—2—55 மாலை 4-மணிக்கு செல்வபுரத்திலிருந்து தோழர் சம்பத் தலைமையில் தலைவர்கள் ஊர்வலமும் நடைபெறும்

முத்தமிழ் கலைக்கூடத்தாரின் முதல் முழக்கம்

"வாழ்வு எங்கே?"

(தமிழ் சமூக நாடகம்)

13—2—55 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு சென்னைசௌந்தர்யமஹாலில் நடைபெறும்

கட்டணம் : ரூ. 3, 2, 1, அணா 8.

பெங்களூர் மாநாடுகள் (பிப். 12-13) பெங்களூர் கண்டோன்மெண்டில் நடைபெறும்

தோட்டத்து மலர்கள்!

தில்லை. மறைமுதல்வன்

'வீட்டில் குழந்தைகள்—தோட்டத்தில் மலர்கள்' என்று பாடினர் ஒரு கவிஞர். எவ்வளவு அழகான கருத்து! தோட்டத்தில் பூத்து சிரிக்கும் மலர்களை வீட்டில் தவழ்ந்து விளையாடும் குழந்தைகளுக்கு ஒப்பிடுகிருர் கவிஞர். தோட்டங்களில் மலர்கள் குலுங்கினுல்தான் அழகிருக்கிறது. அதுபோல குழந்தைகளின் மழலைமொழி வீடுகளில் சிந்தினுல்தான் அங்கே ஜீவனிருக்கிறது. ஆம்; பூக்களின்றி சோலை இல்லை! குழந்தைகளின்றி வீடுகளில்லை!

*

இனிமை நிறைந்த குரலில் மனிதன் பாடுகிருன். கேட்போர் உலகை மறந்து உணர்வு மறந்து அந்த இசையில் லயித்து விடுகின்றனர். தூரிகையை வர்ணங்களில் நனைத்து திரையில் கிறுக்குகிருன்—அது அற்புதமான ஓவியமாகி விடுகிறது! மனிதனின் கையிலுள்ள உளிபட்டு பாறைகள் நெஞ்சை அள்ளும் சிற்பங்களாக மாறி விடுகின்றன. ஏட்டில் எழுத்தாணி கொண்டு ஏதேதோ எழுதுகிருன்—மனிதகுலமே அந்தக் கவிதைச் சோலையில் மயங்கிவிடுகிறது!

இவைகளில்—இந்த மனித சிருஷ்டிகளில்—தலைசிறந்தது எது? 'எதுவுமே இல்லை' என்ற பதிலைத்தான் இந்தக் கேள்விக்கு தரமுடிகிறது. ஏனெனில் மனித சிருஷ்டிகளில் சிகர சிருஷ்டி குழந்தைகள்தான்! அதுவும் ஞானப்பல் முளைக்காத பிஞ்சுக் குழந்தைகள்!

காலையில், ஒளி அரும்பும் வேளையில், மலர்கள் மீது தூங்குகின்றனவே, பனித்துளிகள்...அவைபோல பரிசுத்தமானவை குழந்தைகள். வானவெளி போன்ற பரந்த இதயம்! எண்ணங்கள் எழும்பாத உள்ளம்! பகைமையின் நிழல் படராத நெஞ்சம்! விலையில்லாத மழலை மொழி! கவிதைதரும் புதுமேனி! படைப்பில் உயர்வின் சின்னம் குழந்தைகள்தான்!

வாழ்க்கையின் துயரப்புகை குழந்தைகளின் மனவாளை குழுமுன்னுல் அவர்கள் பேசுகிற மதலை மொழி......வர்ணனைக்கு சிக்காத அந்த இன்பமொழிக்கு ஈடே இல்லை! அந்தப் பேச்சில் ஆழ்ந்த சிந்தனைகள் எதுவும் இருக்காது. அர்த்தமில்லாத பேச்சுதான். ஆனுலும் அந்த அர்த்தமில்லாத பேச்சில் ஒரு சலிக்காத இனிமை இருக்கிறதே! அதனுல்தான் அந்தப் பேச்சில் பலரும் 'பைத்தியம்' கொண்டு விடுகின்றனர்.

மடிகின்ற இரவோடு குழந்தைகளின் கவலைகளும், துயரங்களும் மடிந்துவிடுகின்றன. மலர்கின்ற காலையோடு அவர்களது புது வாழ்வும் மலர்கிறது. அவர்கள் மனதில் பேதமில்லை. பிளவில்லை. உயர்வு தாழ்வில்லை. தீமை செய்யும் எண்ணம் இல்லை. அவர்களுக்கு வஞ்சனை தெரியாது. பயம் தெரியாது பாம்புகளோடும் விளையாட முனைவார்கள். எதற்கும் பயன்படாத பொருள்கள்கூட அவர்களிடம் மதிப்பு பெறும். எல்லோராலும் வெறுக்கப்பட்டவர்கள் கூட அவர்களுக்கு உயர்ந்தவர்களாக இருப்பார்கள். அவர்களின் வெளிப்புறத்தில் அழுக்கிருக்கும். ஆனுல் அகத்தில் கொஞ்சங்கூட கறை கிடையாது. தூசிபடியாத தூய்மையான மனம் குழந்தை மனம்! இதெல்லாம் ஞானப்பல் முளைக்கும் முன்புதான்!

உலகை மறந்து உற்சாகத்தோடு விளையாடுகிருர்கள். தங்களுக்கு பிடித்தவைகளுக்காக பிடிவாதம் செய்கிருர்கள் பிடிக்காதவைகளை தூக்கி எறிகிருர்கள். விரும்பியது கிடைத்தால் மனம் விட்டு வாய் நிறைய சிரிக்கிருர்கள்—கிடைக்கா விட்டால் சத்தம் போட்டு அழுது புரள்கிருர்கள். வீட்டுப் பண்டங்களை உடைத்து தொல்லை கொடுக்கிருர்கள். சுத்தமான வீட்டினுள் கரியால் கோடுகள் கிறுக்கியும் காகிதங்களை கிழித்துப் போட்டும் விஷமங்கள் செய்கிருர்கள்.

ஆனுல், இவைகளில் தான் அழகிருக்கிறது; உயிரிருக்கிறது. வாழ்க்கை இருக்கிறது. குழந்தைகளின் பாதச்சுவடுகள் படியாத இடங்கள் சூன்யம் கவிந்த பொட்டல் வெளிகள்தான்!

குழந்தைகள் மனம் மர்மங்கள் நிறைந்தது, அது ஒரு அவிழ்க்க முடியாத சிக்கல்! சிறந்த பாடகனின் இசையால் குழந்தையின் அழுகையை நிறுத்த முடியாது. ஆனுல் எவராவது குறட்டைவிட்டு தூங்குவது கண்டால் அழுகை சட்டென்று நின்றுவிடும். ஆம் குழந்தை மனம் அதிசயமானது! அந்த அதிசயத்திலும் ஒரு அழகு இருக்கிறது! குழந்தைகள் பொறுப்பில்லாத பொற்கதிர்கள்—ஆனுல் அதன் கவர்ச்சியோ அந்த பொறுப்பில்லாத தன்மையில்தான் இருக்கிறது!

குழந்தை...ஆண் பெண் இருவரின் கூட்டுக்குரலில் பிறந்த வீணை நாதம்! ஆண் பெண் இருவரின் விழித்தழுவுதலில் தெறித்த மின்னல்! இன்பம் பெற்றெடுத்த இனிமைப் புதையல்! வாழ்க்கை ஒரு பூங்கா—அதில் உள்ள மலர்கள் குழந்தைகள்! காதல் ஒரு மரம்—அதில் உள்ள கனிகள்தான் குழந்தைச் செல்வங்கள்!

*

கண்ணம்மாவை குழந்தையாக்கி பாடும்போது பாரதி தன்னையே மறந்து விடுகிருன். அவனது கவிதை இதயம் பொங்கி அவனையே மூழ்கடித்து விடுகிறது. இதோ பாருங்கள்...

"அள்ளி அணைத்திடவே என் முன்னே ஆடிவருந் தேனே! ஓடி வருகையில் கண்ணம்மா உள்ளங்குளிருதடி! ஆடித் திரிதல் கண்டால் உனைப்போய் ஆவி தழுவுதடி! உச்சிதனை முகந்தால் கருவம் ஓங்கி வளருதடி! மெச்சியுனை யூரார் புகழ்ந்தால் மேனி சிலிர்க்குதடி! கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளந்தான் கள்வெறி கொள்ளுதடி! உன்னைத் தழுவிடிலோ கண்ணம்மா உன்மத்த மாகுதடி! உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரங் கொட்டுதடி!...'?

அதுமட்டுமா? இன்னும் இருக்கிறது......

'இன்பக் கதைகளெல்லாம் உன்னைப் போல் ஏடுகள் சொல்வதுண்டோ? அன்பு தருவதில் உனை நேர் ஆகுமோர் தெய்வமுண்டோ? மார்பிலணிவதற்கே உன்னைப்போல் வைர மணிகளுண்டோ? சீர்பெற்று வாழ்வதற்கே உன்னைப் போல் செல்வம் பிறிதுமுண்டோ!'

'பாரதிக்கு இணை பாரதியே' என்று சொல்லும்படி பாடிவிட்டான். அவன் ஆற்றலை நினைத்து வியக்காமலிருக்க முடியவில்லை!

*

'வான் பெற்ற நிலவைப்போல வந்தொரு குழந்தை என்னை தேன் பெற்ற வாயால் அப்பா எனத் தாவும்! திங்கள் எழில்பெற்ற தாய் மடியின் மீது யாழ் கிடப்பதுபோல பிள்ளை உற்றிடும்; அம்மா என்னும் அவ்விசை அமிழ்தின் ஊற்றும்!'—இது புதுவைக் குயில் பாரதிதாசனின் அனுபவ வெளியீடு. அதில்தான் எத்தனை எழில்!

'அன்பின் பணியும், வையம் பெறும் பயனும் எங்கே' என்ற கேள்விக்கு புரட்சிக் கவிஞர் காட்டும் காட்சி இது...

"...................
அக்குழந்தை தாய்ச் சைப் புறத்தில்
நற்றமிழ் பால் குடிக்க
நகர்த்தும் தன் சிவந்த வாயை
அணைத்துக் கொண்டிடுவாள் அன்னை
அமிழ்தச் செம்பினையும், தன் பால்
இணை இதழ் குவிய உண்ணும்
இளங் குழந்தையையும் சேர்த்தே
அணி மேலாடையினுல் மூடி
அவள் இடை அசைப்பாள்! அன்பின்
பணி காண்பேன் வையம் பெற்ற
பயனை கண்ணுரக் காண்பேன்!'

குழந்தை தாயிடம் பால் குடிப்பதில் அன்பின் பணியை, வையம் பெற்ற பயனைக் காண்கிருர் கவியரசர். இதோ

இன்னென்று...

'...பிள்ளை சிரிக்கையில்
சிரித்தது வையம்! சிரித்தது வானமே!'

இரண்டே வரியில் எல்லாம் அடக்கம். குழந்தைகள் சிரிக்கின்றன! குவலயம் சாந்தி பெறுகிறது!

*

வேய்ங்குழல் பொழியும் கீதத்தில் தங்களையே பறிகொடுத்து விடுகிருர்கள் சிலர். யாழின் அமுதத் தந்திகளிலிருந்து கிளம்பும் நாத ஒலியில் கரையே இல்லா இன்பத்தை காண்கிருர்கள். ஏனெனில் இவர்கள் குழந்தைகளின் மழலைமொழி கேளாதவர்கள். இதைத்தான் வள்ளுவன் சொன்னுன்...

'குழல் இனிது யாழ் இனிது என்பதம் [மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்' என்று.

ஆனுல் கலைஞர் கருணாநிதி வேறுவிதமாகச் சொல்லுகிருர். 'குழலையும் யாழையும் வெல்லுவாய் என்ற குறளையும் வெல்லும் உனது மழலை மொழி' என்று அவர் சொல்லும்போது 'அற்புதம்! அபாரம் என்று கூறத் தோன்றுகிறது.

'தளிர்' என்ற தலைப்பில் குழந்தையை வர்ணிக்கிருர் கருணு' 'அரும்பு பொதிய விழா மல்லிகையைப் பார்த்தால்—ஆகா—எத்துனை இன்பமாயிருக்கிறது. வயலிலே நாற்று, வண்ணப் பொய்கையில் மீன் குஞ்சு, காட்டிலே மான்குட்டி, வீட்டிலே குழந்தை!'... எத்தனை அழகான சொல்லோவியம்!

'குழந்தாய்! உனக்கு கடவுள் என்ற எண்ணமுமில்லை. நீயும் நாத்தீகவாதி, நல்ல மனத்திற்கு குழந்தை மனம் என்று பெயர். ஆகையால் நாத்தீகர் நல்ல மனம் படைத்தவர்'—கொள்கையை உயிராகக் கொண்ட இத்தகு எண்ணங்கள் கருணுவுக்கே உரித்தான தனித்த பாணி!

குழந்தையிடம் கடவுளைப் பற்றிய நினைவு ஏன் எழும்புவதில்லை! இதற்கும் கருணாநிதி பதில் சொல்லி விடுகிருர்,

"நீ யாரையும் கெடுப்பதில்லை—அதனுல்தான் உனக்கு கடவுள் அவசியமில்லை!"—கருணுவை கலைஞர் என்று போற்ருமலா இருக்க முடிகிறது?

*

கவிஞர் கண்ணதாசனின் 'இல்லற ஜோதி'யில் எண்ணி எண்ணி மகிழத் தக்க ஒரு கட்டம்...

அவன் கவிதை வானில் பறக்கும் தேன்சிட்டு அவனிடம் வெடித்த கனவுகளில் கவிதைகள் மலருகின்றன. துடிக்கும் எண்ணங்களில் இதயம் பாடுகிறது ஆனுல் அவனுக்கு வாய்த்த மனைவியோ ரசனையே தெரியாத அசட்டுப் பெண்!

ஒரு நாளிரவு கவிஞன் தனது ரசிகை ஒருத்தியை சந்திக்க புறப்படுகிருன். விஷய மறிந்த அவன் மனைவி குறுக்கிடுகிருள்.

"எங்கே போகிறீர்கள்!"

கவிஞன் சிரித்து விட்டு சொல்லுகிருன்.

"எங்கேயா! கவிஞன் எங்கே போவான்! கலை இருக்குமிடத்தை தேடித்தான்!"

உடனே அந்த அசட்டு மனைவி கவிஞனின் வார்ப்படத்தை இல்லத்தின் குளிர் விளக்கை—பிள்ளைக்கனியமுதை—அவன் முன் நீட்டியபடி கேட்கிருள்.

"இங்கே தெரியவில்லையா உங்களுக்கு கலை!"

அவள் கேள்வி கவிஞனுக்கு மின்னலடித்தாற் போலிருக்கிறது.

இந்தக் கேள்வியில் எவ்வளவு அழகும் பொருளும் இருக்கிறது பாருங்கள் எவ்வளவோ கவிஞர்கள் குழந்தையை எப்படி எப்படியோ வர்ணித்திருக்கிருர்கள். முழு நிலவே! முல்லைப்பூவே! கன்னலின் சாறே! பளிங்குருவே! பச்சைக் கிளியே!...என்றெல்லாம் வர்ணித்திருக்கிருர்கள். ஆனுல் கண்ணதாசன் குழந்தையைக் காட்டி 'இங்கே தெரிய வில்லையா கலை!' என்று கேட்கும் போது தான் அவர் ஒரு படி மேலே போகிருர், அவரது கலைத்திறன் முழுதும் இங்கே வெளிப்படுகிறது!

*

பெண்களின் அழியாத கனவு குழந்தைகள்தான். இன்பக் கூட்டில் கணவன் விதைத்த வித்தை தாங்கி, பத்து மாதம் தனது ரத்தத்தால் அந்தக் கருவை வளர்த்து, பின் வெளிப்பட்ட பிஞ்சுடலை அள்ளி அணைத்து அதன் சுனை உதடுகளில் முத்தமழை பொழியும்போது ஏற்படும் அந்த பூரிப்பு...... அதை பெண்களால் மட்டுமே உணர முடியும்! அந்த பூரிப்புக்கு அவர்கள் படுகிற தவிப்பு...ஏங்குகிற ஏக்கம்... அதை வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது!

கவிஞன் முடியரசனின் 'இன்பக்குழவி' என்ற கவிதை இதை விளக்குகிறது.

அவளுக்கு திருமணமாகி விட்டது. ஆனுல் கணவன் தந்த இன்பத்தின் சின்னம் இல்லை அவளுக்கோ தனது உயிர்க் கொழுந்தைக் காண வேண்டுமென்ற ஓயாத துடிப்பு...அதனுடைய அரும்பு இதழ்கள் சிந்தும் சிரிப்பை அள்ளிப் பருக வேண்டுமென்ற அடங்காத வெறி...புண்ணியத் தலங்கள் சென்றும் தீராத தவிப்பு...என்ன செய்வது!... பக்கத்து வீட்டு இளைஞன் ஓரக் கண்ணுல் ஒப்புதல் கேட்கிருன், தப்பென்றறிந்திருந்தும் தாய்மைப்பாசம் சம்மதம் தந்து விடுகிறது! அப்புறம் என்ன!... மற்றவன் வயலில் மாடுகள் மேய்கின்றன! இல்லத்தின் தூண்டா விளக்கு ஒளிவிடுகிறது!

அவள் செய்தது பாவந்தான். உலகம் காரி உமிழும். ஆனுலும் அந்தக் குழந்தை 'அம்மா' என்று அழைக்கும் போது அவள் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை!

ஊரார் அறிந்தால் ஒழுக்கம் இல்லா
உலுத்தை என்றே ஊறிக் கொட்டுவர்
கொண்டவன் கண்டால் தண்டனை [என்பான்
உற்ருர் எனினே பற்பல கதைப்பர்
எனினும் அந்த இன்பக்குழவி
'அம்மா' என்றே அழைத்திடும் என்னை
இம்மா நிலத்தில் எண்ணிய இன்பம்
பெற்றேன்! பெற்றேன்! பிறருரை [வீணே

*

வளர்ந்த மனிதனின் பேச்சில் காரண

காதல் ஒரு மரம்! அதிலுள்ள கனிகள்தான் குழந்தைச் செல்வங்கள்!

காரிய அறிவின் நிழல் இருக்கத்தான் செய்கிறது, ஆனால் குழந்தையின் குதலை மொழியில் பேதமைதான் இருக்கிறது—அந்தப் பேதமையில் தான் பேரின்பமும் இருக்கிறது!

இந்தப் பேரின்பத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் நாம் பிரெஞ்சு நாட்டு பேனா மன்னன் பால்சாக்கிடம் தான் போக வேண்டும்; விண்ணுக்கும் மண்ணுக்குமாக விரிந்து நிற்கும் ஆற்றல் படைத்த மேதை அவன். அவனது கதைத்தொகுதியில் காணப்படும் கதை இது.

காதரைன் ராணி ஆட்சி செய்துக் கொண்டிருந்த காலம். அவளுடைய மாமனார் பிரெஞ்சு நாட்டின் பேரரசராக இருந்தார், அவர் மற்ற முடிதாங்கிகளிலிருந்து வேறுபட்டவர், கலையின் ரசிகனாக கலைஞர்களின் தோழனாக வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருந்தார். லியனார்டே டாவின்ஸி, ராபெல், பிரைமாட்டிஸ் போன்ற கலைச்சிற்பிகளின் நட்பைப்பெற்றவர். அவர்களுக்கு அவ்வப்போது வேண்டிய உதவிகளையெல்லாம் உள்ள நிறைவோடு செய்து வந்தார்.

மாமனாரின் கலை ஆர்வத்தை உணர்ந்த காதரைன் அவரை மகிழ்விப்பதற்காக, அவருக்கு மிகவும் பிடித்தமான இத்தாலி நாட்டு ஓவியங்கள் பலவற்றை அவ்வப்போது வாங்கி அனுப்புவாள். அப்படி அனுப்பப்பட்ட படங்களில் ஒரு ஓவியம்மட்டும் மிகவும் அருமையாக அமைந்திருந்தது. அதுபோன்ற சித்திரத்தை இதுவரை எவருமே தீட்டியதில்லை என்று சொல்லும் வண்ணம் அதை வரைந்திருந்தான் வெனிஸ் நகரத்து சித்திரக்காரனான டிஷியன் என்பான். அப்போது அவன்சார்லஸ் மன்னனின் அரசவைக் கலைஞனாக இருந்தான்.

அந்த புகழ் பெற்ற ஓவியத்தில் மனித குலத்தின் ஆதிபிதாக்களான ஆதாமும் ஏவாளும்—கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட முதல் ஆணும் பெண்ணுமான ஆதாமும் ஏவாளும்—ஏதேன் தோட்டத்தில் சுற்றித் திரியும் காட்சி சித்தரிக்கப்பட்டிருந்தது. அவர்கள் இருவரும் அந்தக் காலத்து ஆடை அணிந்திருந்தார்கள். அதாவது கொஞ்சங்கூட மறைப்பின்றி பிறந்த மேனியோடு காட்சியளித்தார்கள். ஏனெனில் அவர்கள் தங்கள் பேதமையையே ஆடையாக அணிந்திருந்தனர்!

பூலோக சொர்க்கத்தின் முதல் பிரஜைகளான இவர்களின் உணர்ச்சி பாவங்களை வர்ணப்பூச்சில் காட்டுவது சிரமசாத்தியமான காரியந்தான். எனினும் டிஷியன் தனது கலைத்திறமையையெல்லாம் காட்டி அந்த ஓவியத்தில் குறையில்லாத முழு எழிலை—கவர்ச்சி குன்றாத உயிரோட்டத்தை—பெய்திருந்தான். அந்த ஓவியம் ஓவியக் கலையின் மிகப்பெரிய வெற்றியாக போற்றப்பட்டது அதைக் காண வேண்டுமென்று எல்லோரும் விரும்பினார்கள். ஆனால் ராணி காதரைனின் மாமனாரான பிரெஞ்சு அரசர் சாகும்வரை அந்த ஓவியத்தை எவராலும் பார்க்க முடியவில்லை. ஏனெனில் அவர் வாழ்ந்த காலம் வரை அந்த ஓவியம் அவரது அறையிலேயே மாட்டப்பட்டிருந்தது.

ஒருசமயம் அவர் நோய்ப் படுக்கையில் கிடந்தபோது காதரைன் ராணி அவரைக் காணச் சென்றிருந்தாள். அவள் தனது மகனான பிரான்ஸிசையும் மகளான மார்கரெட்டையும் கூடவே அழைத்துச் சென்றிருந்தாள். அந்தக் குழந்தைகள் இருவரும் ஆதாம் ஏவாள் சித்திரத்தைப்பற்றி பலரும் ஏதேதோ பேசிக் கொள்வதை கேட்டிருக்கிறார்கள். அதனால் அந்த ஓவியத்தைக் காண வேண்டுமென்று அவர்களின் பிஞ்சு நெஞ்சங்கள் ஆசையால் துடிதுடித்தன, அந்த ஆசையை தங்கள் தாயாரிடமும் தெரிவித்தனர். காதரைன் ராணியும் குழந்தைகளின் வேண்டுகோளுக்கு இணங்கினாள்.

ஆதாம் ஏவாள் சித்திரத்தின் முன்னே குழந்தைகளை நிறுத்தி 'இதோ இவர்கள்தான் நமது முதல் பெற்றோர்கள்' என்று விளக்கினாள் காதரைன்.

சித்திரத்தின் முன்னே குழந்தைகள் இருவரும் பிரமித்துப்போய் நின்று கொண்டிருந்தனர். நாணத்தின் கிறையின்றி, நிர்வாணக் கோலமாய், பேதமையே ஆடையாய், அழகின் ஒளிச்சிதறல்களாய் ஏதேன் தோட்டத்தில் திரிந்து கொண்டிருந்த ஆதாமையும் ஏவாளையும் இமைக்காத விழிகளோடு இனம்புரியாத அதிசயத்தோடு பார்த்தபடி நின்றனர் குழந்தைகள் இருவரும்.

பிரான்ஸிசுக்கு திடீரென்று ஒரு சந்தேகம் வந்தது; மார்கரெட்டைப் பார்த்து கேட்டான்—'இவர்கள் இருவரில் ஆதாம் யார்?'

சட்டென்று மார்கரெட் பதில் கொடுத்தாள்—'முட்டாள்! அவர்கள் ஆடை அணிந்திருந்தாலல்லவா அது தெரியும்!'

இதைக்கேட்டு காதரைன் ராணியும் படுக்கையிலிருந்த அவள் மாமனாரும் சிரித்து விட்டனர்! ஆயுள் முழுதும் நினைத்து நினைத்து மகிழக்கூடிய பதில் தான் அது!

இந்த செய்தி காதரைன் ராணி பிளாரன்ஸ் நகரிலிருந்து எழுதிய ஒரு கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் பால்சாக்கைத் தவிர வேறு எந்த எழுத்தாளனும் இந்த விஷயத்தைக் கவனிக்கவில்லை! பால்சாக்கின் கதைத் தொகுதியில் இந்தக் கதை பனித்துளி படிந்த புதுரோஜா மலரைப்போல மனதைக் கவருகிறது!

இதை படித்து முடிக்க ஐந்து நிமிஷம்கூட ஆவதில்லை. இதிலிருந்து உயர்தரமான கருத்துக்களையோ, ஆழ்ந்த தத்துவங்களையோ தெரிந்து கொள்ள முடியாது! இதில் பிரமாதமான நகைச்சுவையோ, கடைபிடிக்க வேண்டிய போதனைகளோ இல்லை! ஆனால் பாலுணர்ச்சி பேதம் தெரியாத பேதைக் குழந்தைகளின் மனப்பண்பை—அறிவின் அழுக்கு படிவதற்கு முன்னால் குழந்தைகளிடம் வாழுகின்ற பேதமையை—ஒப்புவமை சொல்ல முடியாத வகையில் சித்தரிக்கிறது இந்த சின்னஞ்சிறு கதை!

ஆடை அணிந்தால்தான், ஆண்—பெண் வேற்றுமையை புரிந்து கொள்ள முடியுமாம்! ஏதேன் தோட்டத்திலிருந்த அறிவு என்னும் கனியை ருசிப்பதற்கு முன்னால் ஆதாமும் ஏவாளும் எத்தனை பேதமையோடு விளங்கினார்களோ, அதே போலத்தான் அந்தக் குழந்தைகளும் பேதமையின் பிரதிபிம்பங்களாக காட்சியளித்தனர்! அறிவு மொட்டு விடுவதற்கு முன்னால்—ஞானப்பல் முளைக்கு முன்புள்ள அந்த ஆனந்தம் பேதமையில் தான் இருக்கிறது!

*

உலகிலேயே குழந்தைகளைப் பற்றி பாடிய கவிஞர்களை எடுத்துக் கொண்டால், வங்கக்கவிஞன் தாகூருக்கு இணையாக வேறு எவரையும் கோடுகிழித்து காட்ட முடியாது. குழந்தை விளையாட்டைப்பற்றி தனக்கே உரித்தான பாணியில் அவர் எழுதிய புதுமை ஓவியம் இது...

'முடிவற்ற விண்ணில் அமைதி நிலவுகிறது. ஓய்வற்ற கடல் கொந்தளித்துக் குமுறுகிறது. குழந்தைகள் இலைச்சருகுகளால் படகு கட்டி கடலில் மிதக்க விட்டு சிரித்து விளையாடுகின்றன. நீந்தத் தெரியாத குழந்தைகள்...வலைவீசத் தெரியாத குழந்தைகள்...வஞ்சனையற்ற குழந்தைகள்! முத்துக் குளிப்பவர்கள் கடலில் மூழ்கி முத்துக்களை வாரி வருகிறார்கள். பணந்தேடிகள் திரைகடலோடி செல்வம் சேர்க்கிறார்கள். குழந்தைகளோ கூழாங்கற்களை வீசி விளையாடுகின்றன!...கடல் பூரிப்பு தாங்காது சிரிக்கிற. கடற்கரையில் ஒளி வெள்ளம் தேங்கி வடிகிறது. சீறிவரும் அலைகள் குழந்தைகளுக்கு அர்த்தமற்ற—ஆனால் இனிமையான—பாடல்களை பாடுகின்றன. அலையின் பாடல் தாயின் தாலாட்டைப்போல கொஞ்சுகிறது! ஆம்...கடல் குழந்தைகளோடு சிரித்து விளையாடுகிறது. அதனால் கடற்கரை மின்னி ஜொலிக்கிறது! வழியற்ற வான வெளியில் புயல் அனாதையாக அலைகிறது. தடமில்லாத கடலில் மரக்கலங்களை மோதி அழிகின்றன. மரணம் எங்கும் வாழ்ந்திருக்க, குழந்தைகள் கொஞ்சுகின்றன. முடிவற்ற உலகங்களின் கடற்கரையில் குழந்தைகளின் மகத்தான அதிசய சந்திப்பு நிகழுகிறது!'

●

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதருஸ்-1

பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதருஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 92. தெற்கு ஆவணி மூலவீதி, மதுரை
,, 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
,, கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
,, வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

நாடு என்றால் என்ன—தொடர்ச்சி

டைய நாடு. பாண்டியன் படை பலத்தால் இலங்கையை வீழ்த்தி விட்டான் என்றால், இலங்கையும் பாண்டி நாடு என்றே அழைக்கப்படும். சோழன் தோள் வலிமையால் கங்கை பாயும் பூமியை வென்றுவிட்டான் என்றால், கங்கை பாயும் பூமி சோழ நாடுதான்! ஒரு சமயம் திருச்சிராப்பள்ளி மலையில் பாண்டியனின் மீனக் கொடி பறக்கும்! இன்னொரு சமயம் திருப்பரங்குன்றம் மலையில் சோழனின் புலிக் கொடி பறக்கும்!

இப்படியே, அரசர்களின் ஆட்சி எல்லைதான், சோழநாடு, பாண்டிய நாடு என்பன போன்ற பெயர்களால் பழங்காலந் தொட்டு வழங்கப்பட்டு வந்துள்ளது.

தற்கால சேர (கேரளம்) நாடாவது மொழியளவில் சிறிது வேறுபாடு கொண்டிருக்கிறது. சோழநாடு, பாண்டிய நாடு இரண்டுக்கும் அரசியல் இலக்கணப்படி இன்றுவரை எந்த வேறுபாடும் கிடையாது. அவை இரண்டும் தமிழ் நாடுதான்! அப்படி இருந்தும் அவைகள் தனித்தனிப் பெயர் கொண்டிருக்கக் காரணம்? அதனை ஆண்ட அரசர்கள் தான்! மன்னர்களின் ஆட்சிதான் நாட்டின் எல்லை என்பதற்கு இது ஒன்றே போதுமானது.

தமிழகத்தில், மூவேந்தர்களின் முடியாட்சியும், அதனைத் தொடர்ந்து தோன்றிய நாயக்கர்களின் ஆட்சியும், நாட்டின் எல்லை எது? நாடு என்றால் என்ன? என்பன போன்ற எண்ணங்களுக்கு இடமில்லாத ஆட்சிகளே!

இதனால்தான் நாட்டிற்கு இலக்கணங் கூறிய வள்ளுவனார், தற்கால அரசியல் ஞானிகளின் குடியரசுத் தத்துவம் பொதிந்த நாட்டிலக்கணம் சொல்லவில்லை. அவர். சொல்கிறார்:

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு

என்கிறார். இதன் பொருள்: குறைவற்ற விளைநிலங்களும், மேன்மக்களும், சிறந்த செல்வர்களும் சேர்ந்திருப்பதே நாடு என்பதாம். அவர், மேலும் சொல்கிறார்:

"பல் குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் [வேந்தலைக்கும்
கொல் குறும்பும் இல்லது நாடு.

என்கிறார். இதன் பொருள்: பலதிறப்பட்ட கட்சிகளும், கேடு தரும் உள்நாட்டுப் பூசல்களும், அரசாங்கத்திற்கு அல்லல் தரும் கொலைகாரத்தனமும் இல்லாமல் இருப்பது நாடு என்பதாம். அவரே பின்னும் சொல்கிறார்:

'நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரும் நாடு'

என்கிறார். இதன் பொருள்: இயற்கையின் வளமுடையதே நாடாகும். செயற்கையின் வளப்படுத்தப் படுவது நாடாகாது என்பதாம்.

வள்ளுவர் காலத்திய அரசியலில் பெரிதும் நீர்வளமும், நிலவளமும் வேண்டப்படுகிறது. அதேபோது அமைதியும் வேண்டப்படுகிறது. அவ்வளவுதான். —(தொடரும்)

நாடு என்றால் என்ன?

எம். எஸ். ராமசாமி.

2

நாட்டுப் பிரிவினை கூடாது என்பதில் வடவர்கள் அனைவருமே கட்சி பேதமின்றி ஒன்று போல கூப்பாடு போடுகிறார்கள், அந்தக் குருட்டு வாதத்தையே திராவிட தேசியத் தோழர்களும்—கம்யூனிஸ்டுகளும் ஒலிபெருக்கிக் கொண்டிருப்பதில் அர்த்தமிருக்கிறதா?

●

பிரிந்து போகவேண்டும் என்பவர்களுக்கு ஒன்றுமே தெரியாதது போலவும் இவர்களுக்கு மட்டுமே எல்லாம் தெரிந்தது போலவும் பேசுகிறார்கள். திராவிடர்களின் நலத்தில் திராவிடத்தலைவர்களுக்கு இல்லாத அக்கறை இவர்களிடம் இருப்பதுபோல் நடிக்கிறார்கள். இந்தியா சிறு நாடுகளாக பிரிந்து விட்டால் 'குடியே முழுகிப் போய்விடும்' என்று ஓலமிடுகிறார்கள்! யாருக்கு குடி முழுகிவிடும்? இந்தியாவில் ஏகாதிபத்தியம் கட்டி ஆளவேண்டும் என்கிற ஏகாதிபத்தியக்காரர்களுக்கு குடிமுழுகிப் போனமாதிரி தான்! அதனால், திராவிடர்கள் ஏன் கவலைப் படவேண்டும்?

குடியாட்சி நடைபெறும் நாடுகள் எப்படி இருக்க வேண்டும் என்பதை 'குடியாட்சியின் தந்தை' என்று அழைக்கப்படும் ரூசோ, அவனுடைய சமுதாய ஒப்பந்தம் என்னும் நூலில் கூறியிருப்பது இங்கு கவனிக்கத் தக்கது:

"சமுதாயத்தில் எல்லா மக்களும் அரசியல் நிர்வாகத்தில் பங்கு கொள்ள வேண்டுவதற்கு—தேசம் மிகவும் சிறியதா யிருக்க வேண்டும். எல்லா மக்களும் ஒருவர்க்கொருவர் தெரிந்தவர்களா யிருத்தல் வேண்டும். மக்கள் எளிய பழக்க வழக்கங்களை உடையவர்களா யிருத்தல் வேண்டும். எல்லா மக்களும் சம அந்தஸ்து உள்ளவர்களாகவும், சம நிலையில் செல்வம் உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும். மேலும், உரிமை, அதிகாரம் இவைகளை உபயோகிக்கும் காரியத்தில் ஒரேவித மனப் போக்குள்ளவராயும் இருக்க வெண்டும். மக்கள், அதிக ஆடம்பரமான வாழ்க்கை வாழ்பவர்களாக இருக்கக் கூடாது"

மேலே கண்ட ரூசோவின் நாட்டுத் தத்துவப்படி பார்த்தால் ஒரு குடியாட்சி நடைபெறுவதற்கு இந்தியா தகுதியற்றது என்பது தெளிவாகும். திராவிடஸ்தான், இந்துஸ்தான், பாக்கிஸ்தான் என்று இன வாரியாக பிரிக்கப்படுவதே நேர்மையான குடியாட்சிக்கு வழி. ஆனால், ஏகாதிபத்திய வெறிகொண்ட வடவர்கள் இந்த நேர்மை வாதங்களை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அதற்குக் காரணம், காங்கிரசின் பேராசை கொண்ட வழா வழாக் கொள்கைகளே!

ஆதியில் காங்கிரஸ் கட்சி ஓர் அரசியல் இயக்கமாக ஆரம்பிக்கப்படவில்லை. உத்தியோகத்திற்கு விண்ணப்பம் செய்யும் நிறுவனமாகவே அது அமைக்கப்பட்டது, 1857-ல் ஏற்பட்ட சிப்பாய்க் கலகத்தால், ஆங்கில ஆட்சிக்கு இந்தியர்கள் மீது நம்பிக்கை இல்லாமற் போய்விட்டது. அதன் பயனாக, ஏற்கனவே உத்தியோகம் வகித்த இந்தியர்கள் பலர், உத்தியோகத்திலிருந்து நீக்கப்பட்டனர். புதிய உத்தியோகஸ்தர்களாக ஆங்கிலேயர் அமர்த்தப்பட்டனர்.

இதை உணர்ந்த வடவர்கள் ஃகியூம் என்கிற ஆங்கிலேயன் ஆலோசனைப்படி 1885-ல் காங்கிரசை ஏற்படுத்தி ஆங்கில மன்னருக்கும், ஆங்கில ஆட்சிக்கும் விசுவாசப் பிரமாணம்செலுத்தி உத்தியோகத்திற்கு மனுப்போட்டனர். ஆங்கில ஆட்சியாளருக்கும், இந்திய அரசாங்கத்தில் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களை நியமிப்பதால் நிர்வாகச் செலவு அதிகமாகி வரவு செலவைச் சரிகட்ட முடியாமல் போவதை உணர்ந்து, இந்தியர்களைக் குறைந்த சம்பளத்தில் நியமிக்க தலைப்பட்டனர். இதுபற்றிய, திரு. லாலா லஜபதிராய் அவர்களின் 'துரதிருஷ்ட இந்தியா' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள்கள், பின்னல் விரிவாகத் தெளிவு படுத்தும். காங்கிரசின் ஆரம்ப கால வரலாறு இவ்வளவுதான்.

காலக் கிரமத்தில், வடவர்களுக்கு ஆதிக்க ஆசை பிறந்தது. அதற்கேற்றபடி காங்கிரசின் 'உத்தியோக விண்ணப்பக் கொள்கை' மாற்றப்பட்டு 'சுதந்திரம்' என்ற பேரால் ஆங்கிலேய ஆட்சி எதிர்ப்புக் கொள்கை உருவானது.

ஆயினும், காங்கிரசில் சமுதாய, பொருளாதார, அரசியல் கொள்கைகள் நீண்ட காலமாகவே வரையறுக்கப்படாமல் இருந்து வருகின்றன. இந்த நிலைமை காங்கிரசின் இலட்சியமான ஆங்கிலேய ஆட்சி ஒழிப்பு முடிந்த பிறகும்கூட நீடித்துக் கொண்டிருப்பதுதான் ஆச்சரியம்!

சமுதாயக் கொள்கை இல்லாத காரணத்தினால்தான் வடக்கே நவகாளி முளைத்தது. இனியும் அது தெற்கில் முளைக்கலாம்!

அரசியல் கொள்கை இல்லாத காரணத்தால்தான் ஒருபுறத்தில் முதலாளிக்கும் இன்னொரு புறத்தில் தொழிலாளிக்கும் தோழனாக நடிக்க முடிகிறது.

பொருளாதரக் கொள்கை இல்லாத காரணத்தால்தான் மிக மிக மோசமான வேலையில்லாக் கொடுமையும், பஞ்சமும், பட்டினிச் சாவுகளும், பிச்சைக்காரக் கூட்டமும் பெருகி வருகின்றன.

மேலே கண்ட அரசியல் பொருளாதாரம், சமுதாயம் ஆகியவை கொள்கையாக வரையறுக்கப்படாததால்தான் திரு. இராசகோபாலாச்சாரி போன்ற புராணீகர்கள், குன்றக்குடியார் போன்ற துறவிகள், அரசியல் வாதிகளாக நடிக்க முடிகிறது!

இவ்வாறு காங்கிரசில் கொள்கையில்லை என்பதற்கு ஆதாரம் வேண்டுமானல், கடந்த 18-1-55-ல் திரு. அரிகிருஷ்ண மேத்தாப், என்பவர் பத்திரிகை நிருபரிடம் கூறியதே போதுமானது.

திரு. அரிகிருஷ்ண மேத்தாப் காங்கிரசின் மேல் வரிசையில் இருப்பவர்களில் ஒருவராவார். அவரிடம் பத்திரிகை நிருபர் கேட்டதும், அவர் பதில் கூறியதும் வருமாறு!

நிருபர்: ஆவடிக் காங்கிரசில் நிறைவேற இருக்கும் சோஷலிசக் கொள்கைத் தீர்மானம் பற்றித் தங்கள் கருத்தென்ன!

மேத்தாப்: இதுவரை காங்கிரசின் பொருளாதாரக் கொள்கை எவ்விதத் திட்டமும் அற்ற குறிக்கோளாக இருந்தது. இப்பொழுதுதான் திட்டமான கொள்கை அமைப்பு ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறு பதில் கூறி யிருக்கிறார் திரு. அரிகிருஷ்ண மேத்தாப். ஆனல், இதே கொள்கையின் மீது கருத்துரை கூறிய திரு. மௌலானா அபுல்கலாம் ஆசாத், இந்த "சோஷலிசக் கொள்கைபற்றி பணக்காரர்கள் அஞ்ச வேண்டியதில்லை. இது கடுமையாக அமுல் நடத்தப்படமாட்டாது" என்கிறார்.

இதை ஆலோசிக்கும்போது பெயரளவில் சோஷலிசமும், செயலளவில் முதலாளித்துவமும். இருந்து வரும் என்பது தெளிவாகிறது.

உண்மையிலேயே 'சோஷலிசம்' அமுல் நடத்தப்பட்டாலும் திராவிடர்களுக்கும், திராவிட நாட்டுக்கும், எவ்வித முன்னேற்றமும் ஏற்படப் போவதில்லை. தனிப்பட்ட வடவர்கள் சுரண்டுவதற்குப் பதிலாக வடவரின் அரசாங்கம் சுரண்டிக் கொண்டிருக்கும் இதுதான் இப்போதுள்ள ஆட்சியில் 'சோஷலிசம்' அமுல் நடத்துவதால் ஏற்படும் பலன். மேலே கண்ட காரணங்களினால்தான், காங்கிரஸ் ஒரு அரசியல் ஸ்தாபனமல்ல—போர்ப்படை என்று கூறுகிறோம்.

இத்தகைய சூழ்நிலையில் தமிழர்கள்—திராவிடர்கள் தங்களுடைய அரசியல் அறிவையும், தங்களுடைய வலிமையையும் உரிமையையும் உணர்ந்து கொள்வதோடு, திராவிடம் ஏன் தனி நாடாக இருக்க வேண்டும் என்கிறோம் என்பதைத் தத்துவ ரீதியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழர் தாழ்ந்தது ஏன்?

மிகப் பழங்காலம் தொட்டு தமிழகம் முடியாட்சியின் கீழ் இருந்து வந்திருக்கிறது. சேரன், சோழன், பாண்டியன் என்று நம்மால் பெருமையாகப் பேசப்படுவோர் முடியாட்சி நடத்திய மன்னர்களே!

"அத்தகையவர்கள் ஏன் பெருமைப் படுத்தப்பட வேண்டும்" என்றால், இதர நாட்டு அரசர்களுடன் மூவேந்தர் பரம்பரையை ஒப்பிடும்போது, மூவேந்தர் வழி வந்தோர் அனைவரும், குடி தழுவிக் கோலோச்சிய உத்தமர்களாக இருப்பதால் தான்.

எத்தனைதான் குடிதழுவிக் கோலாட்சி நடத்தப்பட்டாலும், அங்கே குடியாட்சியின் இலக்கணங்களைக் காண முடியுமா? முடியாட்சி—பரம்பரைச் சொத்து! ஆள்வதற்கென்றே ஒரு பரம்பரை! அந்தப் பரம்பரையில் வந்தோர் உரிமையோடு ஆட்சி புரிவர்! சோழன் மகன் சோழன்! பாண்டியன் மகன் பாண்டியன்! அவர்கள் ஆள்பவர்கள்! மற்றவர்கள் ஆளப் படுபவர்கள்—குடிகள்!

குடிகளுக்கும் அரசாங்கத்திற்கும் முறையே, வரிகொடுத்தல், வரி வாங்குதல் என்கிற தொடர்பு தவிர, வேறு தொடர்பு இடையாது. போர்க் காலங்களில் குடிகளை அழைப்பான்—படைத் துணை போக வேண்டும். அந்நிய அரசர்கள் படை எடுத்துவந்து நாடு நகரங்களைச் சூறையாடுவார்கள். ஏரி குளங்களை உடைப்பார்கள்! வயலை, தோட்டங்களை அழிப்பார்கள்! அவற்றையெல்லாம் 'சாதகபலன்' என்று சகித்துக் கொள்ள வேண்டும்! அரசன் இட்டது ஆணை! வைத்தது சட்டம்! கீழ்ப்படிந்து வரியைக் கொடுப்பதுதான் குடிகளின் உரிமையும் கடமையும்!

இந்த முறையில்தான் உலகில் அரசாங்கம் தோன்றிய காலம் தொட்டு, வெள்ளை ஏகாதிபத்திய முடிவுக் காலம்-ஏன்? இன்று வரை வாழ்ந்து வருகிறோம்.

இந்த முடியாட்சி முறையில் "நாடு என்றால் என்ன?" என்கிற சிந்தனைக்கே இடமில்லை. சிந்தித்ததும் இல்லை. வேந்தர்களின் தோள்வலிமைக்குத் தகுந்தபடி நாட்டின் எல்லை விரியும்—ஒடுங்கும்! சில சமயங்களில் அப்படியே இருந்தாலும் இருக்கும்!

அரசனுடைய ஆட்சி எதுவரை பரவுகிறதோ அதுவரை ஒரே நாடு—அவனு

6-ம் பக்கம்

'சமதர்ம பாணியில் சமுதா

அகிலம், இதுவரை தன்போக்கில் ஏற்பட்ட மானிட வாழ்வின் திருப்பு மையங்களை, சரித்திர நிகழ்ச்சிகள் தனும் ஒளி விளக்குகளால் உலகினருக்கு அறிவித்துக் கொண்டிருக்கிறது. உலகத்தின் பல பாகங்களில் சிறந்த சிந்தனையின் பயனாய் ஏற்பட்ட புரட்சிகரமான மாறுதல்கள் மனித சமுதாயத்தின் நாகரீக வாழ்வை ஒரு சிறந்த ஒழுங்கு முறைக்கு கொண்டுவரும் போக்கில் உதவி இருக்கின்றன.

இந்நிலையில் இதுவரையில் 'அற்புதங்கள்' 'குழப்பம்' ஆகியவைகள் மட்டுமே வெளிநாடுகளுக்கு அறிமுகமாக்கியிருக்கும் இந்தியத் துணைகண்டம் இப்பொழுது "அபத்தங்கள்" மூலம் தன் பெயரை உலகுக்கு காட்டிக்கொள்ள முனைந்திருக்கிறது. தலைசிறந்த தத்துவங்கள், விஞ்ஞான ரீதியான கொள்கைகள் இவைகளின் கண்டு பிடிப்பால் உலக மக்கள் சமுதாயத்தையே திருத்தியமைக்கும் பணியில் ஆக்கமுறையில் ஏதும் செய்ய இந்தியாவால் முடியாவிட்டாலும் "குழப்ப முறையில்" தன் பங்கைச் செலுத்த இந்தியா இதுவரை தவறியதே கிடையாது. இந்தியத் துணைக்கண்டத்தின் அயல் நாட்டு கொள்கைகள் எப்படி ஒரே குழப்பமயமாக இருக்கின்றதோ அப்படியே உள்நாட்டு விவகாரத்திலும் பெரும் குழப்பங்களை உண்டாக்க மிக நெருங்கிய காலத்திலிருந்து தீவிரமாக பலமுயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இதற்கு சிகரம் வைத்த முறையில் ஆளும் கட்சியினரான காங்கிரஸ் தத்துவ ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் எடுத்துக் கொண்ட முயற்சி ஆவடியில் நடத்திய தங்கள் கட்சியின் 60–ம் ஆண்டு மாநாடாகும்.

சென்ற மாதம் 17–ந் தேதி முதல் 23–ந் தேதி முடிய முதலாளிகளின் சாவடியாகக் காட்சியளித்த ஆவடியில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் 60–ம் ஆண்டு மாநாடு, வழக்கம்போல அகில இந்திய காங்கிரஸ் தலைவர்களால் பெருமையாக புகழப்பட்டு, பணக்காரர்களின் பாராட்டுகளுடனும், பட்டினி கிடக்கும் பாமரர்களின் கூக்குரலுடனும், மதிப்பிடப்பட்ட 10 லட்சம் ரூபாய் பணச் செலவின் படாடோபமாக ஆரம்பமாகி முடிவுற்றது. இம்மாநாட்டை 'சரித்திர முக்கியத்துவம்' உடையது என்றும், காங்கிரஸ் வரலாற்றிலேயே ஒரு மைல் கல்' என்றும் 'சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய மாநாடென்றும்' 'சென்னை மீண்டும் வழி காட்டுகிறது' என்றும் கட்டங்கட்டி செய்திவெளியிட்டு விளம்பரம் தேடித்தர, பெரும் பெரும் காங்கிரஸ் முதலாளிகளின் செய்தித்தாள்கள் வழக்கம் போல தவறவில்லை. நாட்டின் முற்போக்கு இயக்கங்களால் குறிப்பாக தென்னாட்டு விடுதலை இயக்கத்தினால் கூர்மையாக கவனிக்கப்பட்ட இம்மாநாடு அதன் விளம்பரத்துக்கு விரோதமான முடிவுகளைக் கண்டதோடு மட்டுமல்லாமல் அதை ஆதாரபூர்வமாக மக்கள் மன்றத்தின் முன்னால் வைக்கவும் முன்வந்திருக்கிறது.

பத்தாம்பசலிக் கொள்கையிலே நம்பிக்கை வைத்து முதலாளிகளின் கூடாரமாகவும் ஊழல்களின் இருப்பிடமாகவும் உள்ள பிற்போக்கு கட்சியான ஆளும் காங்கிரஸ் தன் மாநாட்டைக் கூட்டி நாட்டு மக்களுக்குச் சாதகமான பலம் பயக்கக்கூடிய, வறுமை, அறியாமை, வேலையின்மை ஆகியவைகளின் கோரப்பிடியிலே சிக்கிச் சீரழியும் மக்களை சீரும் சிறப்பும் பொருந்தியவர்களாக மாற்ற முடிவெடுக்கும் என்று எதிர்பார்ப்பது ஏமாளித்தனம் என்றாலும் அந்தப்பாசையைக் கூடவிடாமல் ஏதாவது ஒரு நன்மைக்காவது வழி ஏற்படும் என்று எதிர்பார்த்துக் கிடந்தது இந்நாட்டு ஏழையர் சமுதாயம். ஆனால் ஆவடியில் நடைபெற்ற மாநாடு இந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, புத்திசாலித்தனமான நேரடி நடவடிக்கை ஏதும் எடுக்காமல் வெறும் வாய்ப்பந்தல் போட்டு ஒரு அழகான உலகத்தை கற்பனை செய்துக் காட்டி 'அதில் வாழ்வீர்; தோழரீர்; ஆனால் பொறுமை வேண்டும்' என்று கூறி 'ஏட்டிலே சர்க்கரை என்று எழுதி அதை சுவைபார்த்து இனிமையை ருசி' என்ற முறையில் திட்டம் தீட்டியிருக்கிறது. இன்னும் சற்றுத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் கூறவேண்டுமானால் ஆவடி மாநாடு இந்நாட்டு மக்களுக்கு ஒரு பெரும் மோசடி செய்யத் துணிந்திருக்கிறது.

பிற்போக்காளர்களால் கூட்டப்பட்ட இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானங்களில் இரு தீர்மானங்கள் வாழ்விழந்து, வாழ வழி கேட்கும் மக்களை மேலும் கிழடையச் செய்யும் முறையில் செய்யப்பட்டுள்ளது. வெறும் அழகான வார்த்தைகளின் வர்ணஜாலங்களால் வாழ்விழந்து கிடக்கும் இந்நாட்டு மக்களை வாழவைத்து விடுவதாக போக்குக் காட்டி ஏய்க்கும் முறையில் அமைந்துள்ளது.

ஒன்று நேருவின் பொருளாதார சம்பந்தமான தீர்மானமும், இரண்டாவது, பந்தின் தேச ஐக்கிய தீர்மானமுமாகும். இவ்விரண்டும் சர்க்கரை பூசப்பட்ட நஞ்சாகும். இது வெறும் வார்த்தைக் கோர்வையல்ல, தர்க்கரீதியான வாதத்தினால் நிரூபிக்கப்படப் போவதாகும்.

நேருவின் சாதாரண பேச்சுபோல, அவர் தீர்மானமும் மிக நீண்டதாகையால், இடநெருக்கடி கருதி, அவசியமின்மைக் கருதியும், அந்நகல் தீர்மானத்தைக் கொடுக்காமல் அதன் சாராம்சத்தை மட்டும் கொடுக்க விரும்புகின்றேன். அது 'காங்கிரஸ் கட்சியின் லட்சியம் ஒரு சமதர்ம சமுதாயத்தை அமைப்பதாகும்; அதற்கான முயற்சியே சமதர்ம பாணியில் சமுதாயத்தை மாற்றி அமைப்பது' என்பதே. இந்நகல் தீர்மான வாசகங்களை விமரிசனம் செய்வதற்கு முன்னால் நேருவின் இத்தீர்மானத்திற்கு மூலகாரணங்கள் என்ன என்பது ஆராய்வது கட்டுரையின் உயிரோட்டத்திற்கு முக்கியமானதாகும்.

பண்டித நேருவின் இத்தீர்மானத்திற்கு முக்கிய மூலகாரணமாய் இருப்பதாக நான் கருதுவது பண்டிதரின் சமீபகாலத்திய சீன விஜயம்தான். பண்டிதர் பெரும் பணக்காரக் குடும்பத்தில் பிறந்து, வெளிநாட்டில் படித்துப் பட்டம் பெற்று, முதலாளித்துவ மனம் பெற்றிருந்தாலும், புத்தகங்களை படிக்கும்போது உணர்ச்சி வசப்படுவார் போலும்! அதன்றி சீன விஜயத்தின் போது, மிகக் குறைந்த கால அளவில் அவர்கள் அடைந்துள்ள வெற்றிகளைக் கண்டபோது 'நாமும் ஏன் இத்தகைய ஒருமாற்றத்தை ஏற்படுத்தக் கூடாது?' என்று நினைத்திருக்கலாம். எனவே அவர்தம் சீன பயணத்திற்குப் பின் இத்தீர்மானத்தை உருவாக்கி இருக்கக் கூடும், அவர் நோக்கம் நல்லதாக இருக்குமானால்.

'சமதர்ம சமுதாயத்தை'யே இலட்சியமாகக் கொண்டவர்கள் நேரடியாக அச்சமுதாயத்தை உருவாக்க பாடுபடாமல், ஏன் 'சமதர்ம பாணியில்' சமுதாயத்தை அமைக்க முயற்சிக்கிறார்கள்? என்கிற விவாதத்திற்குரிய பிரச்சினையை எழுப்புவதற்கு முன் 70 ஆண்டு காங்கிரஸ் கட்சி வாழ்வில் இதுவரையில் பேசப் படாத ஒரு புது இலட்சியம் மன்னிக்க வேண்டும்—ஏழரை ஆண்டு கால காங்கிரஸ் அதிகார ஆட்சியில் குறிப்பாகக் கூட உணர்த்தப்படாத ஒரு இலட்சியம் ஏன் 1955ம் ஆண்டு மாநாட்டில் மட்டும் பேச வேண்டும் என்கிற கேள்விக்கு "அந்நாள் முதல் ...நாம் அதிகமாக சோஷலிசம் என்று பெயரிட்டு பேசவில்லையென்றாலும், அடிப்படையில் காங்கிரஸின் சிந்தனை சோஷலிசத்தன்மை வாய்ந்ததாக இருந்தது" என்ற நேருவின் சந்தர்ப்பவாதமான பேச்சின் ஒரு பகுதியைப் பார்த்தால் அவரின் சீனப் பயணத்திற்குப் பின்தான் இச்சிந்தனை உருவாகியிருக்கும் என்ற கருத்தையே பதிலாகக் கொள்ள இடமேற்படுகிறது.

தென்னாட்டில் செத்து, பிணக்குழி நோக்கி பிரயாணம் செய்யும் காங்கிரசுக்கு, ஆவடியில் இந்த ஆண்டு காங்கிரஸ் மாநாடு கூட்டுவதின் மூலமும், அதில் இத்தகைய புதுமையும் பொலிவும் உள்ள வார்த்தைகளின் மேல்—பூச்சில் பிற்போக்கான கொள்கைகளை கொண்டுள்ள தீர்மானங்களை கொண்டு வருவதின் மூலமும் உயிரூட்டி, பல பிரச்சினைகளுக்கு முடிவு கட்டி விடலாம் என்று நேரு பண்டிதர் பகற்கனவு காண்கிறார்.

இந்தியத் துணைகண்டம் விடுதலையடைவதற்கு முன்பும் சரி, பின்பும் சரி வடநாட்டைவிட தென்னாடு எப்பொழுதுமே சித்தாந்த பூர்வமான சமதர்மத்தில் நம்பிக்கை வைத்து, சமதர்ம மனப்பான்மை பெற்று வந்திருக்கிறது. இந்த மனப்பான்மை, இந்திய விடுதலைக்குப் பின்னால், பிற்போக்கு கொள்கையினரான காங்கிஸ் கட்சியின் அதிகாரத்தில், அதன் திறமையற்ற நிர்வாகத்தில் பெரும் அளவில் வெகு வேகமாக வளர்ந்து வருகிறது அதே சமயத்தில் வடநாட்டில் தன் இன மக்களுக்கு உதவும் முறையில், முதல் ஐந்தாண்டு திட்டத்தின் மூலமும், அதன் முன்பும், வடநாட்டு ஏகாதிபத்தியம் செய்து கொடுத்த பல பெரிய நீர்பாசன திட்டங்களும், ஏராளமான பெரும் பொருள் உற்பத்தி தொழிற்சாலைகளும், வடநாட்டு மக்களின் காங்கிரஸ் 'பக்தியை' அதிகப்படுத்தி, அதற்கு முன் அவர்களிடமிருந்த கொஞ்சநஞ்ச சமதர்ம உணர்ச்சியையும் அழித்து விட்டது. அதற்குப் பதிலாக மொழிவெறியையும் மதவெறியையும், இனப்பாகுபாடுவெறியையும் வடநாட்டு மக்கள் தங்கள் ஏகபோக சொத்தாக்கிக் கொண்டார்கள்!

இது ஒரு மறுக்கமுடியாத உண்மையாகும். இதை மேலும் தெளிவுபடுத்த வேண்டுமானால், சென்ற பொதுத்தேர்தலின் போது வடநாட்டு கட்சிகளின் நிலைமைகளைக் கவனித்தால், கம்யூனிச சோஷலிச முற்போக்கு இயக்கங்களுக்கு எதிர்பாரா அளவில் பெரும் படுதோல்விகளும், ஜனசங்கம், இந்துமகா சபை போன்ற மதவெறியை வளர்க்கும் ஸ்தாபனங்களுக்கும், சந்தர்ப்பவாதக் கொள்கைகளையுடைய பிரஜா, சோஷலிஸ்ட் கட்சிகளுக்கு சிறிதளவு வெற்றியும் காங்கிரஸ் கட்சிக்கு பெருத்த அளவில் ஆதரவு கிடைத்ததும் சான்றாகும். தென்னாட்டில் வளர்ந்து வந்த இந்த சித்தாந்த பூர்வமான சமதர்ம உணர்வுதான், காங்கிரஸ் முதலாளித்துவ, பிற்போக்கு ஸ்தாபனத்திற்கு பெருந்தோல்வியை இங்கு தேடித்தந்தது.

உதாரணமாக தோழர் அனந்த சயனம் அய்யங்கார், இந்திய பாராளு மன்றத்தை ஒவ்வொரு ஆண்டும் சென்னை ஐதராபாத் போன்ற இடங்களில் நடத்துவதின் மூலம் தென்னாட்டில் வடநாட்டைப்பற்றி யிருக்கும் தப்பபிப்பிராயம் நீக்க முடியும் என்று கூறியிருப்பதின் மூலம் தென்னாட்டிற்கு வடநாடு முக்கியத்துவம் அளிப்பதில்லை என்ற உண்மையை மக்கள் மத்தியிலிருந்து சிறிது காலத்திற்காவது தள்ளிவைக்க தென்னாட்டில் ஒருமுறை மாநாடு கூட்டிவிட்டால் மக்கள் தங்கள் உரிமை உணர்வை மறந்துவிடுவார்கள் என்றும் எதிர்பார்க்கிறார், ஏய்த்துப் பிழைக்கும் வடநாட்டு முதலாளிகளின் பாதுகாவலரான பண்டிதர்! எனவே தீர்க்கமான சிந்தனைக்குப்பின் இந்நிலையை சமாளிக்க பண்டிதர் மக்களின் மன உணர்ச்சிகளை கொள்கை மாற்றமில்லாத வெறும் வார்த்தை மாற்றமுள்ள தத்துவங்களை கூறி அவர்களை ஏய்த்து மறுபடியும் தென்னாட்டில் வாழ்விழந்த காங்கிரசுக்கு வாழவழி தேடுமுகத்தான் 'வார்த்தை ஜாலவித்தை' செய்து 'சமதர்ம பாணியில் சமுதாயத்தை நிறுவப் போவதாக கூறுகிறார்! நாம் மேற்கூறிய காரணத்தை அவருடைய நகல் தீர்மானத்தைக் குறிப்பிட்டு தினமணி ஜன. 19–ந் தேதி தீட்

டி. கே. இராசாபாதர்

டிய தலையங்கத்தையே காட்டி மெய்ப்பிக்க முடியும். தலையங்கம் கூறுவதாவது:—

'ஒரு காலத்தில் 'காந்தீயம்' என்ற சொல்லில் மக்களுக்கு எவ்வளவு கவர்ச்சி இருந்ததோ, அதேபோன்ற கவர்ச்சி 'சோஷலிசம்' என்ற சொல்லுக்கும் ஏற்பட்டிருக்கிறது...' இவ்வாறு மக்களின் உணர்ச்சிகள் அவ்வப்போது மதிப்பிடப்பட்டு அதற்குத் தக்க மனப்பான்மையை உருவாக்குவதன் மூலம் தான் எந்த ஸ்தாபனமும் ஜீவசக்தியுள்ளதாக நீடிக்க முடியும்'

காந்தீயத்தில் கவர்ச்சி இருந்ததாம்; ஒரு காலத்தில்! இப்போது சோஷலிசம்!! எனவே 'போர்டு' மாறுகிறது!! மக்கள் கவர்ச்சி எப்படியோ அப்படியே கட்சி! என்ன தீர்க்கமான கட்டுக்கோப்புடைய அமைப்பு பாருங்கள் காங்கிரஸ்! இது கிடக்கட்டும், 'மக்கள் மனப்பான்மையை மதிப்பிட்டுதான் கட்சி ஜீவனுடன் இருக்க முடியும்' தினமணியின் தீர்ப்பு இது. என்வேதான் நாம் கூறுகிறோம், தென்னாட்டில் இறக்கும் நிலையிலுள்ள காங்கிரஸை இந்நாட்டு மக்களுக்கே உரித்தான சமதர்ம மனப்பான்மையைத் தூண்டி, நேரு உயிரூட்ட முனைகிறார் வெறும் வார்த்தை வெத்து வேட்டுக்களால்'' என்று.

தென்னாட்டில் காங்கிரஸை மிகவும் ஆழத்தில் குழிதோண்டி புதைத்த மக்கள் ஆந்திரர் ஆவர். அங்கு சமீபத்தில் நடக்கப் போகும் பொதுத் தேர்தலில் இந்த ஆவடி மாநாடும், அதன் பெருளாளாதார தீர்மானமும், காங்கிரஸ் ஸ்தாபனம் பெரும் வெற்றிபெற பெரும் உதவிபுரியும் என்று எதிர்பார்க்கிறார் ஏமாற்றமடைய விரும்பாத நேருபண்டிதர். ஆவடி காங்கிரசில் நிறைவேற்றப்பட்டிருக்கும் 'சமதர்மப் பாணியில் சமுதாயம்' கூட இதுபற்றியே நிறைவேற்றப்பட்டதோ என்ற ஐயமும் ஏற்படுகிறது. இல்லையெனில் அடுத்த ஆண்டிற்கு இப்பிரச்னையை எடுத்துக்கொண்டிருக்கலாமல்லவா? ஆனால் இது ஒரு சிறு காரணம்தான். இதற்கு அடிப்படையான பல பெருங் காரணங்கள் இருப்பதை நாம் அறிவோம். ஆந்திரத் தேர்தலில் காங்கிரஸ் பிற்போக்கு ஸ்தாபனத்திற்கு எதிராக கூட்டு முயற்சியில் கம்யூனிஸ்டுக் கட்சியும் பல கட்சிகளும் முன்னணி அமைத்து முயற்சி செய்கின்றன. இந்த கூட்டு முயற்சியில் குழப்பம் ஏற்படுத்தி 'சமதர்மபாணி' என்ற வார்த்தைகள் மூலம் அதைச் சிதறடிக்க காங்கிரஸ் பிற்போக்கு கட்சியின் தலைமைப்பீடம் எண்ணியிருந்தால் அதிலென்ன தவறு இருக்க முடியும்!

நேருவின் பொருளாதார தீர்மானத்-

யம்' : ஒரு சந்தர்ப்பக் கூச்சல்

தைக் கண்டு அகில இந்திய கட்சிகள் கூட தடுமாட்டமடைகின்றன. இத்தீர்மானத்தை நன்கு உணரமுடியாத, அவசரத்தையே தங்கள் நடைமுறையாகக் கொண்டுள்ள கட்சிகள் சில, தீர்மானத்தைக் கண்டதும் 'காங்கிரஸ் தன் பங்குக்கு வருகிறதே என்ன செய்வது!' என்று தன் கண்களை மூடிக்கொண்டு மௌனநிலையை கொண்டிருக்கும் மந்த நிலையையும், 'காங்கிரஸ் எதுவும் செய்யும்; நமக்கு மறுபடியும் அங்கேதான் இடம்' என்று ஓடும் சந்தர்ப்ப வாதிகளைத் தலைவராகக் கொண்ட கட்சிகள், கண்களை ஆவலோடு அகல விரித்துப் பார்க்கும் காட்சியும், 'காங்கிரஸ் இதை செய்து விடுமோ!' என்று அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்ட நிலையிலிருக்கும் சில கட்சிகளையும், 'பிற்போக்கு கட்சியால் ஒரு புதுமையான, புரட்சிகரமான திட்டத்தையும் அமுலாக்க முடியாது. ஓநாய், ஆட்டுக் குட்டியை தோழனாகக் கொள்ளாது' என்பதை நன்குணர்ந்த கட்சிகள் இத்தீர்மானத்தை அலட்சிய நோக்கோடு பார்ப்பதையும் உங்கள் மனக் கண் முன்னுள் நிறுத்துங்கள். கட்சிகளின் நிலை தான் என்ன!

முதலாவதாக இன்றைய இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி தன் உயர்ந்த லட்சியமாக சமதர்ம சித்தாந்தை வைத்துக் கொண்டு நடைமுறைத் திட்டமாகவும் உடனடிப் பிரச்னையாகவும், 'உலக சமாதானம் வாழ்க' என்று கூச்சல் போடுவதிலும், நேரு—கு ஒப்பந்தம் வாழ்க என 'கோஷம்' எழுப்புவதிலும் மட்டும் இருக்கிறது. எனவே நேருவின் பொருளாதார கொள்கைப்படி சமதர்மமும், வெளிநாட்டுக் கொள்கைப்படி உலக சமாதானமும் அறிவிக்கப்பட்டிருப்பது கண்டு கம்யூனிஸ்டுகள் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்து 'காங்கிரஸ் அரசாங்க முதலாளித்துவமாக மாறுகிறது' என்று டாங்கேயின் கர்ஜனையை எதிரொலிப்பதோடு நின்றிருக்கிறது! இதை எதிர்பார்த்தே நேரு பண்டிதர் ஆவடி காங்கிரசுக்கு அளித்த தம் ரிப்போர்ட்டில் கம்யூஸ்டுகளைப் பற்றி குறிப்பிடுகையில் 'கம்யூனிஸ்டு கட்சி, தான் படித்ததையோ அல்லது மற்றவர்களிடமிருந்து கேட்டதையோ தான் கிளிப்பிள்ளை மாதிரி திருப்பிக் கூறமுடியும்' என்று கூறி 'இது எனக்குத் தெரியும் ஆதலால்தான் மேற்படி தீர்மானம் மூலம் அவர்கள் வாயை அடைத்துவிட்டேன்,' என்று கூறாமல் கூறுகிறார்.

இரண்டாவதாக பிரஜா — சோஷலிஸ்டுக் கட்சியின் நிலையைக் கவனிப்போம். இதுபற்றி டாக்டர் ராம் மனோகர் லோஹியா அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில், 'இன்றைய காங்கிரஸ் கட்சியின் கொள்கைமாற்ற மோகத்தில் சில பிரஜா—சோஷலிஸ்ட் தலைவர்கள் காங்கிரஸ் கட்சியை நோக்கி ஓடுகிறார்கள். அதே சமயததில் காங்கிரஸில் வெறுப்படைந்து வெளியேறுபவர்களும் உண்டு; பிரஜா சோஷலிஸ்ட் தலைவர்கள் அங்கு போவது போலவே வெறுப்படைந்த அவர்கள் நேராக இங்கு வரவேண்டும்' என்று குறிப்பிட்டு கட்சி உறுப்பினர்களின் நஷ்டக் கணக்கைப் போட்டு எண்ணிக்கை பேரம் நடத்துகிறார். அவர் மேலும் கூறுகிறார் 'காங்கிரசின் (நேருவின்) தீர்மானம் கட்சிகளை பிளவுபடுத்த செய்த சதியேயாகும்' என்று தெளிவாக்குகிறார். எனவே சந்தர்ப்பவாத தலைமைகளின் போக்கை நன்குணர்ந்த நேரு இத்தீர்மானத்தின் விளைவை முன்பே உணர்ந்து, காங்கிரசில் அளித்த ரிப்போர்ட்டில், 'பிரஜா—சோஷலிஸ்டு கட்சி தன் மூலபலத்தை இழந்து சீர்குலைய ஆரம்பித்து விட்டது' என்று கூறியுள்ளார்.

இவ்வாறு கட்சிகளின் பிளவை எதிர்பார்த்து நேரு செய்த சதியில் யார் விழுந்தாலும் விவரம் தெரிந்த, விழிப்புணர்ச்சியுள்ள தென்னாட்டு விடுதலை இயக்கத்தினர் மட்டும் முன்கூட்டியே நிலைமைகளைத் தெரிந்து பிற்போக்குவாதிகளின் இம்முடிவை 'அலட்சியப் படுத்துவர்' என்பது மட்டும் உறுதி.

தென்னாட்டில் வளர்ந்துவரும் விடுதலை இயக்கத்தை அழித்தொழிக்க வேண்டும் என்ற கருத்தில் மற்றொரு தீர்மானமும் கொண்டுவரப் பட்டுள்ளது. அத்தீர்மானத்தில், தேச ஐக்கியத்தை வற்புறுத்தி, 'குறுகிய மாகாணப்பித்து, மொழிப்பித்து, பிரிவினை மனப்பான்மை ஒழிய வேண்டும்' என்றும் 'ஜாதிமத வேறுபாடுகள் கூடாது என்று காங்கிரஸ் கருதுகிறது.' என்று கூறியும் பயத்தாலும், நயத்தாலும் பகுத்தறிவு இயக்கத்தினரின் வேகமாக நடைபோடும் பாதையை தடை செய்ய முடியும் என்று பகற்கனவு கண்டுள்ளனர். ஆவடி மாநாடு, நாட்டிற்கு செய்யும் மோசடியை நன்கு உணரும் பகுத்தறிவு இயக்கத்தினர் 'தென்னாடு, வடநாட்டின் சேவடி தொழவே இந்த ஆவடி என்பதை உணர்ந்து அவர்கள் வேடம் என்னவானாலும் நம் லட்சியம் தனிநாடே' என்று முழங்கி வருகின்றனர்.

உலக சமாதானத்தில் தனக்கு அக்கறை இருப்பதாக அயல்நாடுகளுக்கு காட்டிக் கொள்ளவும் உள்நாட்டில் சமதர்ம பாணி சமுதாயம் அமைக்கப் போவதாகவும் டம்மாரமடிக்கும் காங்கிரஸ் கட்சியைக் கண்டு விடுதலை இயக்கத்தினர் ஒரு அலட்சியப் புன்னகையைத் தான் சிந்துகிறார்கள்.

எனவே நேரு பண்டிதர் கட்சிப் பிளவுகளை எதிர்பார்த்தே தீர்மானங்களை தீட்டினாரென்று முடிவுகட்ட முடிகிறது. அவர் கனவு பலிக்குமா! பலிக்காதா! என்பது வேறு பிரச்சினை...

இதுவரை நேருவின் தீர்மானம் எந்த விதமான உள்நோக்கத்தோடு, எந்த விதமான சூழ்நிலைகளில் கொண்டுவரப் பட்டிருக்கிறது என்பதையும் அது உண்டாக்கும் மாறுதல்கள் பற்றியும் ஆராய்ந்தோம்.

இனி இந்த பொருளாதார சம்பந்தமான தீர்மானம், உண்மையான சமதர்ம சமுதாய அமைப்பை நிர்மாணிக்க உதவுமா! என்றும் தீர்மானத்தின் நேரடிப் பொருளில் அமுலாக்கப்படுமா என்பதையும் ஆராய்வோம்.

இந்திய தேசிய காங்கிரஸ், தன் 70 ஆண்டு வாழ்க்கையில்—$7\frac{1}{2}$ ஆண்டு அதிகார ஆட்சியில்ஆவடிகாங்கிரஸில் முதன் முறையாக தன் இலட்சியம் சமதர்ம பாணியில் சமுதாயத்தை அமைப்பது என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இதற்கு முன்வரையில் அதன் கடந்த கால வரலாற்றில் அரசியல கோரிக்கைகளைத் தவிர்த்து இப்படி சமுதாயத்தையும் இணைத்து தீட்டிய திட்டம் காந்தியத்தின் ஒரே பதிப்பான 'சர்வோதயம்' தான். எனவேதான் இன்றைய காங்கிரஸ் அதன் இலடசிய மாற்றத்தை (திரிகரண சுத்தியுடன் செய்வதாக கருதிய) கோகுல்பாய்பட் என்னும் காங்கிரஸ் பிரதிநிதி சமதர்ம சமுதாய அமைப்பு காந்தியாரின் சர்வோதயத் திட்டத்துக்கு முற்றிலும்மாறு பட்டது என்று குறிப்பிட்டார்.

காந்தியாரால் நிர்மாணிக்கப்பட்ட ஹரிஜன் வாரத்தாளும் சென்ற இதழில் தன் தலையங்கத்தில் காங்கிரசின் குறிக்கோள் சர்வோதயமாகும் அதை அடைவதே காங்கிரஸின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பங்கு ஆகும் என்றும் காங்கிரசின் புதிய குறிக்கோள் பல அர்த்தம் செய்துகொள்ளக் கூடிய கொள்கையைப் புகுத்துவதாகும் என்றும் கூட்டுறவு காமன்வெல்த் என்பதற்கு பதிலாக காங்கிரசின் லட்சியம் சோஷலிச சமுதாயமாக மாற்றியமைப்பது குறித்து எச்சரிக்கை செய்திருக்கிறது.

பலருடையஎச்சரிக்கைகளும் மாநாட்டில் கொண்டுவரப்பட்ட திருத்தங்களும் காங்கிரஸ் எந்த அளவுக்கு லட்சியக் குழப்பம் கொண்டுள்ளது என்பதை விளக்க போதுமானதேயாகும். ஹரிஜன் காங்கிரசின் லட்சியம் சர்வோதயம் என்று கூறுகிறது. ஆனால் ஆவடி மாநாடு சோஷலிச சமுதாய நிர்மானமே தன்லட்சியம் என்று கூறுகிறது. இதில் வேடிக்கை என்னவெனில் சமதர்ம சமுதாயம் என்றால் வர்க்கப் போராட்டம் தவிர்க்கப்பட்டதாகிவிடும் என்றும் அது காங்கிரசின் கொள்கைக்கு முரண் என்றும் கூறி சோஷலிச பாணியில் சமுதாய அமைப்பு என்று காங்கரஸ் கூறுகிறது! ஆனால் வேறு பல இடங்களில் சமதர்மமே தன் லட்சியம் என்றும் அது கூறிக் கொள்ளத் தயங்கவில்லை!!

அப்படியே காங்கிரஸ் கூறுகிறபடி சோஷலிச பாணியே அதன் இலட்சியம் என்று வைத்துக் கொண்டாலுங்கூட ஆவடி மாநாட்டில் பிரதிநிதிகளின் திருத்தங்களுக்கு ஆசாத் கூறியுள்ள பதில்கள் காங்கிரசின் இலட்சியம் திரிகரணசுத்தியுடயதல்ல என்பதைத்தான் காட்டுகிறது.

ஆசாத் அவர்கள் முதலாளித்துவத்திற்கும் சித்தாந்த சோஷலிசத்திற்கும் இடைபட்டமுறையே தங்களின் சோஷலிசபாணி சமுதாய அமைப்பு'' என்றும் 'தனிப்பட்டோர் மூலதனத்திற்கும் பங்கு உண்டு' என்றும் பொருளாதார தீர்மானம் எந்த ஷரத்தையும் திருத்த முற்படவில்லை, அதிலும் காங்கிரஸ் **திட்டத்தை மாற்றும் கருத்து கிடையாதென்பதைத் தெளிவாகக் கூறவிரும்புகின்றேன்** என்றும் (காங்கிரஸ் திட்டம் முழுக்க முழுக்க முதலாளித்வ அமைப்பை ஆதரிப்பது என்பது ஏற்கனவே நமக்குத் தெரிந்ததே) 'கூட்டுறவு காமன்வெல்த்' எழுப்புவதே நமது குறிக்கோள்; மக்கள் மறக்காதிருக்கும் பொருட்டே அக்குறிக்கோளை மீண்டும் எடுத்துரைக்கிறது 'இத்தீர்மானம்' என்றும முன்னுக்குப்பின முரணாகப் பேசி யிருக்கிறா. இந்த இலட்சியத் தீர்மானத்தில் தலைவரும் தொண்டரும் மிகுந்த கருத்து வேறுபாடுடன் பேசி யிருப்பதால் எது உணமையான இலட்சியம் என்பது விநோபாபாவே கூறியதுபோல் தெளிவில்லாமல் ஒரே குழப்ப மயமாக உள்ளது. ஆனால் ஒன்று மட்டும் தெரிகிறது. எல்லோரும் 'ஆவடிக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட 'சோஷலிச பாணி சமுதாய அமைப்பு' தீர்மானத்தை வாய்தவறிய அளவில் ஏற்றுக் கொண்டு மனதறகு வந்தபடி தம பட்டம் அடித்திருக்கிறார்கள் என்பதே.

'சோஷலிசபாணி' தீர்மானத்தின் உள்நோக்கங்களையும், சமத மமா? சமதர்ம பாணியா? எது என்பதையும ஆராய்வோம்.

'எங்கள் குறிக்கோள் சமதர்ம சமுதாயத்தை நிர்மாணிப்பது' என்று கூறுகிறவர்கள் அதைத் தெளிவாகக் கூறாமல் உடனே 'சமதர்ம பாணியே' எங்கள் குறிக்கோள்' என்று மழுப்புவதற்கு காரணம் எவை என்று விரிவான முறையில் ஆராய்வதற்குமுன் இவர்கள் சித்தாந்த பூர்வமான சமதர்மத்தில் நம்பிக்கை வைக்காமல், மிரளுவதற்கு காரணம் என்ன என்பதையும் அதே நேரத்தில் சமதர்ம கோஷம் மட்டும் எழுப்பும் மர்மத்தையும் முதலில் கவனிப்போம்.

சித்தாந்த பூர்வமான சமதர்மத்தில் இவர்களுக்கு இரு பெரும்பகுதிகளில் பயம் தோன்றுகிறது. ஒன்று தத்துவ ரீதியான சமதர்மத்தில் வர்க்கப் போராட்டம் தவிர்க்கப் படாததாகிவிடும். இதை ஒப்புக் கொள்ள இவர்கள் பயப்படுவதற்குக் காரணம் காங்கிரஸ் கூடாரம் பெரும் முதலாளிகளைக் கொண்ட அமைப்புத்தான். இரண்டாவதாக, . பொருளாதாரத் துறையில் தனிப்பட்டோர் பங்கு ஒழிக்கப்பட்டு, உடமைகள் யாவும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டு பொருள் உற்பத்தியை தானே நிர்வகிக்கும். இதுவும் பிற்போக்கு சொள்கைகளிலேயே ஊறிக் கிடக்கும் காங்கிரஸ் முதலாளிகளுக்குப் பிடிக்காததில் ஆச்சர்யமில்லை. மேலும் நேரு அடிக்கடி கூறுகின்ற அசல் ஜனநாயகம் என்பது சித்தாந்த பூர்வமான சமதர்மத்தில் தவிர்க்க முடியாத பகுதியாகும். ஆனால், பேராசிரியர் லாஸ்கி அவர்களின் கொள்கைப்படி, பொருளாதார சமத்துவ மில்லாவிட்டால் அசல் அரசியல் ஜனநாயகம் இருக்க முடியாது. ஆகவே, பொருளாதார சமத்துவம் ஏற்பட வேண்டுமானல் சமூகமே எல்லா உடமைகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும், இதுவும் காங்கிரஸ்பிற்போக்கு முதலாளிகளுக்குப் பிடிக்காத பகுதியாகும்.

பெரும்முதலாளிகள் நிறைந்து அவர்களாலேயே நடத்தப்படும் காங்கிரஸ் கட்சியில் அவர்களுடைய சம்மதம் பெறாமல் தன் விருப்பப்படி முதலாளிகளை கட்டுப் படுத்தக்கூடிய முறையில் திட்டம் தீட்ட நேரு பயப்படுகிறார் என்பதை, அவராகவே தம் தீர்மானத்தை விளக்கிப் பேசுகையில் தெரிவிக்கிறார். **சோஷலிச சமுதாய அமைப்பு வேண்டுமென்றால், உடனே எல்லாத் தொழில்களையும் நாம் (சர்க்கார்) எடுத்துக் கொண்டு விடவேண்டுமென்று அர்த்தமல்ல. அது தவறு...**சோஷலிச பாணியில் சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்ற நமது லட்சியத்திற்கு தடங்கலாய் உள்ளவைகளை மட்டும்தான் தனிநபர் துறையில் கட்டுப் படுத்துவோம். **இங்குகூட இதை மெதுவாகத் தான் செய்ய விரும்புகிறோம்.**

மேற்கண்ட ஒன்றே போதும், பண்டிதர் இந்தியத் துணைக் கண்ட பிரதம மந்திரியாக இருந்தும்கூட நேரடியாக பாராளுமன்ற உதவிபெற்று எந்த காரியமும் செய்ய முடியவில்லை, என்பதற்கு.

மேலும் நேரு அவர்கள், தீர்மானத்தின் சமதர்மபகுதி முதலாளிகளுக்குப் பிடிகாது என்பதை நன்குணர்ந்து மற்ற திட்டங்களையும் ஆதரிக்காது எதிர்ப்புக் கிளப்புவார்களோ? என்று பயந்து தாமே அத் தீர்மானத்தில் அதைத் தெளிவாக, **தேசியச் செல்வம் நியாயமாகப் பங்கிடப்பட வேண்டும்,** என்று கூறப்பட்டிருந்த போதிலும், **சமமாகப் பங்கிடவேண்டும் என்று கூறவில்லை** என்று கூறி முதலாளிகளின் பயத்தைப்போக்கி தாமும் அவர்களின் எதிர்ப்பிலிருந்து தப்பித்துக் கொள்கிறார். இது மட்டுமல்ல விளக்கமும் தருகிறார் சோஷலிச சித்தாந்தத்திற்கு! வேடிக்கையான விளக்கம்!! முதலாளிகளின் சுரண்டலை தனிமனித சுதந்திரம் என்று கூறி 'அவர்களை கட்டுப்படுத்துவது பாபம்' என எச்சரிக்கிறார் பண்டிதர்!

இதை ஆசாத் அழுத்தந்திருத்தமாக "காங்கிரஸ் தன் திட்டங்களை மாற்றவில்லை என்று கூறியதிலிருந்தும் நேரு தனிப்பட்ட முதலாளிகளுக்கும் பங்கு உண்டு'' என்று பன்முறை கூறியதிலிருந்தும், முதலாளிகளின் அச்சத்தைப்போக்க முயலுகிறார் என்பதை முடிவு கட்ட வேண்டியுள்ளது.

இந்த இரகசிய ஏற்பாட்டின் படி தானோ என்னவோ! பம்பாயிலிருக்கும் இந்திய வியாபாரிகள்சம்மேளனத்தின் தலைவரான திரு. சினாய் என்பவர் தமக்கு சென்னை வர்த்தகர் சம்மேளனம் 25-ந் தேதியன்று அளித்த தேநீர் விருந்தில் பேசுகையில் புதிதாக கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் "சமதர்மபாணி" சமுதாய முறையை வரவேற்றுவிட்டு நமது பிரதம மந்திரி அவர்கள் நாம் புரிந்துக் கொள்ளும் முறையிலும், அதற்கு மேலாக நமக்கு உத்திரவாதமளிக்கும் முறையிலும், சர்க்கார் எதிர்பார்க்கும் முறையில் நாம் நடந்துக்கொண்டால், நமக்கு தொல்லை தருவதில்லை என்று கூறியுள்ளார். நம்முடைய பெரும் பங்கைச் செலுத்துவதற்கு, நமக்கு ஊக்கமளிக்கும் முறையில் இந்த ஒரு உத்திரவாதமே போதுமானதாகும் என்று நான் நினைக்கிறேன்"

என்று கூறியுள்ளார். பெரும் ஏக போக இந்திய முதலாளிகளான டாடா பிர்லா போன்றவர்கள் இதை வரவேற்றிருக்கிறார்கள். இதிலிருந்து நேருவின் தீர்மானம் முதலாளிகளுக்கு அஞ்சியே கொண்டு வரப்பட்டுள்ளது என்ற முடிவுக்கு வராமல் இருக்க முடியவில்லை.

எனவே இவர்கள் சித்தாந்த சோஷலிசத்தில் நம்பிக்கை வைக்காமல் 'சமதர்ம பாணியில் சமுதாய அமைப்பில்' நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். 'சமதர்ம பாணி' என்ற வார்த்தைகளில் 'பாணி' என்ற வார்த்தை இருக்கிறதே அதுதான் இந்த பிற்போக்குவாதிகளின் கேடயமாகும்! இந்த 'பாணி'க்குள் ஏராளமான காரணங்கள் பதுங்கியிருந்தாலும் 'சமதர்மம்' என்ற முகமூடி மூலம் அதை மறைக்க நினைக்கிறார் நேரு பண்டிதர்.

அடுத்தபடியாக நேரு பண்டிதரின் தீர்மானம் தத்துவ ரீதியாக அனுபவ சாத்தியமில்லை என்பதற்கு ஏராளமான காரணங்கள் இருக்கின்றன. ஏனெனில் இத்தீர்மானத்தை சீனாவில் மனதில் வைத்துக்கொண்டு அமெரிக்க முறையில் சிந்திக்கப்பட்டு, பிரிட்டனின் செயல் முறையில் அமுலாக்க நேரு நினைக்கிறார் என்று தெரிகிறது.

முதலாவதாக இந்தியா, நேரு மானசீகமாக நினைத்து திட்டம் தீட்டியிருப்பதுபோல, முழுதும் இயந்திரத் தொழில் மயமான நாடுமல்ல; அல்லது முழுதும் விவசாயத்தையே நம்பி வாழும் நாடுமல்ல, ஆனால் விவசாயம் இந்தியாவில் இயந்திரத் தொழிலை விடபெரிதும், முக்கியமுமாய் இருந்தாலுங்கூட, அதைப்பற்றி ஒரு வார்த்தைகூட மேற்கண்ட திட்டத்தில் பேசப்படவில்லை. இது திட்டத்தின் பெரும் குறைபாட்டைக் காட்டுகிறது.

நேரு பயப்படுகின்ற முதலாளித்துவம் நம் நாட்டில் ஒரு வேடிக்கையான முறையில் கட்டப்பட்டு இருக்கிறது. ஒருவன் எவ்வளவு பெரிய பணக்காரன் அல்லது முதலாளி, எவ்வளவு சொத்துக்கு அதிபதி என்று பார்த்து அவ்வளவு புண்ணியத்தை அவன் முன் பிறவியில் செய்திருக்க வேண்டும். 'இப்போதைய செல்வம் போன ஜென்ம புண்ணியமே' என்று நினைக்கும் விந்தையான பாவ புண்ணிய தலைவிதித் தத்துவத்தை பெரிதாக நம்பி வாழும் நாடு இது! இதில் தனி மனித சொத்துரிமை தெய்வ கடாட்சமாக மதிக்கப்பட்டு வருகிறது! இதே பண்பில் ஊறிய நேருதான் திருந்திவிட்டதாக சில சமயங்களில் நூல்களைப் படிப்பதால் உணர்ச்சி வசமாகக் கூறிக்கொண்டாலும் இந்த சமுதாய முறையை ஆதரிக்கும் வகையில், "இந்தியாவுக்குச் சொந்தமான மிக உறுதியான பண்பாடும், சரித்திர பின்னணியும் உண்டு, அந்த பின்னணியை மனதில் வைத்துக் கொண்டே நாம் செயல் புரிய வேண்டும்" என்று கூறியுள்ளார். எனவே இத்தகைய பழைய பண்பாட்டில் ஊறியிருக்கும் இந்திய முதலாளிகளைக் கட்டுப்படுத்த இவரால் சாத்தியமல்ல என்பது உள்ளங்கை நெல்லிக் கனி போல் தெரிகிறது.

இதற்கு மேல்பூச்சாக 'முதலாளிகளைக் கட்டுப்படுத்துவது தனிமனித உரிமையைப் பறிப்பதாகும்' என்று கூறினாலும், முதலாளிகள் மற்றவர்களை சுரண்டுவதையே தனி மனித உரிமை என்று நினைத்திருக்கும் தவறான போக்கை மட்டும் ஏனோ இவரால் கண்டிக்க முடியவில்லை! அப்படித்தான் நேரு பண்டிதர் முதலாளிகளைக் கட்டுப்படுத்த நினைத்தாலும், அவர்கள் நேருவைவிட சக்தியும், பலமும் வாய்ந்தவர்களாயும் நேருவை விட பொருளாதாரத்தை நன்கு அறிந்தவர்களாயும் இருப்பதை நேரு நன்றாக உணர்ந்தே அவர்களை ஏதும் செய்ய முடியாமல் தவிக்கிறார்! அவர்களின் கைப்பாவையாகி விழிக்கிறார். முதலாளித்துவத்தை அவரால் எதிர்க்க இயலவில்லை என்பதை யாரும் மறுக்க இயலாது.

முதலாளித்துவத்தை காங்கிரஸ் எதிர்க்க விரும்பவில்லை என்பதற்கு மற்றொரு விளக்கத்தையும் குறிப்பிட விரும்புகின்றேன். ஆவடியில் பேசிய ஆசாத் அவர்கள் ஒரு விநோதமான காரணங்கூறி தனிப்பட்ட முதலாளிகளுக்குக் கட்டுப்பாடு அவசியம், தொழிற்சாலைகளை சர்க்கார் உடைமையாக மாற்றவேண்டும் என்று பெரும்பாலோர் கூறுவதை எதிர்க்கும் போது கூறுவதாவது: 'ஜனநாயகத்தில் நஷ்டஈடு தராமல் தனிநபர் சொத்துக்களை பறிமுதல் செய்யக் கூடாது. இதன்படி இந்தியாவில் உள்ள எல்லா தொழில்களையும் தேசிய மயமாக்க வேண்டுமானால் 4000லிருந்து 5000 கோடி ரூபாய்வரை நஷ்டஈடு கொடுக்க வேண்டும். இது வீண்விரயம் என்று கருதுகின்றேன். இப்பணத்தைக் கொண்டு புதுதொழிற்சாலைகளை அமைக்கலாமென்று நினைக்கின்றோம். ஏனெனில் தனிப்பட்டோரின் தொழிற்சாலைகள் தொடர்ந்து உற்பத்தி செய்து வருகையில், சர்க்கார் அதிகாரத்தின் புது முதலீட்டுடன் அமைக்கப்படும் புதுத் தொழிற்சாலைகளும் உற்பத்தி செய்து தொழில் துறையின் மொத்த உற்பத்தியைப் பெருக்க உதவும் என்பதே எங்கள் நோக்கம்' என்று.

இது கொக்கின் தலையில் வெண்ணை வைத்துப் பிடிப்பது போலிருக்கிறது. நஷ்டஈடு இன்றி தொழில்களை சர்க்கார் உடைமையாக்க அஞ்சுவதற்கு, ஜனநாயக எண்ணத்தைவிட, முதலாளித்துவ மனப்பான்மையும், முதலாளிகளிடம் இவர்களுக்குள்ள பயமும் பக்தியுமே காரணமெனலாம்,

தொழில்களை தேசிய மயமாக்குவதை எதிர்த்து, ஆசாத் மேலும் ஒரு விந்தையான கருத்தைக் கூறுகிறார். 'இப்போதுள்ள தனிப்பட்டோர் தொழில்களை திடீரென்று சமுதாய உடைமையாக்குவதிலும் மற்றொரு அபாயமிருக்கிறது. இத்தொழிற்சாலைகளின் உரிமையை வேறொரு கைக்கு மாற்றுவதால் நடைமுறை உற்பத்தி தடைபடுவது சாத்யம்' என்று.

பரிதாபத்திற்குரிய ஆசாத் அவர்கள் பொருள் உற்பத்தியை முதலாளிகள் தங்கள் நேரடி உடல் உழைப்பின்மூலம் செய்கிறார்கள் என்று நினைக்கிறார் போலும்! அதிகார மாற்றத்தின் மூலம் பொருள் உற்பத்தி குறையும் என்று அவர் கூறுவது இதைத்தான் காட்டுகிறது. அதற்கு வேறு ஏதும் புத்திசாலித்தனமான காரணமில்லை. ஏனெனில் நடைமுறை உற்பத்தி பாதிக்கப்படும் என்பது வேறு காரணங்களில் ஏற்படலாமேத் தவிர அதிகாரமாற்றத்தால் நிச்சயமாக ஏற்படாது. ஏனெனில், பொருள் உற்பத்தி செய்யும் தொழிலாளருக்கும், அதிகார மாற்றத்தால் ஏற்படும் மாறுதல்களுக்கும், உற்பத்தியை தடைப்படுத்தக் கூடியதான சம்பந்தம் ஒன்றுமே இல்லை. இதை சாதாரண அறிவு படைத்தவனும் உணரக் கூடும். ஆனால் ஆசாத் மட்டும் ஏனோ உணரவில்லை!

மேலும் நேரு 'தேச முன்னேற்றத்திற்காக பெரிய தொழில்கள் தனிப்பட்டோரிடம் இருப்பதுதான் சிறந்தது; சர்க்கார் இவற்றை ஏற்று நடத்துவது சிரமமானதாகும்' என்று குறிப்பிடுகிறார். இதன் மூலம் பெரும் தொழில்கள் உற்பத்தியாவது மட்டுமல்லாமல், முதலாளிகள் இன்னும் பெரும் முதலாளிகளாக வழிசெய்து கொடுக்கின்றனர் ஆளவந்தார்கள்! திட்டப்பட்ட முதல் ஐந்தாண்டு திட்டத்திலும் சரி, இனி தீட்டப்படப் போகும் ஐந்தாண்டு திட்டத்திலும் சரி, தொழிலதிபர்களுக்கு சரிபாதிக்கு மேல் பங்கு உள்ளது. இவைகளினால் சமூகத்தில் இன்னும் முதலாளி, ரொக்க முதலாளிகளாகவும், ஏழை, பிச்சைக்காரர்களாகவும் மாற வேண்டிய நிலைமைதான் ஏற்படும்என்பதில் ஐயமில்லை.

நேரு பண்டிதர், தம் தீர்மானத்தின் 4-வது பிரிவில், 'தனிப்பட்டோரின் முயற்சியானது சர்க்காரின் நிர்ணயிக்கும் திட்டத்தை அனுசரித்து இருக்க வேண்டும்' என்று முதலாளிகள் பெரும் தேசபக்தர்கள். நாட்டின் நலத்திற்காக அவர்கள் உயிர், பொருள் அனைத்தையும் தருவார்கள் என்ற நினைப்பில் குறிப்பிட்டிருக்கின்றார் போலும்! தேச விடுதலைப் போராட்டத்தில் 'தேசிய முதலாளித்துவ ஏகதேச்சாதிகாரத்திற்கு ஆசைப்பட்டே' அவர்கள் உதவி செய்தனர் என்பதை நேரு மறந்து, தேசிய வருமான உயர்வில் முதலாளிகள் அக்கரை உடையவர்கள் என்று கருதுகிறார் போலும்!

எனவே, நேருவின் 'சமதர்மமுறையில் சமுதாய அமைப்பு' சந்தர்ப்பக் காரணத்தால் ஏற்பட்ட ஒரு வறட்டுக் கூச்சல் என்று அரசியல் உணர்வுபெற்றுள்ள தென்னாட்டு விடுதலை இயக்கத்தினர் கருதுவதில் தவறொன்றுமில்லை.

இறுதியாக நேருவும் அவர்தம் காங்கிரசும் எதிர்பார்ப்பதுபோல் புதிய பொருளாதார திட்டத்தினால் எவ்வளவுதான் உற்பத்தி பெருகினாலும் தொழில்கள் புதியதாகத் தோன்றினாலுங் கூட அவை இந்தியா போன்ற ஒரு பெரும் நிலப்பரப்புள்ள துணைக்கண்டத்தில் உள்ள முதலாளித்துவ சமுதாய அமைப்பில் ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை சிறிதுகூட உயர்த்த இயலாது.

எனவே 36 கோடி மக்களைக் கொண்ட இந்தியத் துணைகண்டம் போன்ற ஒரு பெரும் நிலப்பரப்பில் ஏறக்குறைய 17 தேசிய இனங்களை ஒன்றுக்கொன்று மாறுபட்ட மொழிகள், பழக்கவழக்கங்கள், கலைகள், கலாச்சாரங்கள், பண்புகள், நிலப் பிரிவு வேறுபாடுகள், வாழ்வியல் வேறுபாடுகள் கொண்ட நாட்டில் போலி தேசியம் பேசிக்கொண்டு எல்லோர்க்கும் பொதுவான சமுதாயமாக அரசியல் பொருளாதார சமூக கோட்பாடாக சமதர்ம சமுதாயத்தை அமைக்க முயற்சிப்பது அறிவுடைமையல்ல அனுபவசாத்தியமுமல்ல. இதற்கு மேலாக இயற்கைக்கு மாறுபட்டதாகும்.

ஒரு பகுதி அல்லது ஒரு தனி இன மக்கள் தங்கள் சமுதாய முறையைத் தாங்களே அமைத்துக் கொள்ளும் போது அவர்களுடைய வாழ்க்கையின் கலைப்பண்பும் கலாச்சார முறைகளும் மன உணர்ச்சிகளையும் கவனித்து அவைகளுக்கே முக்கியத்துவம் கொடுத்து அமைத்துக் கொள்வார்கள்—அமைக்கப்பட வேண்டும். உதாரணமாக திராவிட இனத்துக்குச் சாதகமாகக் கூடிய சமதர்ம சமுதாய அமைப்பு நாகர் இன மக்களுக்குச் சாதகமாகாமல் இருக்கக் கூடும். எனவே தனி நாடு கோருகின்ற மக்களுக்கு ஏக இந்தியா ஒற்றுமை தத்துவப் போர்வையில் ஏகாதிபத்திய வெறி கொண்டிருக்கும் நேரு சர்க்கார் 'சமதர்மபாணி' சங்கை ஊதாமல் விடுதலையளித்து, விடுதலை பெற்ற பகுதிகளில் வாழும் மக்கள் அவர்கள் விரும்பும் சமுதாய அமைப்பை அமைத்துக் கொள்ள வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இவ்விதம் பிரிக்கப்படும் திராவிடத்தில், முதலாளித்துவம் ஒழிக்கப்பட்டு நமக்கு விருப்பமான முறையில் நடைமுறை சமதர்ம சமுதாயம் உருவாக்கப்பட்டு, மக்கள் வாழ்க்கைத் தரம் உயர திட்டம் தீட்டிக் கொள்ள நம்மால் இயலும். அதற்கான அறிவாற்றல் நம்மிடம் உண்டு. விடுவிக்கப்பட்ட பகுதிகளில் உருவாக்கப்படும் சமதர்ம சமுதாயங்கள் ஒன்றுசேர்ந்தே இந்தியாவை ஒரு பலம் பொருந்திய சமதர்ம சமுதாய துணைக்கண்டமாக உலகில் திகழச் செய்யும், எனவே உலகநாடுகளிடையே நாமும் சமமதிப்புடன் வாழ வேண்டுமெனில் உலகத்தில் சுதந்திரம் பெற்ற நாடுகளுடன் நாமும் கைகோர்த்து செல்ல வேண்டுமெனில் தனித்திராவிட சமதர்ம கூட்டாட்சி நாட்டிற்காக; தென்னாட்டு விடுதலை இயக்கத்தில் கலந்து 'திராவிடநாடு திராவிடருக்கே' என்று கடமை உணர்வுடன் முழக்கமிட்டு உரிமையை அடைவோமாக.

●

ஜீவசக்தி லேகியம்

எக்காரணத்தாலேனும் ஆண் அல்லது பெண் இழந்துபோன தேக வலுவையும், சுக்கில சுரோணித போஷாப்பையும் திரும்பவும் பெற விரும்பினால் இந்த லேகியத்தை உட்கொண்டால் குணமடையலாம். போஷாப்பிற்கு உரிய ஜீவாதாரமான பெருமருந்துகள் இதில் சேர்ந்திருக்கின்றன. இந்த லேகியத்தை காலை மாலை 40-நாட்கள் ஆண் அல்லது ஒரு பெண் சாப்பிட்டால் அன்னாருடைய சரீரம் முற்றிலும் மாறி சுந்தரதேகம் பெறுவார்கள். எந்த மருந்தினாலும் தீராத துரித ஸ்கலிதம்—சொப்பன ஸ்கலிதம் நீங்கி நீடித்த இன்பம் எய்துவார்கள்.

20-நாள் காலை, மாலை, சாப்பிடக்கூடிய லேகியம்

டப்பி 1-க்கு விலை ரூபா	3—0—0
பாக்கிங், தபால் சார்ஜ், மணிஆர்டர் கமிஷன்	1—6—0

40-நாள் காலை, மாலை சாப்பிடக் கூடிய லேகியம்

டப்பி 1-க்கு விலை ரூ.	6—0—0
பாக்கிங் சார்ஜ், தபால் சார்ஜ், மணியார்டர் கமிஷன்	1—11—0

என். பி. செல்வம் & கோ.

16, ரிலையன்ஸ் ரைஸ் மில் தெரு, சென்னை—1

திராவிடன்

சந்தா விவரம்

●

ஆண்டு சந்தா ...	ரூ.	8	0	0
ஆறுமாதம் ...	ரூ.	4	0	0

வெளிநாடு

ஆண்டு சந்தா ...	ரூ.	9	0	0
ஆறு மாதம் ..	ரூ.	4	8	0
தனிப்பிரதி ...	ரூ	0	3	0
" வெளிநாடு "		0	3	6

முதல் பக்கத்—தொடர்ச்சி

எவ்வளவு இன்றியமையாதது என்பதை எடுத்துக் காட்டவே இதனைக் குறிப்பிட்டுள்ளோம்.

இது மட்டுமா! ஆவடி மாநாடு நடந்து 15 நாட்கள் கூட ஆகவில்லை, நமது மாநில நிதி அமைச்சர் **தோழர் சுப்ரமண்யம் அவர்கள்** இருக்கிறாரே—அவர் 4—2—55-ம் நாள் பெரிய நாயக்கன்பாளையத்தில் நடைபெற்ற ஐந்தாண்டுத் திட்ட விவாத அரங்கில் பேசுகையில் தலை நிமிர்ந்து கூறியுள்ள கருத்துக்கள்—இல்லையில்லை வடநாட்டு ஆதிக்கக் காரர்களுக்கு அவர் விடுத்துள்ள எச்சரிக்கையிருக்கிறதே தி. மு. கழகத்தினையும் ஆச்சரியப்படச் செய்கிறதெனக் கூறின் மிகையாகாது. இதோ கேளுங்கள் அவரின் சொற்பொழிவை:—

"பெரும் தொழிற்சாலைகளை தென்னாட்டிலும் அமைக்க வேண்டும், ஒரு குறிப்பிட்ட பகுதியில் தொழிற்சாலைகளை அமைப்பதால் அப்பகுதிகளில் மட்டும் செல்வம் குவியவும், அதே நேரத்தில் தென்னாட்டில், நாம் விரும்பாத நமக்கு விரோதமான அரசியல் விளைவுகளும் ஏற்படும்"

'முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் குறிப்பிட்ட அளவு வெற்றியைத் தந்திருக்கிறது; ஆனால் அந்தத் திட்டத்தில் அமுல் செய்யப்பட்ட பெரும் நீர்த்தேக்க திட்டங்கள் எல்லாம் சாதகமான முறையில் அமைந்துள்ள குறிப்பிட்ட பிரதேசங்களுக்கே பலன் தந்திருக்கிறது'

"மூலப் பொருள்கள் கிடைக்கும் இடத்துக்கு அருகிலேயே பெரும் தொழிற்சாலைகளை அமைப்பது என்ற கொள்கையை அப்படியே பின்பற்றினால் சாதகமான முறையில் அமைந்துள்ள குறிப்பிட்ட பகுதிகளில் செல்வம் குவியும் நிலைமை ஏற்படும். அதனால் தென்னாட்டில் காணப்படும் அரசியல் சூழ்நிலையில் (நமக்கு) எதிர்மாறான விளைவுகள் ஏற்படும். ஆகவே தென்னாட்டிலும் சிலபெரிய தொழில்களை—மின்சார சாதனங்களை தயார் செய்யும் தொழிற்சாலைகள் போன்றவைகளை அமைப்பது விவேகமானதாகும்.

இந்தக் கருத்துக்களை டெல்லி ஆட்சி பீடத்தின் அமைச்சர்கள், திட்டக்குழு உறுப்பினர்கள் கூடிய அக்கூட்டத்திலே நிதி அமைச்சர் எடுத்துக் கூறியிருக்கிறார்!

இதே கருத்தினை தி. மு. கழகம் கூறினால், அதற்குப்பெயர் தேசத்துரோகம்! குறுகிய மனப்பான்மை, அரசியல் தெளிவில்லாதவர்கள் என்று தேசிய முகாமிலிருந்து வசைமாரிப் படையெடுப்பு நடைபெறும்.

ஆனால் இன்று நிதி அமைச்சர் சுப்ரமண்யமே தி. மு. கழகத்தின் அடிப்படைக் கொள்கையை வலியுறுத்திப் பேசியிருக்கிறார். இதற்குப் பெயர் என்னவோ? இதுவும் மாமியார் கதைக்கு ஒப்பானதா! அல்லது அமைச்சர் சுப்ரமண்யனாரும் தேசத்துரோகியாக மாறி வருகிறாரோ! அறியோம்!

எது எவ்வாறாயினும், தி. மு. கழகம் எந்தக் கொள்கைக்காக பணியாற்றி வருகிறதோ அக்கொள்கை வெற்றிபெற்றால்தான் தென்னாட்டுக்கு — தமிழகத்திற்கு வாழ்வுண்டு என்பதை இன்று தேசிய முகாமிலேயுள்ள தலைவர்கள்—அதிலும் அமைச்சர்கள் உணர்ந்து வருவதைக் கண்டு நாம் பூரிப்படைகிறோம். திராவிட இயக்கத்தின் பணி வீணாகவில்லை என்பதுமட்டுமல்ல அதன் கொள்கை விவேகமானது என்பதையும் இதுவரை வீராப்பு பேசியவர்கள் உணர்ந்து தெளிவு பெற்று அவர்களின் திருவாயாலேயே ஆதிக்கபீடத்தாருக்கு அறிவுறுத்த முற்பட்டிருப்பது கண்டு பெருமைப்படுகிறோம். இதன். காரணமாக நமது கொள்கையிலும், பணியிலும் நமக்கு மேலும் அசைக்க முடியாத நம்பிக்கையையும், உறுதியையும் அளிக்கிறது. அந்த லட்சியப் பாதையில் நடைபோட்டு வரும் தி. மு. கழகத்தினருக்கு, அமைச்சர் சுப்ரமண்யனார் போன்றவர்கள் அடிக்கடி தங்களின் மனதில் குமுறிக் கிடக்கும் எண்ணங்களை இந்த அளவுக்குத்தானே ஜாடை காட்ட முடியும்? ஏனெனில் அவர்கள் சுதந்திரம் பெற்ற அமைச்சர்கள் அல்லவே! ஆதலாலே அமைச்சர் சுப்ரமண்யனார் போன்றவர்களின் உள்ளத்தில் வளர்ந்துவரும் வடநாட்டு ஏகாதிபத்திய எதிர்ப்பு வளரட்டும், உருவாகட்டும், அவசியமேற்படும்போது அதைப் பயன்படுத்தும் உறுதியும் வளரட்டும் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

—நக்கீரன்

கேள்வி? பதில்.

அஞ்சாநெஞ்சன்

காமராசரா சுப்ரமண்யனாரா?

கே: அஞ்சாநெஞ்சனே — நாடக தடை சட்டத்தை கொண்டு வந்தது ஸ்ரீமான் சுப்ரமண்யமா அல்லது ஸ்ரீமான் காமராஜரா? எனது சிநேகிதர், ஸ்ரீமான் சுப்ரமண்யம்தான் காரணம் என்கிறார். உமது அபிப்பிராயம் என்னவோ?

—டி சங்கரராமன், மதுரை

ப: தோழரே, முதலமைச்சர் காமராசர் அவர்களும், நிதி அமைச்சர் சுப்ரமண்யம் அவர்களும் ஆக இருவரும் மட்டுமல்லாமல் அமைச்சர் குழுவே நாடகத் தடை சட்டம் நிறைவேற்றத்திற்குக் காரணமாவார்கள். அமைச்சர் சுப்ரமண்யம்தான் இதற்குக் காரணம், முதலமைச்சர் காமராசருக்கும் இதற்கும் சம்பந்தமேயில்லை என்று கூறுவது காமராசரைப் பெருமைப் படுத்துவதாகாது. அதற்குப் பதிலாக அவர் ஏதோ முதலமைச்சர் பதவியில் வெறும் 'வெந்து வேட்டு' போல வீற்றிருக்கிறார் என்று நையாண்டி செய்வதற்கே ஒப்பாகும். "பட்டா ஒருவர்மீது சாகுபடி வேறொருவர் பிடிப்பில்" என்பதற்கு விட்டுக்கொடுக்கும் ஏமாளியுமல்ல காமராசர்.

*

கே: அய்யா கண்ணீர்த்துளி கட்சியின் அஞ்சா நெஞ்சனே, உங்கள் கட்சியை தொலைப்பதாகிய எங்கள் தளபதி குருசாமியாரின் லட்சியம் சிறிது கூட நிறைவேற வில்லையே நாங்கள் என்ன செய்வது?

—ரா. குருசாமிதாசன், தஞ்சை

ப: தோழரே உங்கள் தளபதியிடம் கூறி, அவர் ஆசிரியராயிருந்துவரும் பத்திரிகையில் இன்னும் எவ்வளவு மட்டரகமாகவும், கீழ்த்தரமாகவும் எங்கள் மீது வசைபுராணம் பாட முடியுமோ அந்த செயலில் மேலும் தீவிரமாக ஈடுபடச் சொல்லுங்கள். விரைவில் உங்கள் லட்சியம் முழுதும் (0) நிறைவேறிவிடும்!

கே: நடிகவேள் ராதா அவர்கள் சட்டப் படிப்பு படித்திருக்கிறதாக என் தோழர் ஒருவர் கூறுகிறார் இது உண்மையா? —ஆ கந்தசாமி, கொழும்பு

ப: உங்களின் தோழர் 'பஜார் நியூஸை' நம்பி அவ்வாறு கூறியிருக்கலாம். ராதா சட்டப் படிப்பு படித்தவரல்ல. ஆனால் சட்டத்தின் நுணுக்கங்களையெல்லாம் சட்டப்படிப்பு படித்தவர்களைவிட நன்றாய் அறிந்திருப்பவர் தோழர் ராதா.

*

கே: அய்யா அஞ்சாநெஞ்சனே ஆண்டவன் அனைத்தையும் படைத்தான் என்று ஆத்திகர்கள் கூறுகிறார்களே! அந்தக் கூற்றுப்படி பார்த்தால் ஏன் ஒரு சிலருக்கு அவர் அறிவைப் படைக்கவில்லை?

—சின்னையா, அப்புத்தளை, இலங்கை.

ப: ஆண்டவன் புளியோதரை, பொங்கல், பாயசம் ஆகியவைகள் மீது அவா ஏற்பட்டு, மடப்பள்ளிக்கு ஓட்டமெடுத்த சமயங்களில் படைத்தவர்களுக்கு அறிவு படைக்க மறந்திருக்கலாம். ஏனெனில் பசிவந்திடப் பத்தும் (மானம், குலம், கல்விமுதலியன) பறந்து போயிருக்கலாம்.

*

கே: தமிழரசு கழகம்தான் தமிழர்களுக்குப் பாடுபடுகிறது என்று தோழர் ம. பொ. சிவஞானம் கூறுகிறாரே, தி. மு. கழகம் பாடுபடவில்லையா?

—எம் ரங்கநாதன், திருவொற்றியூர்

ப: அரசியலில் பரமபதம் விளையாட்டுக்கு ஆளாகி முக்கருபட்ட நிலையிலிருக்கும் நண்பர் ம. பொ. சிவஞானம் ஏதோ முணுமுணுத்துக் கொள்கிறார் தன் மனஆறுதலுக்காக—போகட்டுமே!

*

கே. நாடகச் சட்டத்தை எதிர்த்து தி. மு. கழகம் எப்பொழுது போராடும்?

—க. செல்லதுரை, திருச்சி

ப: அதற்கான அவசியம் ஏற்படும் பொழுது.

மணமகள் தேவை

நற்குடும்பத்தில் பிறந்த நல்ல அழகுவுள்ள 33 வயது வாலிபருக்கு படித்த மணமகள் தேவை. ஜாதி மத பேதங்கள் கவனிக்கப்பட மாட்டாது.

விவரத்திற்கு கீழ்காணும் முகவரிக்கு எழுதுக.

செ. து.
c/o என். எம்.
தபால் பெட்டி 2, ஈரோடு

கத்துவானேன் ஆத்திகர்கள்?

"பூவையான்"

உலகத்தில் உள்ளபல நாட்டில் இல்லா
உன்மத்தர் இந்நாட்டில் மட்டும் ஏனோ
பரந்திருந்து ஏழையரின் குருதி தன்னைப்
பல்லாண்டாய் உறிஞ்சுகின்றார்? கொடுமையன்றோ?

மேல்சாதி கீழ்சாதி என்று பலவாய்
மேனாட்டில் இல்லாத சாதிமுறைகள்
இந்நாட்டில்—இந்தியாவில்—தமிழகத்தில்
இருந்துயிரை வாட்டுவதேன்? சிந்திப்பீரே!

ஆதிகாலத் திருவிடர்கள் தமிழகத்தில்
ஆண்டவனை ஒருவனாக—அருவமாக
உணர்ந்ததுடன் உரிமையொடு வாழ்ந்தார்கள்
உள்ளதுவோ அவ்வாழ்வு, இந்த நாளில்

மரமுதலாய்க் கல்லீறாய் மக்கள் இன்று
மடமையுடன் கடவுளரைப் போற்றுகின்ற
அறியாமை என்றுமுதல் வந்ததிங்கு?
ஆரியர்கள் நுழைவிற்குப் பின்னேயன்றோ?

ஆரியத்தின் சூழ்ச்சிகளை நடிகர் இன்று
அம்பலத்தில் கொண்டுவர முயலும்போது
சாமிகளின் வாய்ப்பேச்சு வாள்வீச்சாகி
சட்டசபை முன்னிலையில் சுழல்வதேனோ?

சோமரச பானமுடன் அடவிதன்னில்
சுவையுள்ள மாமிசமும் முனிவருடன்
உண்டவனோ மதுவுண்ணான்? கொல்லாதான்?
உண்மையிதை நடிப்பவரா நாத்திகர்கள்?

உத்தமன், ஒருத்திமண வாளன், என்றால்
ஊர்ப்பெண்டிரைப் பார்த்து இளித்தாயிற்பான்?
கடைகெட்ட ஆரியத்தின் கபடம் எல்லாம்
கண்ணெதிரே காட்டுவது கடமையன்றோ?

'கொன்றிடுவேன்!' என்றுளறிக் கொடுவாளேந்தும்
கொலைகார ஆத்திகச் சாமியார்கள்
இந்நாளும் உளரென்றால் அவர்கள் எல்லாம்
இராமனடி போற்றுகின்ற பக்தர்தாமா?

இராதாவின் நாடகத்தால் நாட்டில் உள்ள
இராமபக்தர் உள்ளமெலாம் புண்படுமேல்,
இராசமாணிக் கத்தாரின் நாடகங்கள்
இனவுணர்ச்சித் திராவிடரை இழிக்கலாமோ?

ஆத்திக வேடத்தில் "அவர்கள்" எல்லாம்
அடிமையாய்த் திராவிடரைச் சித்தரித்தால்
உள்ளதை உள்ளபடி நாம் நடிப்போம்!
உறுமுவானேன்? கத்துவானேன் ஆத்திகர்கள்?

தாழ்த்தப்பட்ட மக்களைப் பழிவாங்கும் பாரதமாதா புத்திரர்கள்!

நாங்கள் வாழ்வதா? — செத்து மடிவதா?

ஆதித்திராவிடர் சங்கத்தின் உள்ளக் குமுறல்

கடந்த 3—1—55-ல் காலை 9-30 மணிக்கு மூனஞ்சிபட்டியிலிருந்து புறப்படும் பாளையங்கோட்டை (Service Bus) ஒன்றை மூலக்கரைப்பட்டி பஜாரில் எதிர்பார்த்துக்கொண்டு நின்ற தோழர் எஸ். வி அபிமன்யு அவர்களை அரிஜன சங்கம் மூலக்கரைப்பட்டி பிர்க்கா என அமைத்து தலைவராக இருந்து சேவை செய்து வந்த காரணத்திற்காக மூனஞ்சிப்பட்டி ஊர் வாசியான எம். ஜி. சங்கர ரெட்டியார் (எம்.எல் எ. காங்கிரஸ்) என்பவர் தம்முடன் சிலரை சேர்த்துக் கொண்டு அபிமன்யுவை அடித்து கைகளை கட்டி இழுத்துச் சென்று மூலக்கரைப்பட்டி வேம்புமரத்தில் கட்டிவைத்துவிட்டு பின் அதே ஊர்வாசியும் மூலக்கரைப்பட்டி பிர்க்கா அரிஜனசங்க காரியதரிசியுமான தோழர் எம். இ. அரசுமுத்து என்பவரை ஆட்களை அனுப்பிப் பிடித்து இழுத்துவந்து நையப்புடைத்து மூலக்கரைப்பட்டி தெருத் தெருவாக ஊர்வலம் சுற்றி இனி முடி அலங்கார நிலையங்களுக்கு போகமாட்டோம், காபி கடைக்குப் போகமாட்டோம், பண்ணையாட்களுக்கு விரோதமாக போகமாட்டோம், சங்கம் வைத்து பேசமாட்டோம், என்பன போன்ற ஒலிகளை ஒலிக்கச்செய்தும் மற்றும் பல வகையான கொடுமைபடுத்தப்பட்டது.

தோழர் அபிமன்யு கடந்த பொதுத் தேர்தலில் தோழர் சங்கர் ரெட்டியாருக்காக இரவு பகலாய் வோட் சேகரித்து வெற்றிபெறச் செய்திருந்தும் அவருக்கு இத்தகைய நிலை!

ஆதித்-திராவிட மக்கள் வாழ வேண்டுமா! மாள வேண்டுமா...? 1955-ம் வருடம் ஐந்தாவது குடியரசு தின பிரகடனம் நிகழ்ந்த காலத்தில்! தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியானது கக்கன் அவர்களைத் தலைவராக ஏற்றுக்கொண்ட இக்காலத்திலேயே அதுவும் ஒரு போலீஸ் ஸ்டேஷன் இருக்கும் ஒரு பட்டணமளவுக்குவுள்ள ஊரில் இந்நிலை என்றால் பட்டிக்காடான சாதாரண குக்கிராமங்களில் நடப்பவைகளையும் அவைகளைத் தாங்கிக் கொண்டு புழுக்களைப் போல் நெளிந்து நெளிந்து வாழும் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை என்னவென்று வர்ணிப்பது.

எங்கள் சமுதாயம் வாழ்வதா? செத்து மடிவதா? அல்லது உணர்வற்ற நடைப்பிணங்களாக இருப்பதா? என்று குமுறுகிறது எங்கள் உள்ளம்,

எனவே தமிழ் நாட்டின் உயர்வுக்காகவும், மனித உரிமைக்காகவும் பாடுபடும் எல்லா அரசியல் கட்சிகளையும் முற்போக்கு எண்ணங் கொண்டவர்களையும், குறிப்பாக சமூக சங்கங்களையும் இதற்குத்தக்க நியாயம் கிடைக்கப் பெற கவனம் செலுத்த வேண்டுமென தலைவணங்கி கோருகின்றோம்.

இங்ஙனம்

மூலக்கரைப்பட்டி வட்டார ஆதித்திராவிட ஐக்கிய சங்கம், தாராவி பம்பாய்

தாழ்த்தப்பட்டோரைத் தேசியம்தான் கை தூக்கிவிட்டது!

தமிழ்நாடு தாழ்த்தப்பட்டோர் பம்பாய்க் கிளையமைப்புக் கூட்டம் 29-1-55 மாலை தாராவி ராமர்வாடியில் நடைபெற்றது. பெரும்பாலானடக்கள் குழுமியிருந்தனர். வரவேற்புரையாற்றிய தோழர் கே ஐ: டேவிட்பிள்ளை, லீக்கின் உணர்ச்சியை விஷப்பிரச்சாரத்தின் மூலம் தடுக்க முடியாதென குறிப்பிட்டார். தலைமை தாங்கிய தாராவி தாலுக்கா காங்கிரஸ் குழுத் தலைவர் தோழர் எம். வி. துரைசாமி தேசிய இயக்கத்தினர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முறையான முன்னேற்றங்களுக்கு ஆற்றிவரும் பணியினைப் பற்றி விளக்கினர். பின்னர் தோழர்கள் தாராவி எல். ராஜு, மே.ஆ. நடராஜன், எல். டி. கே. எல். என். பொன்னுசாமி மற்றும்பலர் லீக்அமைப்புகளால் உதிரிக் கட்சியினைச் சார்ந்த சிலரிடையே ஏற்படும் சலசலப்புகளைக் குறித்தும் ஆளும் கட்சியினருடன் இணங்கி ஈடுபாடுகள் கொண்டு செய்யப்படுவதின் மூலம் தாழ்ந்தவர்கள் எப்படி யெல்லாம் சரிநிகர் சமத்துவமடையலாம் என்பதை பற்றியும் விளக்கப்பட்டது. பின்னர் செயற்குழு தேர்தலும் நடைபெற்றது.

கழக வளர்ச்சி நிதிக்காக

சென்னை இயலிசை நாடகக் கழகம்

அளிக்கும்

தியாகத் தீ

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்

அவர்கள் தலைமையில்

13—2—55 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு

அண்ணாமலை மன்றத்தில் நடைபெறும்

நடிகர்கள்:— A. N. C. பாபு அ. பொ. அரசு S. S. நடராஜன்

நடிகைகள்:—T. ரங்கநாயகி, K. G. மோகனு, N. R. சகுந்தலா, சரோஜா

கதை வசனம்	பாடல்கள்	பயிற்சி	கலையமைப்பு
செ. அமலன்	சுப்பு ஆறுமுகம்	T.கணேசன்	A. C. சேகர்

கட்டணம்: ரூ. 3—0—0, ரூ. 2—0—0, ரூ. 1—0—0

பம்பாய்

திருநெல்வேலி ஜில்லா ஆதிதிராவிட மகாஜன சங்கம்

பம்பாய்க் கிளையின் முதல் ஆண்டு நிறைவு விழா 23-1-55 மாலை 7 மணிக்கு தாராவி வாழக்சட்டவாடி திடலில் சிறப்பாக நடைபெற்றது. பொதுச் செயலாளர் எஸ். எம். சுப்பையா அவர்கள் விழாவைத் துவக்கி வைத்தார். தோழர் ம. ப. மந்திரமூர்த்தி விழாவிற்குத் தலைமை வகித்து அரிய கருத்துரை நல்கினர். வந்திருந்த வாழ்த்துச்செய்திகளையும் ஆண்டு அறிக்கையையும் பொதுச்செயலாளர் வாசித்தார். தோழர்கள் எஸ்.எஸ். அன்பழகன், த. மு. பொற்கோ, சி. சிவகுருநாதன் சு. வள்ளிநாயகம், ஆகியோர் சிறந்த முறையில் சொற் பொழிவாற்றினர். பின் கீழ்க்காணும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

தாழ்த்தப் பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த திரு. கக்கன் அவர்களை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக நியமித்திருப்பது குறித்து சங்கம் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறது.

இலங்கையிலிருந்து நாடு கடத்தப்படும் தமிழர்கள் அனைவருக்கும் குறிப்பாக ஆதிதிராவிட மக்களுக்கு தக்க வசதியும் பாதுகாப்பும் அளிக்குமாறு சென்னை அரசியலாரை சங்கம் மேலும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

கிராமங்களிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஜாதி இந்துக்கள் இழைத்து வரும் இன்னல்கள் பற்றிய முறைப்பாடுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக கவனித்து தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

இந்திய தூதுவர், மாகாண கவர்னர் ஆகிய பதவிகளுக்கு இதுவரை ஒரு தாழ்த்தப்பட்டவரும் நியமிக்கப்படாதது குறித்து சங்கம் மிகவும் வருந்துவதோடு இனியாகிலும் அவ்வித பதவிகளில் தாழ்த்தப்பட்டவர்களை நியமிக்குமாறு இந்திய அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்களை இழிவுபடுத்தும் முறையில் சினிமாக்களில் தப்பட்டை அடித்தல் முதலான இழிசெயல்களை தடை செய்வதுடன் அரசாங்க கெஜட்டுகளில் தாழ்த்தப்பட்ட மக்களின் பெயர்களை வெளியிடும் போது இழிவான பெயர்களால் அல்லாது தற்சமயம் நடை முறையில் அழைக்கும் பெயர்களை அதாவது ஆதித்திராவிடர் என வெளியிடுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது.

தாராவித் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம்

இதன் தேர்தல் கூட்டம் 30-1-55 ஞாயிறு மாலை அல்லிபிள்ளைவாடியில் திரு எம். எஸ். ரெகுநாதன் அவர்கள் தலைமையில் நடந்தேறியது. அவ்வமயம் இவ்வாண்டு பணியாற்றக் கூடிய கீழ்க்கண்ட செயற் குழுவினர் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர் கே. எம். விஸ்வநாதன், துணைத்தலைவர் பி.பி. கணபதி, பொதுச் செயலாளர் டி. கே. ராஜு, கூட்டுச் செயலாளர்கள் எம், எ. சண்முகராஜு, கே, பி பெருமாள், செயற்குழு தலைவர் வி. எஸ். டி.ராஜா, பொருள்காப்பாளர் கே, பி. ஈஸையா. மேலும் இருபது செயற்குழு உறுப்பினர்களும் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் கூட்டம் இனிது கலைந்தது.

*

இராமேஸ்வரம்

31—1—55-ம் நாள் தி. மு. க. அமைப்புக் கூட்டம் தோழர் எஸ். துரைராசு அவர்கள் தலைமையில் கூடி அடியிற் கண்டவர்களை செயற்குழுவினராக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டது.

செயலாளர் வி. மரியரோசாரி, துணை செயலாளர் மு. மாரிமுத்து, பொருளாளர் சி. துரைராசு, மாவட்டப்பிரதிநிதி அ. காசீன்முகம்மது, செயற்குழு உறுப்பினர்களாக கு. தனுஷ்கோடி, ம. சன்முகசுந்தரம், மு முகம்மது.முகையதீன் ரா மாடசாமி, ச. சுப்ரமண்யன், அ. பெரியசாமி, மு. க. ஆறுமுகம் முதலியவர்களை தேர்ந்தெடுக்கப்பட்டது.

அரியலூர்

31-1-55-ம் நாளன்று திராவிட இளைஞர் மன்றம் என்ற ஓர் அமைப்பின் துவக்கவிழா நடைபெற்றது: மாலை 4-மணிக்கு தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், அம்பில் ஏ. பி. தர்மலிங்கம் திருச்சி மாவட்ட மன்ற உறுப்பினர் கு. தங்கவேலு மற்றும் பொதுமக்கள் புடைசூழ முக்கிய இடங்களிலும் திராவிட இளைஞர் கழக அலுவலகத்திலும் கழகக் கொடிகள் உயர்த்தப்பட்டன. அடுத்து தோழர் ஈ. வி கே. சம்பத் மன்றக் கட்டிடத்தை திறந்து வைத்து மன்றத்தின் நோக்கத்தையும், இளைஞர்களின் கடமையையும் வலியுறுத்திப் பேசினர். தோழர் கு தங்கவேலு நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது. அடுத்து ஆயிரங்கால் மண்டபத்தின் முன் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்திற்கு மாணவத் தோழர் கோ. சிவப்பெருமாள் தலைமையில் கு. தங்கவேலு, ஏ. பி. தர்மலிங்கம், தோழர் ஈ. வி. கே. சம்பத் ஆகியோர் பேசினர். அடுத்து சி. பி. சிற்றரசு எழுதிய மதி நாடகத்தை மன்றத் தோழர்களின் ஒத்துழைப்புடன் தி. மு. க. தோழர்கள் மிகவும் சிறப்பாக நடித்தனர்.

வெள்ளவாவிப்புதூர்

30—1—55-ந் தேதி இரவு 8 மணிக்கு மூலனூர் தி. மு. க. செயலாளர் எஸ். எம். பழனிசாமி தலைமையில் தி. மு. க. புதிய கிளைக் கழகம் துவக்கப்பட்டது. தலைவரால் கொடி ஏற்றுவிக்கப்பட்டு கழக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது. தலைவர் கழகத்தின் நோக்கமும் நமது கடமையும் என்பதுபற்றி சொற்பொழிவாற்றினர். பின்பு கீழ்கண்டவர்களைக் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

செயலாளர் நா. இராமசாமி, துணைச் செயலாளர் கு. வீரப்பன், பொருளாளர் போ. பெரியசாமி மற்றும் 8 செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மார்ச்மாத இறுதிக்குள் பொதுக் கூட்டம் நடத்துவதென்றும் அங்கத்தினர்களிடம் மாதசந்தா அணா 4 வசூலிப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

குடியேற்றம்

பகுத்தறிவு இளைஞர் மன்றத்தின் சார்பில் 6-1-55 மாலை குடியேற்றம் ரேடியோ திடலில் திராவிடர் திருநாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மன்ற செயலாளர் ஆ. க. திலகன் தலைமை வகித்து பேசுகையில் விவசாயிகளுக்கு அடுத்தபடியான கைத்தறி தொழிலாளர்கள் பொங்கல் புதுநாளில்கூட மகிழ்ச்சி கொள்ள முடியவில்லை யென்றும் காரணம் வடநாட்டு ஆதிக்கம் தான் என்றும் விளக்கினர். அடுத்து தோழர் முகவை ஆர்.எஸ், பாண்டியன் என். எஸ். தென்னரசு ஆகியோர் கழகக் கொள்கை, அது ஆற்றிவரும் பணி ஆகியவைகளை விளக்கிப் பேசினர். அடுத்து தோழர் துரையரசு விவசாயிகளை சர்க்கார் அலுவலகத்தில் எந்த நிலையில் மதிக்கின்றார்கள் என்பதைப் பற்றி பேசினர்.

உடனே தேவை

'திராவிடன்' இதழை விற்பனை செய்ய முன்பணம் கட்டக் கூடிய ஏஜெண்டுகள் உடனே தேவை.

காஞ்சிபுரம்	சாத்தான்குளம்
வேலூர்	திருவைகுண்டம்
கும்பகோணம்	ராமநாதபுரம்

விவரங்களுக்கு

திராவிடன் அலுவலகம், சென்னை-1



முன் கதை: நர்மதா, தனது மன வேதனையை மறக்க, காண்டேகரின் 'வெறும் கோயில்' எனும் நவீனத்தைக் கையிலேந்தி சிந்தனைக்கு வேலை கொடுத்தாள். எனினும் அவள் மனம் நிம்மதியடையவில்லை......!

●

23

அவள் கரத்திலிருந்த காண்டேகரின் நாவல் நெஞ்சிலே நினைவுப் படத்தை ஓடவைத்தது. புத்தகத்தை திறந்த நிலையிலேயே மேசை மீது வைத்துவிட்டு அலமாரியிலிருந்த கடிதக் கட்டை எடுத்தாள். நெருப்புக் குண்டைத் தொடுவதுபோல விரல்கள் படபடத்தன. சண்டி செய்யும் குதிரையை சவுக்கால் அடிப்பது போல நர்மதாவின் உள்ளம் அடிபட்டு அலைந்து திரிந்தது. இடர் தொடராது என்றுதான் நெஞ்சிலே நம்பிக்கைக் கல்லை ஊன்றியிருந்தாள். செந்தாமரை நிறத்தை சின்ன அதரங்களுக்கு ஏற்றிக் கொண்ட அன்னப்புரு திறக்காத உதடுகளுக்கும் உள்ளேயே அவள் அடிக்கடி நெஞ்சத்துக்கு சொல்லிக் கொண்டதை இப்போதும் சொல்லிப் பார்க்கத்தான் செய்தாள்.

...."தொல்லைதரும் வேதனைப் பயணம் வாழ்க்கையின் தொடர் கதையல்ல. அது—இன்றில்லாவிட்டாலும்—நாளை— இடையே அறுந்துவிடப் போவதுதான். இருள் படர்கிறது இடர் மிகுந்ததுதான். ஆனால். காலத்தின் சக்கரம் ஒரு இடத்திலேயா நின்றுவிடப் போகிறது. புதுஒளி பிறந்துதான் தீரும். மேகக்கோட்டையின் இரும்பு அரண்களையெல்லாம் உடைத்துக் கொண்டு மோகன நிலவு பவனி வந்தேதான் தீரும். பச்சைக் கொடியிலே இச்சை தராத மொக்கு இருக்கிறது. அதனடியிலே முள்ளுமிருக்கிறது. நாளை குத்தும் முள்ளுக்கும் மேலேதான் குதூகலத்தைத் தரும் ரோஜா இதழ் விரித்து சிரிக்கப் போகிறது. இன்று, தான் படும் இடர் நாளை நான்—அறுவடை செய்யப் போகும் மகிழ்ச்சிக்கு—வித்து. இன்றையத் துன்பத் தொட்டில் நாளைய இன்ப ஊஞ்சல்.

அதற்கு மேல் ஆறுதல் மொழிகளை அவளுக்கு அவளே சொல்லிக் கொள்ள முடியவில்லை. சிறு நாவலைப் போல விரிந்து கிடந்த அந்தக் கடிதங்கள்......தொல்லைகள் அடித்தாலும் சாகாத விசித்திரத் தேள்கள், கொட்டியவரையே கொட்டிய இடத்திலேயே திரும்பத் திரும்பக் கொட்டும் அதிசயச் சக்தி வாய்ந்தவை என்பதைச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன. அடிபட்டு வடுபட்டுப் போயிருந்த இடம் மீண்டும் காயமாக்கப்படுவதைக் கண்டாள் நர்மதா. கோர்ட்டிலிருந்து வீட்டுக்கு வந்ததும், வாசலிலேயே கோமளவல்லிக்கு 'வேதனை' காத்திருந்தது.

சிகப்பு சைக்கிலிலிருந்து இறங்கிய 'அவசர'த் தபால்காரன் தபாலைக் கொடுத்துவிட்டு பதிலுக்கு நர்மதாவின் முத்து முத்தான கையெழுத்தைப் பெற்றுக் கொண்டு போய் விட்டான், அந்தக் 'கவலையற்ற' தபால்காரனின் சிகப்பு சைக்கிளுக்கும் இதயமில்லையோ என்னவோ? தன்மகிழ்ச்சி முழக்கத்தை மணி ஒலியில் காட்டிக் கொண்டே ஓடிக் கொண்டிருந்தது. அந்தச் சின்னஞ்சிறு மணியோசை கேலிக் குரலாகி அவளின் வெள்ளை உள்ளத்தைக் குத்தியது. வீட்டுக்குள் அடி வைத்துக் கொண்டே சைகிளின் கிவப்பு வர்ணத்தை மட்டும் நெஞ்சிலே நிழலாட விட்டாள். ரத்த வர்ணம் திகிலைத் தந்தது. எந்தப் புயல் இன்னும் வீசப்போகிறதோ வென்று அஞ்சிக் கொண்டே கடிதத்தைப் படிக்கத் துவங்கினாள்.

அவள் அஞ்சிக் கிடந்ததோ புயல் வீசுமோ வென்று. ஆனால் நடந்ததோ அதுவல்ல.........வீசுமென்று எதிர்பார்த்தாள் புயல். வெடித்துக் குமுறியது எரிமலை. மீன், கரையிலே மட்டும் தூக்கிப் போடப் படவில்லை......கசாப்புக் கடைக்காரனின் கையிலேயே சிக்கிக் கொண்டது. சிறகிழந்த மணிப்புரு வல்லூரின் நிழலிலேயிருந்தது, படித்தாள்—படித்துக் கொண்டேயிருந்தாள். இப்போது கூட பத்தாவது தடவையாக அந்தக் கடிதத்தைப் படிக்கத் துவங்கினாள். காலத்தேவன் கடிதத்தைக் கத்தி முனையாக்கி விட்டானோ என்னவோ?

......அன்புள்ள நர்மதா!

ஆசைக் கோட்டைகளைக் கட்டும்போது யாருக்கும் தெரியாமலே ரகசியமாகத்தான் கட்டுகிறோம். ஆனால், ஆசையின் விளைவுகள் நடமாடத் துவங்குகிறபோதுதான் உண்மையின் படப்பிடிப்பை உணருகிறோம். இப்போது இடிந்த கோட்டைக்குள்ளேயிருக்கும் நான் அந்த நிலையை மிகமிக நன்றாக உணரத் துவங்கியிருக்கிறேன். காதலெனும் அஸ்திவாரத்திலே, பிரேமையெனும் தூணெழுப்பி அதன் துணையிலே 'வாழ்வு' மாளிகை எழுப்பி, அதை என் அன்புக் கோயிலாக்க ஆசை கொண்டிருந்தேன். அந்தக் கோயிலின் உச்சியிலே 'மகிழ்ச்சி'க் கலசத்தை அமைக்கவும் ஆவலாகிக் கிடந்தேன். நினைவுகள்தான் தித்தித்தன! காகித ரோஜா கூட பார்ப்பதற்கு அழகாகத்தானேயிருக்கிறது. காதலும், பிரேமையும் எங்கே?......அது என்னளவிலே இப்போது கடலிலே வீசி எறியப்பட்ட நாணயந்தான்! நான் எழுப்பிய அன்புக் கோயில் இடிந்து தூள்தூளாகி யிருக்கிறது. என் இன்பத் தேவன் அங்கேயில்லை. யாருக்குக் கோயில் கட்டினேனோ அவரில்லை. ஆமாம். நர்மதா — உனதருமைத் தம்பி தேவதாஸ் இப்போது என்னிடமில்லை. இந்த உலகை மறந்து இறப்புலகுக்குப் போய்விட்டாரோ என்று கலங்கிப் போய் விடாதே.

இந்த உலகம் அவரை இன்னும் இழந்துவிடவில்லை. 'நாடோடி'யாகிவிட்ட அவர் நாடெங்கும் சுற்றத்தான் செய்கிறார், அவரும்வாழ்கிறார் நானுந்தான் சாகடிக்கப்பட்ட என் ஆசைக்கு நெஞ்சிலே சமாதி கட்டிவிட்டு வாழ்கிறேன் ......இல்லை இல்லை வாடுகிறேன். நாணயத்திலே நல்லது கெட்டது பார்க்க கருவி யிருக்கிறதே அது போல ஏதாவது இருந்தால் மனிதர்களில் யாரார் நல்லவர் கெட்டவரென்று தெரிந்து கொள்ளளாமே. மாட மாளிகையிலே பிறந்து, கூட கோபுரங்களின் நிழலிலே அன்பாக ஆதரவாக வளர்க்கப் பட்டவள்தானே நான், என் பணத் திமிர் படாடோப மலை உச்சிக்கு என்னை விரட்டியடிக்கவில்லை. மனித நெஞ்சினளாகத் தான் வாழ்ந்தேன். தேவதாஸ் என் நிலைக்கும் 'சாதாரண'மானவர்தான் என்று தெரிந்தும்தான் அவர் பார்வைக்கு என் பார்வையை பதிலாகத் தூதனுப்பினேன். ஜாதி அரக்கன் கையிலே சவுக்கோடு நின்றான். பணவேலி வேறு தடுத்தது. சிக்கறுத்த சிங்கார வல்லிகளைக் கதையிலே படித்திருக்கிறேன். அதுவும் பெரும்பகுதி தேவதாஸ் தந்தனுப்பியதுதான். மலர் பரப்பிய மஞ்சம் இல்லாவிட்டால் போகிறது. மனதுக்குகந்த மணாளன் கிடைத்தால் எனக்குப் போதுமென்று எண்ணித்தான் தேவதாஸ் கைநீட்டிக் காட்டிய பாதையிலே கால் பதித்து நடக்கலானேன். என்னோடு நாமெடுத்துச் சென்றிருந்த பொன்னுரங்கள் ...... வறுமைப் பேயை விரட்டியடித்தன. அந்த முதலிரவு வாழ்வு தேயும் நிலாவாகிவிட்டது. தேய்ந்த நிலவே —தேன் சொட்டும் வாழ்வு தந்த பொன்நிலவே, முத்துச் சிரிப்பால் மோகமூட்டும் முழுநிலவாக வளர மாட்டாயா? என்று என் வாழ்வு வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும் நாட்களுக்குத் தான் கணக்கேது? குறிப்பேது? நர்மதா நான் வஞ்சிக்கப்பட்டேன் அவசரத்தில், இதய தாபத்தில் தேவதாஸின் முந்திய நடவடிக்கைகளைக் கவனிக்க தவறிப்போய் விட்டேன். இப்போது என்னதான் இரும்புத் தூணிலே மோதிக் கொண்டாலும் யாருக்கு பலன்?

வீட்டுக்குள்ளேயிருக்கும் நாய்க்கு வெறி பிடித்துவிட்டால் அது வீதி நாயை தேடிக்கொண்டு தெருத் தெருவாக அலைவதுபோல ...அவருக்கு நிலைமை ஏற்பட்டது. நான் கண்டித்த நேரங்களிலே கனலைக் கக்கினார். குளிர் ஓடையென்று வர்ணித்த என்னை குப்பைமேட்டிலே தள்ளிவிட்டு எங்கெங்கோ ஓடித் திரிகிறீர்களே. நல்ல வாழ்வு—புது வாழ்வு வாழலாமென்று அழைத்தீர்களே இதுதானா அந்தப் புதுப் பாதை?... என்று நான் சீறிக் கேட்கும்போதெல்லாம்: வற்றிப்போன மணல் ஆறே. நீ ஜீவநதிகளைப் பார்த்து பொருமைப் படாதே என்றுதான் பொன்மொழி தந்தார். எந்த ஜீவநதிகளைப் புகழ்ந்து கூறினாரோ அந்த நதிகளின் புது வெள்ளத்திலேயே இன்று பூரித்துக் கிடக்கிறார். புது வெள்ளம் அவரை என்னிடமிருந்து நிரந்தரமாக இப்போது பிரித்துவிட்டது. இனி எப்படி வாழ்வேன் என்பதுதான் எனது எதிர்காலப் பல்லவி! சோறு கண்டு, நிழல் கண்டு வாழ வாழ வழியுண்டு, என் இளம் நெஞ்சிலே கானமெழுப்பும் சொர்ண வாழ்வு எனக்கெங்கே? அதுதான் இல்லாவிட்டால் போகிறது. சிந்தை நொந்த நேரத்திலே சிரித்துப் பேச சிங்கார தங்கச் சிலையையாவது தந்திருக்கிறாரா? இல்லவே இல்லை, வீணை மீட்டப் பிரியமில்லாதவரிடமிருந்து நல்ல இசையை எதிர் பார்ப்பது எப்படி?

நான் வேங்கைக் காட்டுக்கு விரட்டியடிக்கப்பட்ட முயல். வாழ்வு இருந்தும் வாழ முடியாது வளாக்கப் பட்டிருக்கிறேன். பெண்களின் வாழ்வு நலம் ஒடிக்கப்படுவதற்கு பெரும் பகுதி அந்த இனத்தினரே—பெண்களே தான் ஆயுதமாகி யிருக்கிறார்கள். ஆதரவுள்ளவளை ஆதரவற்றவளாக்கி ஆதரவு தேடிக்கொள்கிறாள் ஆதரவற்றவள், இதுதான் இப்போது நடைமுறை இலக்கணமாகிவிட்டது, என் வாழ்வு இலக்கியமும் அந்த இலக்கணத்தை ஒட்டியேதான் அமைந்துவிட்டது, சொன்னால்தானே— என் விளக்கமும்—வேதனையும் உனக்குப் புரியும். சொல்கிறேன் நர்மதா. உன்னிடம்தானே சொல்லித் தீரவேண்டும். எனக்கு ஆதரவு தரக்கூடியவளும் நீயாகத் தானே இருக்கமுடியும்."

...கடிதத்தின் ஒரு பகுதி முடிந்தது. மறு பகுதியை படிப்பதற்கு முன்பு சிறிது நேரம் படுக்கையிலேயே சாய்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தாள். அந்த நடுநிசியிலே தெரு நாய்கள் கூட ஒலமிடவில்லை. இரவின் அமைதி நர்மதாவின் இதய வேதனையை அதிகமாக்கிக் கொண்டே யிருந்தது. மேசையிலே விரித்துக் கிடந்த கடிதம் துடிதுடித்து தன் படபடப்பை காட்டிக்கொண்டது. அந்த அவசர அழைப்பை ஏற்றுக் கொண்டவள் போல கையிலே கடிதத்தை எடுத்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள். வானத்திலிருந்த நட்சித்திர மொன்று கீழே அறுந்து விழுந்து கொண்டிருந்தது.

●

[அடுத்த வாரம் கடிதத்தின் மறுபகுதியைக் காணுங்கள்]

Regd. No. M 4870 …… திராவிடன் உள்நாடு 0—3—0 வெளிநாடு 0—3-

ஆந்திரத் தேர்தல்

அறிஞர் அண்ணா அவர்களின் அறிக்கை.

ஆந்திர மாநிலத்தில் தேர்தல் நடைபெற இருக்கிறது.

மொழிவழி அரசுக் கொள்கைப்படி தமிழருக்கு உரியதான பகுதிகள், டில்லி சர்க்காரின் போக்கினால் ஆந்திர மாநிலத்தில் இதுபோது இணைத்து வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த அநீதியைக் கண்டித்தும், தமிழரின் உரிமையை வலியுறுத்தியும் நமது கழகம் கருத்துரை வெளியிட்டதுடன் நில்லாமல் இயன்றளவு கிளர்ச்சியும் நடாத்திற்று.

தி. மு. கழகம், ஆந்திரர்—கேரளர்—கன்னடர் எனும் மும்மொழியினரையும் தமிழருடன் ஒன்றுபட வேண்டிய திராவிட இனத்தவர் என்ற கருத்துடனும், மொழிவழி தமிழகம் ஆந்திரம், கேரளம் கர்நாடகம் அமைந்து, பிறகு இனவழி அந்நான்கும் வடவர் ஆதிக்கத்தினின்றும் விலகி ஓர் கூட்டாட்சி அமைதல் வேண்டும்—அதுவே திராவிடநாடு எனும் இலட்சியம்—என்ற தீர்மானத்துடனும் பணியாற்றி வருகிறது.

எனவே ஆந்திரத் தோழர்களிடம் பகை உணர்ச்சி அறவே கூடாது என்று விளக்கமளித்து பூசல் எழாத வகையில் பிரச்னையைக் கவனிக்க வேண்டுமென்பதை வலியுறுத்தி வந்திருக்கிறது.

தமிழரின் நியாயமான உரிமையை பறித்துக் கொள்கின்றனர்—என்று ஆந்திரரிடம் ஆத்திரப்படுவதில் அர்த்தமில்லை.

ஓர் அக்கிரம ஏற்பாட்டை மத்திய சர்க்கார் செய்திருப்பதே இந்த 'தவளி'க்குக் காரணம் என்பதை எடுத்துக்காட்டி வருகிறது.

மொழிவழி அரசுத் திட்டத்தை ஆதரிப்போரில், திராவிடநாடு இலட்சியத்திலே நம்பிக்கையற்றவர்கள்—நையாண்டி செய்பவர்கள்—'வடவர் ஆதிக்கம், மத்திய சர்க்கார் பிடி என்பனவெல்லாம் பொருளற்றவை' என்று கூறிடும் போக்கினரும் உள்ளனர்.

மொழிவழி அரசுத் திட்டத்திலே நமக்குள்ள பற்று காரணமாக அந்தத் திட்டத்தை வலியுறுத்துவோர் அனைவருடனும் நாம் ஒத்துழைக்கிறோம்.

இப்போது நடைபெறும் தேர்தலில் தமிழர்கள் உரிமை கொண்டாடத்தக்க வட்டத்திலே, தமிழர்களின் சார்பில் நடைபெறும் வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு. நான்கு தொகுதிகளில் அபேட்சகர்களை நிறுத்தியிருக்கிறது.

இந்தத் தேர்தலில், தமிழர்கள் இந்த 4 தொகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டால், தமிழரின் உரிமைப் பிரச்னைக்குப் புதியதோர் வலிவு நிச்சயமாக ஏற்படும் என்று தி. மு. கழகம் உறுதியாக நம்புகிறது.

எனவே இந்தத் தேர்தலில், இந்தத் தொகுதிகளில் உள்ள தி. மு. கழகத்தினர் மொழிவழி அரசுத் திட்டத்தின்படி, தமிழ் அபேட்சகர்களையே ஆதரித்து வெற்றி தேடித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இது சம்பந்தமாக, சம்பந்தப்பட்ட ஆலோசனைக் கூட்டத்தில், வடாற்காடு மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் எ. எல். சி. கிருஷ்ணசாமி சித்தூர் தோழர்கள் கேசவன், முனுசாமி, பொதட்டூர் பேட்டைத் தோழர்கள் ராமசாமி, கணேசன். கோதண்டன் ஆகியோரின் கருத்தையும், பிறகு திருத்தணி தோழர் ரஷீத் அவர்களின் கருத்தையும் கேட்டறிந்தேன். அவர்களும் இந்தத் தேர்தலில் தமிழர்கள் "கட்சிப் பூசல்களை மறந்து ஒற்றுமைப்பட்டு வடவெல்லைப் பாதுகாப்புக்கமிட்டியார் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிக்கு ஆதரவு திரட்டித் தந்து தமிழர்களை வெற்றிபெறச் செய்து. அதன் மூலம் மொழிவழி அரசுக் கொள்கைக்கு வெற்றி கிடைத்திடச் செய்ய வேண்டும்" என்று எடுத்துக் கூறினர். அந்த கருத்துப்படியே ஆலோசனைக் கூட்டத்தில் தமிழ் அபேட்சகர்களை ஆதரித்து தி. மு. க. பணியாற்றுவது என்று முடிவு செய்யப்பட்டது.

பொதுவாக இந்தப் பகுதியில் மொழிவழி அரசுப் பிரச்சினைக்காகவும், சிறப்பாக இந்தத் தேர்தல் சம்மந்தமாகவும் ஆர்வத்துடன் பணியாற்றி வரும் தோழர் கே விநாயகம், எம். எல் ஏ., அவர்கள் இதுகுறித்து இருமுறை என்னைச் சந்தித்துப் பேசினர்.

தி. மு கழகத்தின் மீது கண்டனக் கணை ஏவியவர், தோழர் விநாயகம் என்பதை, மொழி வழிப் பிரச்சினை முன்னணியில் இருக்கும் இந்த நெருக்கடியான நேரத்தில் நினைவிற் கொள்வது, பெருந்தன்மையுமல்ல, அரசியல் யூகமுமாகாது என்று தீர்மானித்தேன். ஆலோசனைக் கூட்டத்திலும், நண்பர்கள் இதே கருத்தை வெளியிட்டனர்.

எனவே, சித்தூர், பொதட்டூர்பேட்டை, திருத்தணி, ஏகாம்பரகுப்பம், வேப்பஞ்சேரி, நகரி ஆகிய வட்டங்களில் உள்ள தி. மு. கழகக் கிளைகள், இந்தத்தேர்தலில், தமிழ் அபேட்சகர்களுக்கு ஆதரவு திரட்டித் தந்து வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழரின் உரிமை — மொழிவழி அரசு இவைதான் தி. மு. கழகத் தோழர்கள் வலியுறுத்த வேண்டியவை.

தி. மு. கழகத் தோழர்கள் எக்காரணம் கொண்டும் சொல்லாலோ, செயலாலோ ஆந்திரத் தோழர்களிடம் பகை உணர்ச்சி காட்டக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

நெருக்கடியான நேரத்தில், கொள்கைக்கு இழுக்கு ஏற்படாதபடியும், கழகத்தின் நற்பெயருக்குக் களங்கம் உண்டாகாதபடியும் தி. மு. கழகத் தோழர்கள் நடந்து கொண்டு, வெற்றிக்குப் பாடுபடுவார்கள் என்று நம்புகிறேன்.

அன்பன்

சி. என். அண்ணாதுரை,

பொதுச்செயலாளர், திராவிட முன்னேற்றக் கழகம்

சென்னை கவர்னர் உபதேசம் செய்கிறார்!

உயர். திரு. ஸ்ரீபிரகாசா அவர்கள்,
சென்னை

கவர்னர் அவர்களே வணக்கம். நலம் வேண்டுகிறேன் தங்களுக்கு மடல் வரைந்து நீண்ட நாட்களாகின்றன. தங்களின் அரசியல் கருத்துக்கும் யான் கொண்டுள்ள அரசியல் கொள்கைக்கும் சில வேறுபாடுகளிருப்பினும் தங்களிடம் எனக்கு மிகுந்த மதிப்பு உண்டு, காரணம் எந்தப் பிரச்னையாயினும் ஒளிவுமறைவு இன்றி வெளிப்படையாக பேசி விடுகிறீர்கள்.

தாங்கள் 6-2-55-ம் நாள் அனைத்திந்திய அர்ச்சகர்களின் மூன்றாவது மாநாட்டைத் திறந்துவைத்து ஆற்றிய சொற்பொழிவினைப் படித்தேன். இன்று தென்னாட்டில் உருவாகி வளர்ந்துவரும் உரிமைக் கிளர்ச்சியைப் பற்றிக் கூறியிருக்கிறீர்கள்.

"பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இப்போது போதிக்கப்படும் இந்திய சரித்திரம் என்பது, முழுக்க முழுக்க வட இந்தியாவில் நிகழ்ந்த சம்பவங்களையே கொண்டுள்ளது. தென்னாடு ஏறத்தாழ புறக்கணிக்கப்பட்டு விட்டது. இதன் விளைவாக இன்று தென்னாட்டின் மீது வடநாடு ஆதிக்கம் செலுத்துகிறது என்றும், எனவே தென்னாடு அதன் தொடர்பிலிருந்து விடுபட வேண்டும் என்ற எண்ணமும் தென்னிந்தியாவில் மிக வேகமாக வளர்ந்து வருகிறது" என்பதை வெளிப்படையாகக் கூற விரும்புகிறேன்"

'இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இந்தப் பரந்த நாட்டின் பலபாகங்களிலும் உள்ள எழுத்தாளர்களையும், பத்திரிகையாளரையும் நான் ஒன்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் தங்களுக்கிருக்கிற சந்தேகத்திற்கிடமில்லாத செல்வாக்கை, தென்னாட்டிலிருப்பவர்கள் கொண்டுள்ள வருந்தத்தக்க எண்ணங்களைப் போக்குகிற வகையில் பயன்படுத்த வேண்டும், இந்தியாவின் அடிப்படை ஒற்றுமையை சாலா காலத்துக்கும் நிலைநாட்ட வேண்டும்' என்றெல்லாம் தங்கள் சொற்பொழிவில் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

கவர்னர் அவர்களே, தாங்கள் சமயம் நேரும்போதெல்லாம் தென்னாட்டு மக்களின் மனக்குமுறலை இவ்விதம் எடுத்துக் காட்டிப் பேசிவருவதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். ஆனால் அந்த மனக்குமுறல் தீர்க்கப்பட வேண்டிய வழிவகைகளை மட்டும் மழுப்பிவிட்டு இங்கிருப்பவர்களுக்கு உபதேசம் செய்வதையும் கண்டு வருந்துகிறேன்,

தென்னாட்டு மக்கள் கொண்டுள்ள வருந்தத்தக்க எண்ணங்கள் எவை? தங்கள் நாடு—சமூக, அரசியல், பொருளாதாரத் துறையில் எந்த மாநிலத்துக்கும் அல்லது வேறெந்த நாட்டினருக்கும் அடிமைப்படாமல் சுதந்திரமுடன் வாழவேண்டுமென்பதுதான், இதற்குப் பெயர் வருந்தத்தக்க எண்ணங்களா? அதுபோலவே இந்த வருந்தத்தக்க எண்ணங்களை இந்த பரந்த நாட்டின் பல பாகங்களிலிருக்கும் பத்திரிகையாளர்களும் எழுத்தாளர்களும் எப்படி போக்க முடியும்? வடநாட்டிலுள்ள பத்திரிகையாளர்களில் நற்பண்புள்ளவர்கள் வடநாட்டு ஆதிக்கத்தால் தென்னாடு தேய்ந்துவரும் நிலைமைகளைச் சுட்டிக்காட்டி நேரு சர்க்காருக்கு அறிவுறுத்தலாம். ஆனால் அடிப்படையிலுள்ள குறைபாட்டினைப் போக்கும் அதிகாரம் வடநாட்டுப் பத்திரிகையாளரிடமும், எழுத்தாளரிடமுமா யிருக்கிறது?

எனவே உங்களது அகராதிப்படி தென்னாட்டினர் கொண்டுள்ள வருந்தக்கூடிய எண்ணங்களையோ அல்லது குறைபாடுகளையோ தீர்க்கப்படமுனைய வேண்டுபவர்கள், தென்னாட்டின் அரசியல் உரிமையை தங்கள் பிடிப்பிலே வைத்து அரசியல் சதிராடிவரும் நேரு சர்க்கார்தான். ஆகவே தாங்கள் அவர்களுக்கு உபதேசம் செய்து தென்னாட்டினரின் வருந்தத்தக்க எண்ணங்களைச் செயல் முறையில் தீர்க்க முற்படுவீர்களானால் உண்மையிலேயே உங்கள் நல்ல எண்ணத்திற்கும் பண்புக்கும் தென்னாடு என்றென்றும்கடமைப்பட்டதாகயிருக்கும்.

அதை விடுத்து ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத உபதேசங்களை அதுவும் எல்லாத் துறைகளிலும் அடிமைப்படுத்தப்பட்டுவரும் தென்னாட்டு மக்களிடமே செய்வது, வெந்தபுண்ணில் வேல் கொண்டு குத்துவதாகவே இருக்கிறது.

எனவே தென்னாட்டைப் பற்றியும் தென்னாட்டு மக்களைப் பற்றியும் உண்மையிலேயே தங்களுக்கு நல்ல எண்ணம் இருக்குமானால் (இருக்குமென்று பெரிதும் நம்புகிறேன்) அரசியல் உரிமைகளைக் குவித்து வைத்துக் கொண்டு கோணங்கித்தனத்தில் ஈடுபட்டுள்ள ஆதிக்கக்காரர்களுக்கு அறிவுறுத்தி ஆவன செய்ய வேண்டுகிறேன்.

அதற்குப் பின்னர்தான் தாங்கள் தங்கள் சொற்பொழிவில் குறிப்பிட்டிருக்கும் இந்தியாவின் அடிப்படை ஒற்றுமையும் உருவாகி நிலைக்க முடியும் என்பதைத் தங்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இந்நிலை ஏற்படாதவரை வடநாடு தென்னாடு ஒற்றுமையைப்பற்றிப் பேசுவது 'அரசியல் சர்க்கஸ்' காட்சிக்கும், அதுபோலவே தென்னாட்டின் சிறப்பை மட்டும் காதுக்கினிய பேசுவது தென்னாட்டு மக்களை மேலும் நாசுக்காகச் சுரண்டும் செப்படி வித்தைக்கும் ஒப்பாகும் என்பதை அறிய வேண்டுகிறேன். சிரமம் மன்னிக்கவும்.

அன்புள்ள

கூத்தரசன்

புகை பிடிப்போருக்கு மட்டுமே ஓர் நற்செய்தி!

10-2-55 முதல் திருச்சியிலிருந்து

உங்களை மகிழ்விக்க

TRADE MARK

திராவிட பீடிகள்

வெளிவருகின்றன.

விவரங்கட்கு:

திராவிட பீடி அலுவலகம்

தெப்பக்குளம் : : திருச்சி

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் என். வி. நடராசன், சோமு அச்சகம் 16. [illegible] ரைஸ் மில் தெரு, சென்னை-1.